அன்பே ஆண்டவன்

தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...'

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

மலர்	தாது௵ மார்கழி௴	இதழ்
7	1936௵ டிசம்பர்௴ 15௳	12

பொருள் அடக்கம்

ஆசிரியர் குறிப்புகள் ... 882
அரசர் திருமணம் ... 887
வரும் தேர்தலும் காங்கிரசின் போக்கும் ... 889
திருடனை ஏமாற்றிய திருடன்! 892
இதை ஒருவரிடமும் சொல்ல வேண்டாம் ... 894
இன்ஸ்பெக்ஷன் ... 895
'வாருங்கோ மாப்பிள்ளை!' ... 897
இல்லம் ... 902
தந்திரம் ... 905
நடிக்கக் கற்றுக்கொள்ளும் விதம் 909
கமலகாந்தா ... 914
'மனோ யாத்திரை' ... 921
கருதுவோர் மணமா? அல்லது காதல் மணமா? ... 924
கருத்தும் கல்வியும் ... 927
கமலாட்சி அல்லது காரிகையின் களங்கமற்ற காதல் ... 929
'மதியுள்ள மைனர்' ... 937
'மாபின் கொடுமை' ... 944
ஸ்ரீ கனககாந்தா அல்லது மனைவியை மணந்த மணகன் 950
தொழிலாளியின் துயரம் ... 956

குறிப்பு:—'தமிழரசி'ல் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவையாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாகமாட்டார்.



வாழி சேரநாடே !

கடந்த ஐற்பசித் திங்கள் இருபத்தெட்டாம் நாள், நம்பண்டைக் காவியங்களிலும் தேசசரித்திரங்களிலும் சேரநாடென்று புகழப்பட்ட மலையாள நாட்டிற்கு ஓர் நன்னாளாகும். அந்நாள் அந்நாட்டிற்கு மட்டுமன்றி ஏனைய நாட்டவர்க்கும், முக்கியமாய் சீர்திருத்த வாதிகட்கும் பொன்னேபோற் போற்றற்குரிய நன்னாளாகும். அன்று திருவிதாங்கூர் மகாராஜா தனது இருபத்தைந்தாம் பிறந்த நாளை கொண்டாடினார். அப்போது அவர் அந்நாட்டில் தீண்டப்படாதார், அண்டப்படாதார், பார்க்கப்படாதார் என ஒதுக்கி வைத்து நடத்தப்படுபவர்கட்கு எல்லாம், இனி சர்க்கார் ஆதிக்கத்திலிருக்கும் ஆலயங்களில்சென்று, கடவுளை வழிபட உரிமையுண்டு என ராஜகட்டளை ஒன்று பிறப்பிவித்துள்ளார். மலையாள நாடோ வைதிகத்தில் தலைசிறந்த நாடு. பிராமண ஆதிக்கம் மிகுந்தநாடு. ஒரு சமயம் மகாத்மாகாந்தி மலையாளத்திற்கு சென்றிருந்தபோது அவரைக்கூட, கன்னியாகுமரி ஆலய அதிகாரிகள், ஆலயத்திற்குள்செல்ல அநுமதிக்க மறுத்துவிட்டனரென்றால், அதிலிருந்து அந்நாடு எவ்வளவு தீவிரமான வைதீகநாடு என்பதை உணர்ந்து கொள்ளலாம். அப்படிப்பட்ட நாட்டில் இப்பொழுது தீண்டப்படாதார்களை, தாழ்ந்தவகுப்பார் என்பவர்களை ஆலயங்களில்சென்று அறனை வணங்க அநுமதிக்க முன்வந்திருப்பது பெரிதும் பாராட்டற்குரியதன்றோ? இதற்கு அத்தாழ்த்தப்பட்ட வகுப்பாரோ அல்லது சீர்திருத்தவாதிகளோ தகுந்த கைமாறேதும் செய்ய இயலாது. திருவிதாங்கூர் மகாராஜாவின் இந்த பெரிய சீர்திருத்தச் செயலை, ஜீவகாருண்ணியத்தையும் சகோதரத்துவத்தையும் அன்பையும் தன்னகத்தே கொண்டுள்ள இந்த அறச்செயலை, ஒப்பதோர் செய்கை வேறு உண்டோ ? எனவே இத்தகைய செயற்கரும் செய்கையைச் செய்த மஹாராஜாவுக்கு திருவாங்கூர் தாழ்ந்த வகுப்பார் நன்றிசெலுத்து முகமாக அவரின் உருவச்சிலை ஒன்று நாட்ட தீர்மானித்திருப்பது சாலவும் பொருத்தமுடையதேயாம்.

இந்த தாழ்ந்த வகுப்பாரை கோவில்களுக்குள் அநுமதித்து, அவர்கட்கு சமத்துவம் கொடுத்து சகோதரபான்மையுடன் நடத்தும் கேள்வி, அந்நாட்டில் மட்டுமன்றி, இந்தியா முழுவதுமே விவாதிக்கப்

பட்டு வந்தது, விவாதிக்கப்பட்டு வருகிறது. ஆனால் மற்றைய இடங்களைவிட அந்நாட்டில் இக்கேள்வி மிகக் கடுமையான தோன்றாய் விட்டது. தங்கட்கு இழைக்கப்படும் அநீதிகளை பொறுக்கலாற்றாது, தாழ்ந்த வகுப்பார் பலர் வேறுமதங்களை தழுவுவதாயினர். அதனால் இப்பொழுது அத்தேசத்து குடிகளில் மூன்றில் ஒரு பங்கினர் கிறிஸ்தவர்களாயிருக்கின்றனர். இந்த பங்கினரில் தீண்டப்படாதார் என்பவர்கள் அதிகம் என்றே கூறவேண்டும். இந்நிலைமையினால் தாழ்ந்த வகுப்பாரின் கேள்வி அங்கு மிகவும் முக்கியமான தோன்றாயிற்று. அதனால் அவர்களை ஆலயங்கட்குள் விடவேண்டும், அவர்களை சகோதரபான்மையுடன் நடத்தவேண்டும் என்ற கிளர்ச்சி உண்டாயிற்று. இத்துடன் ஹரிஜனங்கள் கதிமோட்சத்திற்கு மகாத்மாகாந்தி ஆரம்பித்த ஹரிஜன இயக்கம், அக்கிளர்ச்சிக்கு அதிக ஆதரவையும் பலத்தையுமளித்தது. எனவே திருவிதாங்கூர் தர்பார் இதுசம்பந்தமாய் பொதுமக்களின் கருத்தை ஆராய்ந்து அறிக்கைசெய்ய 1931-ம் ஆண்டில் அந்நாட்டின் மாஜி திவானான திவான்பகதூர் வி. எஸ். சுப்பிரமணிய ஐயர் தலைமையில் திருவாங்கூர் ஆலயப் பிரவேச விசாரணைக் கமிட்டி என்று ஓர் கமிட்டி நியமித்தது. அக்கமிட்டி 1932-ம் ஆண்டில் தனது அறிக்கையை சர்க்காருக்கு அனுப்பியது. அக்கமிட்டி அறிக்கையின் ஆதாரத்தின் பேரிற்றான், திருவிதாங்கூர் மகாராஜா சென்ற ஐற்பசித் திங்கள் இருபத்தெட்டாம் நாள் மேலேகூறிய ராஜகட்டளை பிறப்பிவித்துள்ளார். அக்கமிட்டி அறிக்கைசெய்த இரண்டாண்டுகட்குப்பிறகே, இந்த ராஜகட்டளை பிறந்திருப்பதிலிருந்து திருவிதாங்கூர் தர்பார் அவசரப்பட்டோ அல்லது எதேச்சாதிகாரமாகவோ இதை செய்துவிடவில்லை என்பது தெரியக்கிடக்கிறது. திருவிதாங்கூர் தர்பார் ஆற அமர யோசித்தே இதை செய்துள்ளது. திருவிதாங்கூர் மகாராஜாவின் செய்கை எல்லோருக்கும், எச்சாதியாருக்கும் சம்மதமானதே என்பதற்கு ஆங்காங்கு நடந்துள்ள வாழ்த்துக் கூட்டங்களும், மகாராஜாவுக்கு அனுப்பட்டிருக்கும் வாழ்த்துத் தந்திகளுமே போதிய சான்றாகும். ஏன்? ஒரு காலத்தில் தாழ்ந்த வகுப்பாரை உள்ளேவிடுவதற்காக சத்தியாக்கிரகம் செய்யப்பட்ட, திரு. ஈ. வே. ராமசாமி நாயக்கர் முன்னின்று சத்தியாக்கிரகம் நடத்திய, வைக்கம்கோவிலுக்குள்ளேயே, மஹாராஜாவின் கட்டளைக்குப் பின், ஆவர்ண இந்துக்கள் (தாழ்ந்த வகுப்பார்கள்) அநுமதிக்கப்பட்டு விட்டார்கள் என்றால், மகாராஜாவின் செய்கையை பொதுமக்கள் விரும்புகிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் என்னவேண்டும்? எனவே 'செயற்கரிய செய்வர் பெரியர்' என்ற பொய்யாமொழிப்படி இந்த பரோபகாரமான நற்காரியத்தை செய்த அம்மன்னன் வாழ்க! அவரின் இந் நற்காரியத்து உறுதுணையாயிருக்கும் சேரநன்னாடே வாழி!

அகில அமெரிக்க மகாநாடு

கார்த்திகை மாதம் 18-ந் தேதி (1—12—36) தென் அமெரிக்காவில், அகில அமெரிக்க நாடுகளின் மகாநாடு ஒன்று நடந்தது. அம்மகாநாட்டிலிருந்து ஏனைய உலகமும் முக்கியமாய் அகிலதேச சபை என கூறப்படுகிற கலைக்குதவாச் சங்கமும் ஒரு பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். அமெரிக்க (யுனைடட்ஸ்டேட்ஸ்) குடியரசுத் தலைவரான திரு. ரூஸ்வெல்ட் ஆட்சியில் அமெரிக்கா, ஐரோப்பியவிவகாரங்களிலும், அகில உலக அரசியல்விவகாரங்களிலும் கலந்து கொள்ளாது விலகியிருக்கும் கொள்கையை கைவிட்டு, அவைகளில் மெதுவாகத்தாராளமாய் கலந்து கொள்ளும் கொள்கையைக் கையாளும் என்று ஐரோப்பிய அரசியல் வாதிகள் நம்பினர். அதிலும் அவர் இரண்டாம் தடவை குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு நின்று இதுவரை எவரும் அடையாத பெரும் வெற்றியடைந்துள்ளார். இந்தப் பெரிய வெற்றியையும் அவர் அக்கொள்கையை கையாள அநுகூலப்படுத்திக் கொள்வாரென்றும் நம்பினர். ஆனல் அந் நம்பிக்கை இப்பொழுது ஏமாற்றமாய் முடிந்து விட்டது. அகில அமெரிக்க நாடுகளின் மகாநாட்டை அவர் திறந்துவைத்த போது பேசிய போக்கு, அவர் அக்கொள்கையை நிச்சயமாய் கையாளமாட்டார் என்று காட்டிவிட்டது. அமெரிக்கா நாடுகளுக்குள் ஒத்துழைப்பை உண்டுபண்ணி, அங்கு பரஸ்பர நட்புரிமை நிலவச் செய்யவேண்டும் என்பது தலைவர் திரு. ரூஸ்வெல்ட்டின் பேரவா. அதற்காக அவர் அரும்பாடுபட்டு வந்தார். அவரின் முயற்சியின் பயனகவே இம்மகாநாடு கூடியுள்ளது. அவர் கடந்த ஆகஸ்டு மாதம் பேசியபோது 'இம் மகாநாடு

ஹரிஜனங்கட்கு ஆலயப்பிரவேச உரிமை யளித்துள்ள திருவிதாங்கூர் மஹாராஜா.

இவ்வுலகப் பகுதியில் (அமெரிக்காவில்) யுத்தம் என்றும் தலைகாட்டாத படி ஒழியத்தக்க ஏற்பாடுகளைச் செய்யும் என்பதே அமெரிக்க நாடுகளின் எல்லாக் குடியரசுத் தலைவர்களின் நம்பிக்கை என்பது எனக்குத் தெரியும்' என்று கூறியுள்ளார். இப்பொழுது அம் மகாநாட்டைத் திறந்து வைத்தபோது யுத்த தளவாடங்களை போட்டி போட்டுக் கொண்டு பெருக்குவதையும் (நாட்டை) இராணுவ மயமாக்குவதையும் பலமாய் கண்டித்துள்ளார். மற்றும் தனக்கு இருப்பதாகக் கூறும் 'குறைகளை நிவர்த்திக்க யுத்தத்தி லிறங்குவது தற்கொலையை ஒக்கும்' என்றும் கூறியுள்ளார். இது மட்டுமல்ல, 'பகைமையாலும் யுத்த வெறியாலும் சீர்கேடுற்றிருக்கும் உலகின் ஏனைய பாகத்திற்கு அமெரிக்க குடியரசு நாடுகள் உதவி புரிந்து யுத்தம் என்னும் தீமை ஏற்படாதவாறு தடுக்கலாம். அமெரிக்க நாடுகள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளாது நடந்து காட்டி, அதன் வழி மற்றைய நாட்டினருக்கு உதவி செய்யலாம். மற்றும் யுத்தவெறியும் மண்ணாசையும் கொண்டு தங்களை எவரேனும் தாக்க எத்தனித்தால், அப்போது ஒருவருக்கொருவர் உற்ற துணையாய் நின்றும் ஏனையோருக்கு வழிகாட்டி உதவி செய்யலாம்' என்றும் கூறியுள்ளார். எனவே, இம்மகாநாடும், இம் மகாநாட்டில் அவர் பேசியிருக்கும் போக்கும், அவர் ஐரோப்பிய விவகாரங்களில் அமெரிக்காவை கலந்து கொள்ள விடமாட்டார் என்று தெரிகிறது. ஏனைய நாட்டினருக்கு இது ஒரு வழிகாட்டியாய் இருப்பதுடன், அவர்கட்கு அறிவுச்சுடர் கொளுத்துவதாகவு மிருக்கிறது. இம்மகாநாட்டை கூட்டியதே அவருக்கு அகிலதேச சபையினிடம் மதிப்பில்லை, அதில் அவருக்கு நம்பிக்கையில்லை என்று தெரிகிறது. எனவே அகில தேசசபை தனக்கு ஏதாவது கௌரவம் நன்மதிப்பு வேண்டுமானால் 'வெட்டு ஒன்று துண்டிரண்டு' என்பதுபோல் காரியம் செய்ய வேண்டும். இல்லையேல் அதன் வாழ்வு மானங்கெட்ட வாழ்வாகவே இருக்கும். அமெரிக்க நாடுகளின் இச்செய்கையிலிருந்தாவது அதற்கு புத்தி வருமா?

தென்னாட்டு வீரர் மறைவு

தென்னாட்டு வீரஞ் செறிந்த தேசாபிமானியான திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் தமது 65 ம் வயதில் கார்த்திகை மாதம் 4 ந் தேதி (18—11—36) இம்மண்ணுலகைவிட்டு விண்ணுலகேகினார். தென்னாட்டில் ஆதியில் சுதேசி இயக்கத்திற்கு அடி கோலியவர் அவரே. கர்ஸன் பிரபு வைஸ்ராயாக விருந்தபோது வங்காளத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு எதிரிடையாக நடந்த கிளர்ச்சியில் மிக ஊக்கத்துடன் கலந்து பாடுபட்டார். எல்லாவற்றையும்விட அவர் இந்தியாவிற்கு செய்த அரிய பெருந்தொண்டு அவர் சுதேசி கப்பற் போக்குவரத்து கம்பெனி (Swadeshi Navigation

Company) ஏற்படுத்தியதே. இக்கம்பெனியை ஏற்படுத்தியதற்காக அவர் அநுபவித்த துன்பங்கள் பல. 1908 ம் ஆண்டில் அவருக்கு நாற்பதாண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் அப்பீலில் அது ஆறுண்டுகளாகக் குறைக்கப்பட்டது. அக்காலத்தில் சிறை வாசம், இக்காலத்து சிறைவாசம் போன்றதல்ல. அப்படிப்பட்ட காலத்தில் அவர் பெருந் தியாகங்கள் செய்து தேசத் தொண்டாற்றினர். அவர் சிறந்த வக்கீலாய் விளங்கியதுடன், தமிழ்ப் பாண்டியத்தியமும் பெற்றிருந்தார். அவர் திருக்குறளுக்கு விரிவுரை எழுதியுள்ளார். சிறையிலிருக்கும்போது பெரிய ஐரோப்பிய நூலாசிரியர்களின் நூல்களை தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இப்படிப்பட்ட ஒரு சிறந்த தேச பக்தரையும், தமிழ் எழுத்தாளரையும் இழந்தது தமிழ் நாட்டின் தவக்குறைவே. அவரின் ஆன்மா அமைதி பெறுக!

சந்தா நேயர்கட்கு

நமது 'தமிழரசுக்கு' இம்மாதத்துடன் ஏழாண்டுகள் பூர்த்தியாகி எட்டாவது வயது ஆரம்பமாகிறது. நமது 'அரசு' எப்பொழுதும் போலவே இவ்வயதிலும் உலவிவரும். இதுவரை 'அரசை' ஆதரித்து வந்த நண்பர்களும் எப்போதும் போலவே, அதை ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை திண்ணமாக யுடையோம். எனவே அரசை ஆதரிப்பவர்களெல்லாம் அடுத்த ஆண்டிற்கும் முன்னதாகப் பணம் அனுப்பி தங்கள் பெயரை பதிவுசெய்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

இந்தியாவுக்கு சுப்பிரீம் கோர்ட்

அடுத்த ஆண்டில் ஆட்சிக்குவரும் சீர்திருத்தப்படி இந்தியாவில் சுப்பிரீம் கோர்ட் ஒன்று ஏற்படுத்த வேண்டும். அதை 1937 அக்டோபர் முதல் தேதி ஸ்தாபிக்க தீர்மானிக்கப்பட்டுவிட்டது. தற்சமயம் ஒரு பிரதம நீதிபதியும், இரண்டு உதவி நீதிபதிகளும் நியமிக்கப்படுவர். பிரதம நீதிபதிக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 7000 சம்பளம். உதவி நீதிபதிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 5500 சம்பளம். சர். மாரிஸ்கையர் என்பவர் பிரதம நீதிபதியாய் நியமிக்கப்பட்டுவிட்டார். உதவி நீதிபதிகள் இன்னும் நியமிக்கப்படவில்லை.

காங்கிரஸ் தலைவர்

27—12—36-ல் பெயிஸ்பூரில் கூடும் அகில இந்திய காங்கிரசுக்கு, மீண்டும் பண்டித ஜவஹர்லால்நேருவே தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். தமிழ்நாடு மாகாண காங்கிரஸ் தலைவராய் திரு. சி. என். முத்துரங்க முதலியார் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

அரசர் திருமணம்

சிக்கலான நிலைமை

நமது அரசர் எட்டாம் எட்வர்டு அரசர் பதவியை ஏற்றது முதல், அவர் விவாக சம்பந்தமாக பலவித மான வதந்திகள் உலாவி வருவதாயின. அவர் ஒரு சாதாரண குடும்பப் பெண்ணை காதலிக்கிறார் என்றும், அதனாலேயே அவர் வேறு விவாகஞ்செய்து கொள்ளு வதைப்பற்றிக் கவலையில்லாதிருக்கிறார் என்றும் கூறப் பட்டது. மற்றும் இங்கிலாந்திலேயே ஐந்து கட்டழகிகளிருப்பதாயும், அவர்களில் ஒருத்தியை அவர் மணந்து கொள்ளுவாரென்றும் கூறப் பட்டது. டென்மார்க்தேச ராஜகுடும்பத்திலே பேரழகு வாய்ந்த இரு பத்தொரு வயது நிரம்பப்பெற்ற அலெக்ஸாண்டிரினி என்னும் பெயருடைய ராஜகுமாரி ஒருத்தியிருப்பதாகவும், அவளையே அரசர் மணந்துகொள்ளுவார் என்றும் கூறப்பட்டது. இப்படியாக பற்பல வதந்திகள் வெளிவந்து கொண்டிருந்தன. ஆனால் கடைசியில் எல்லாம் பொய்யாய்போய் நாம் முதலில் குறிப்பிட்ட, அவர் சாதாரண குடும் பத்துப் பெண்ணொருத்தியை காதலிக்கிறார் என்பதே உண்மையாக முடிந்துவிட்டது. அம்மாதியின் பெயர் மிஸஸ். எர்னஸ்டு சிம்சன் என்பது. அவள் அமெரிக்கா தேசத்தினள். அம்மாது இரு முறை விவாகம் செய்து விவாக பந்தரத்து செய்துகொண் டவர். இரண்டு மாதங்கட்கு முன்பு மன்னர்பிரான் உடல் நலத்தை முன்னிட்டு மத்தியத்திரைக்கடலில் பிரயாணம் செய்த போது அம்மாதும் அவருடன் சென்று, அவரது நலத்தைப் பேணி வந்தார். எட்டாம் எட்வர்ட் அரசர் பதவியை ஏற்றகாலம் முதற் கொண்டே இந்தச் செய்தியை அமெரிக்கப் பத்திரிகைகள் வெளி யிட்டுவந்தன. ஆனால் இதை எங்கும் எட்டாதபடி தடுத்துவந்த துடன், பிரிட்டிஷ் பத்திரிகைகளும் இதை வெளியிடாதிருந்தன. இப்பொழுது அவைகள் இதை வெளியிடும்படியான நிர்பந்த நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஏனென்றால் அரசரே முதன் மந்திரியிடம் தாம் அம்மாதை மணஞ்செய்ய விரும்புவதாகவும், இது சாத்தியமாகும் படி புதிதாய் பிரத்தியேக சட்டம் ஏதாவது செய்ய வழிபார்க்கும் படியும் கூறினார். எனவே இச்செய்தியை இனிமேலும் மறைத்து

வைக்கமுடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. முதல் மந்திரியோ அவ்விதமான சட்டம் இயற்ற இயலாது என்று கூறிவிட்டார். மற்றும் பாராளுமன்றமோ அல்லது அந்நாட்டினரோ ஒரு சாதாரண குடும்பத்துப்பெண் ராணியாக வருவதை விரும்பவில்லை. வேண்டுமானல் அரசர் அவளை மணஞ்செய்து கொள்ளட்டும், ஆனல் அவளுக்கு ராணி என்ற மகுடாபிஷேகம் செய்ய முடியாததென்று கூறுகின்றனர். இதுகூட முடியாத காரியம் என்று பிரதம மந்திரி திரு பால்டுவின் கூறுகிறார். ஏனென்றல் அரசர் இப்படிப்பட்ட விவாகம்செய்ய, ராஜாங்கமுறை வழக்கத்தில் இடமேகிடையாது என்கிறார். எனவே இப்பொழுது அரசர் அவளையே மணந்துகொள்ள விரும்பினல் அரசர் பதவியை துறந்துவிடவேண்டும், அரசர் பதவியை துறக்க விரும்பவில்லையானல் அவளை விட்டுவிட வேண்டும் என்ற சிக்கலான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்நாட்டினர் எவரும் அரசர், அரசர் பதவியைதுறப்பதையும் விரும்பவில்லை. அவர் எல்லோராலும் விரும்பப் படுகிறார். நம் மகாத்மா 'தரித்திர நாராயணன்' என்று அடிக்கடி கூறும் ஏழைகள்பால் அவருக்குள்ள அன்பையும்கனிவையும் உலகமறியும். இப்படிப்பட்ட அரசரை இழக்க அந்நாட்டினரும் விரும்பவில்லை. அரசர் தனது பதவியை துறக்கத் தீர்மானித்தால் இங்கிலாந்தில் ஒரு அரசியல் நெருக்கடி ஏற்பட்டுவிடும். ஈசனருளால் இவ்விதமான அரசியல் நெருக்கடி ஏற்படாது என்று நம்புகிறோம். இப்பொழுது மிஸஸ். சிம்சனே தாம் அரசரை மணஞ்செய்துகொள்ளும் விருப்பத்தை விட்டுவிடத் தயாராக விருப்பதாய் கூறியுள்ளார். எனவே அவரது செயல் அந்தவிதமான அரசியல் நெருக்கடி ஏற்படாதபடி தடுப்பதற்கு ஏற்ற உதவியாயிருக்குமென நம்புகிறோம்.

அரசர் மணஞ் செய்துகொள்ள விரும்பும் மிஸஸ். எர்னஸ்டுசிம்சன்

வரும் தேர்தலும் காங்கிரசின் போக்கும்

மதருஸ் லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி தேர்தல் நடைபெறப் போவதை முன்னிட்டு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் தீவிரமாய் வேலைசெய்து வருவதை பாராட்டுகிறோம். ஆனால் சில ஜில்லாக் களில் காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமான வர்களையும், பதவி மோகத்தால் பட்டத்தை விட்டு விடுபவர்களையும், எதிரிகளோடு சேர்ந்து காங்கிரசை தோற்கடிக்கச் செய்தவர்களையும், தேர்தலில் காங்கிரசின் பேரால் நிற்க வைப்பதாய் தெரிகின்றது. அவற்றின் விபரத்தை சிறிது விளக்குவோமாக.

தமிழ்நாடு சென்ற டில்லி சட்டசபைக்குத் தேர்தல் நடந்த காலத் தில், இப்பொழுது காங்கிரஸ் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டிருக் கும் திருவாளர் முத்துரங்க முதலியார் அவர்களுடன் போட்டி போட்டு கண்டபடி காங்கிரசை வைதவரை, 4 அணு கொடுத்த கார ணத்தால், இன்று அவரை சட்டசபை தேர்தலுக்கு நிற்க வைப்பது நியாயம் என்று தலைவர்கள் கூறினால், மக்களும் முட்டாள்தனமாய் காங்கிரஸ் பேரைச் சொல்லி நிற்கப்பட்டவர்களை (பார்லிமெண்டரி போர்டு என்று கூறிக்கொண்டு ஒருவரே எதேச்சாதிகாரமாய் நடத்தி வரும் தலைவர்) ஆதரித்து ஓட்டு கொடுக்கவேண்டும் என்பது சரியா?

கோயமுத்தூர், கடலூர் ஜில்லாக்களில் சட்டசபை மெம்பர் பதவிக்காக அரசாங்கப் பட்டத்தை ராஜிநாமா செய்துவிட்டு காங் கிரசில் சேர்ந்த காரணத்தால் சட்டத்திற்கு விரோதமாய் (குறைந்த பட்சம் 6 மாதம் மெம்பராய் இருந்த பிறகு தேர்தலில் கலந்துக் கொள்ள வேண்டும்) மெம்பராய் சேர்ந்த உடனேயே தேர்தலுக்கு நிற்கச் சொல்லும், சட்டத்தை அலட்சியம் செய்யும், தலைவர் வார்த் தைக்குக் கட்டுப்பட்டு மக்கள் ஓட்டு செய்யவேண்டும் என்பதை நியாயமானது பாரபட்சமற்றது என்று சொல்ல முடியுமா?

சென்னை கார்ப்பரேஷன் தேர்தல் காலத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் போட்டி போட்டு ஜெயித்த ஒருவரிடம் காங்கிரஸ் தலைவர் கள் சென்று, தாங்கள் 4 அணுகூட கொடுக்க வேண்டாம், கதர் உடைகூட தரிக்க வேண்டாம், உங்கள் பேரைக் கொடுத்தால்

போதும், காங்கிரசின் பேரால் உங்களை மேல் சட்டசபைத் தொகுதிக்கு போட்டு விடுகிறேம் என்று சொல்லி அவரை பலாத்காரமாய் கட்சியில் சேர்த்து ஆசை காட்டி தேர்தலுக்கு நிற்க வைத்து ஜெயித்தால், சமயம் வந்தபோது இத்தகைய அன்பர் ராஜிஞமா செய்து விடுவார் என்ற எண்ணம் இல்லாவிட்டாலும், தேர்தலில் கட்சி ஜெயிப்பது போதும் என்று தலைவர்கள் நினைப்பார்களானல், பொதுமக்கள் தலைவர் வார்த்தைக்குக் கட்டுபட்டு ஓட்டு கொடுக்க வேண்டும் என்பது நியாயம் எனக் கூறுவீர்களா?

பூரண சுயராச்சியம் வாங்கித் தருவதாய் சொல்லும் உங்கள் வார்த்தைகளை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கும் வாக்காளர்களாகிய நாங்கள், சந்தேகப்படாமலிருக்க பம்பாயில் நடக்கும், நடந்த —இந்து முஸ்லீம் கலகம் காரணமாய் மாண்டவர்களைப் பார்த்தாவது பூரண சுயராச்சியம் கிடைத்தால் இந்து முஸ்லீம் பிரச்சினையை எப்படி தீர்ப்பது என்பதை திட்டம் வகுத்துக் காட்டவேண்டாமா? ஒற்றுமையால் பூரண சுயராச்சியம் பெறலாம் என்ருலும், ஒற்றுமைக்கு மார்க்கம் கூறினீர்களா? பம்பாய் கலகத்தைப் பொருட்படுத்தாத நீங்கள், சமாதானம் செய்ய முயற்சிக்காத நீங்கள், ராஜ்ஜியத்தை எப்படி நடத்த திட்டம் போட்டிருக்கிறீகள் என்பதை விளக்கிக் கூறவேண்டாமா? பூரண சுயராச்சியம் இந்துக்களுக்கா அல்லது முஸ்லீம்களுக்கா? ஒத்து வாழலாம் என்ற நோக்கம் இருந்தால் முஸ்லீம்களுக்குத் தனித்தொகுதி எதற்கு என்ற கேள்வி உண்டாகாதா?

5—12—36ல் ஜனநாயகம் என்ற தினசரியில் 'காங்கிரஸ் மண்டபத்தில் தியாகராய பிள்ளைக்கும் விநயக முதலியாருக்கும் நடந்த எலக்ஷனில் ஒருவருக்கொருவர் கைகலந்து விட்டதால் பாலட் பெட்டி அப்புறப் படுத்தப்பட்டது. ஒரு தலைவருக்கு ஏதோ ஒன்ருல் அடிப்பட்டது. பிறகு போலீசார் வந்து எல்லாரையும் வெளிப்படுத்தினர்' என வெளி வந்துள்ளதை நோக்க, நாளை கைப் பற்றப் போவதாய்ச் சொல்லும் சட்ட சபையில் கலகம் செய்வீர்களானல் அங்கு யார் உங்களை வெளிப்படுத்த வேண்டும் என்பதை முன்ஞடியே கூற வேண்டாமா?

பூரண சுயராச்சியம் கிடைத்துவிட்டால், சொந்தச் சண்டையை போலீசாரைக்கொண்டு சரி செய்துவிட்டாலும், இந்து முஸ்லீம் சண்டை உண்டானல் பீரங்கிகளைக்கொண்டு சமாதானம் செய்ய வேண்டுமே? அதுசமயம் யாருடைய தயவைக் கோருவது? ஜப்பானையா? ரஷியாவையா? அமெரிக்காவையா? ஜெர்மனியையா? இங்கிலீஷ்காரரையா? பம்பாயில் யார் தயவு கோரப்படுகிறது?

வேலூர் ஜில்லா போர்டுக்கு தேர்தல் நடந்தபோது முதலிலே சிவிக்போர்டு மெம்பராய் இருந்து வாலாஜா பிர்க்காவில்

தேர்தலுக்கு நிற்க வைத்து பிரசாரம் நடக்கும் சமயம், அவருக்கு ஓட்டுகொடுக்க வேண்டாம், சிவிக்போர்டு அவரை ஆதரிக்கவில்லை என்று எல்லா தினசரி பத்திரிக்ககளிலும் வெளியிட்டு அதற்கு அவர்மறுப்பு எழுதி கடைசியில் தோல்வியுற்று பிறகு எல்லா காங்கிரஸ் மெம்பர்களையும் வஞ்சித்து விரோதமாய் சில மெம்பர்களை ஹக்கீம் அவர்களிடம் சேர்பித்து காங்கிரசுக்கு பெருந்தோல்வியை உண்டு பண்ணி, அதன்காரணமாய் எல்லாக் காங்கிரஸ் அங்கத்தினர்களும் ராஜினாமாச்செய்ய நேர்ந்து, மறுதேர்தல் நடந்தபோது காங்கிரசுக்கு விரோதமான முறையில் வேலைசெய்து தேர்தலில் வெற்றிபெற்ற திருவாளர் வெங்கட்ரங்கம் நாயுடு அவர்களிடம் மன்னிப்பு வாங்கிக் கொண்டு, அவரை ராணிப்பேட்டை டிவிஷனில் சட்டசபை அங்கத்தினர் பதவிக்கு நிற்கவைக்க தலைவர் ஏற்பாடு செய்வாரேயானால் இது ஒழுங்கானமுறை என்று நீங்கள் கருதுகிறீர்களா? ஒரு சமயம் தங்கள் சுற்றத்தார் என்று கனம் சத்தியமூர்த்தி ஐயர் நினைத்து அல்லது தங்கள் சுற்றத்தாராகிய இனத்தாராகிய, கனம் B. T. சேஷாத்திரி ஐயங்காருடன் அவர் போட்டி போடுவார், ஆதலால் அவரை மெள்ள சமாதானஞ்செய்து ராணிபேட்டைக்குத் தள்ளி விடலாம் எனக் கருதினால், தன்னலங்கருதியதாகும் என்பதை ஓட்டர்கள் கவனிக்க வேண்டாமா? வேலூர் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி ஏகமனதாய் அவரை நிராகரித்து தீர்மானம் அனுப்பிய பிறகும் அதை பொருட்படுத்தாமல் கேட்கப்பட்டவர்களிடம் ராமர் விபீஷ்ணருக்கு அபயம் கொடுக்கவில்லையா? நாம் ஏன் அதை பின் பற்றலாகாது? என்று சொன்னானால், விபீஷ்ணர் ராமருக்கு துரோகம் செய்யவில்லை, துரோகியும் அல்ல என்ற காரணத்தால், உதாரணத்தை நிராகரிக்க இயலவில்லையானால் இவர்களை என்னென்று கூறுவது?

எனவே திரு. சத்தியமூர்த்திதான் சாமார்த்தியசாலி என்பதையும், வாக்காளர்களை ஏமாற்றுவதில் மாத்திரம் அன்று முத்துரங்க முதலியாரைப் போலொத்த ஆசாமிகளை ஏமாற்றுவதிலும் கைதேர்ந்தவர் என்பதையும் 7-12-36 ல் வேலூரில் நடந்த தேர்தலில் காட்டிவிட்டார். முத்துரங்க முதலியார் தேர்தலில் வெற்றிபெற்றார் என்பதை அறிந்தவுடன் தலைவர் பதவியில் உள்ள உயிர் நாடியாகிய பார்லிமெண்டரி தலைவர் பதவியை எனக்குக் கொடுத்துவிடும் என்று பல்லைக்காட்டியவுடன் அப்படியே கொடுத்து விட்டேன் என்றால், இத்தகைய அறிவு படைத்த மக்களை சத்தியமூர்த்தி ஆட்டிவைப்பதில் தன்னை அறிவாளி என்று சொல்லிக் கொள்வதில் நியாயம் உண்டு என்பதை மறுக்கமுடியுமா? இத்தகைய நிலைமையிலுள்ள பிராமணரல்லாதார் சுதந்திர அறிவை எப்படிப் பெறமுடியும்?

திருடனை ஏமாற்றிய திருடன்

[செல்லப்பா]

புளியம்பட்டி என்ற ஊரில் வீராசாமி என்றொரு பக்காத் திருடனிருந்தான். அவன் பல திருட்டுக்களைச் செய்தும், அவனைத் தண்டிக்க எவராலும் முடியவில்லை. ஆகையால் அவன் அதிக கர்வங்கொண்டிருந்தான்.

ஒருநாள் பக்கத்தூரிலிருந்து, முனியப்பன் என்றொரு திருடன் புளியம்பட்டிக்கு வந்தான். அவன் ஜனங்களின் மூலமாய் வீராசாமியைப்பற்றிக் கேள்வியுற்றான். உடனே அவன் வீராசாமியை ஏமாற்ற நினைத்து அவனுக்கு ஒரு கடிதம் எழுதினான்.

வீராசாமி எங்கேயோ அலைந்துவிட்டு வெகு பாபரப்பாய் வீட்டிற்கு வந்தான். அப்பொழுது ஒரு சிறுவன் அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றான். வீராசாமி அதைப் பிரித்துப் படிக்கலானான். அது பின் வருமாறு:—

திருட்டண்ணனே !

நான் பக்கத்தூரிலிருந்து வந்திருக்கிறேன். நானும் உன்னைப் போலொரு திருடன். திருடுவதில் நான் சமர்த்தனா, அல்லது நீ சமர்த்தனா என்றறிய ஆவலாயிருக்கிறேன். ஆகையால் இன்று இராத்திரி உன்னுடைய வெள்ளிப் பேலாவைத் திருடப் போகிறேன். பத்திரமாயிரு.

இப்படிக்கு,

முனியப்பன்.

இதைப் பார்த்ததும் 'விட்டேனா பார்' என்று உறுமினான் வீராசாமி. 'நசுக்குகிறேன் பார் அவனை' என்று மார் தட்டினான்.

இருட்டு வந்தது. வீராசாமி பேலாவைத் தன்னிடமே பத்திரமாய் வைத்துக் கொண்டான். மணியும் 7..........9.......11...........1 ஆயிற்று. திருடன் வருகிறதாகக் காணோம். வீராசாமியும் நித்திரா தேவிக்குக் கொஞ்சம் அடிமையானான். அவன் தூங்குவதற்கு முன்,

பேலாவை ஜலத்தால் நிரப்பி தன் மார்பின்மேல் வைத்துக் கொண்டான்.

'முனியப்பன் திருட வந்தால் வெள்ளிப் பேலாவைத் தேடு வான். அப்பொழுது என் மார்பின்மேல் இருக்கும் பேலாவை யெடுத்தால் அதிலிருக்கும் ஜலம் என்மேல் கொட்டும். அப்பொழுது நான் விழித்துக்கொண்டு அவனை கையப்புடைப்பேன்' என்று வீராசாமி தீர்மானம் செய்துகொண்டான்.

மணி 2 ஆயிற்று. வீராசாமி நன்றாகத் தூங்கிவிட்டான். முனி யப்பன் கன்னம்வைத்து வீட்டிற்குள் வந்தான். அங்கே வீரா சாமியையும், ஜலம் நிரம்பிய கிண்ணத்தையும் பார்த்தான். வீராசாமி யின் சூழ்ச்சியை அறிந்துகொண்டான். உடனே தன்னைச் சுற்றிலும் பார்த்தான். அங்கே, 'வெல்கம்' (Wel Come) என்று கண்ணாடிக் குழல்களால் கோர்க்கப்பட்ட தோரணமிருந்தது. முனியப்பன் ஒரு குழாயைப் பிடுங்கி அதன் வழியாகப் பேலாவிலிருந்த ஜலமெல்லாவற் றையும் உறிஞ்சிவிட்டான். பிறகு அவன் வெள்ளிப் பேலாவை எடுத் துக்கொண்டு, ஒரு சட்டியை வீராசாமியின் மார்பின்மேல் வைத்து விட்டுப் போய்விட்டான்.

மறுநாட் காலை பொழுது புலர்ந்தது. வீராசாமி தன் மார்பின் மேல் பேலாவுக்குப் பதிலாக சட்டியிருப்பதைப் பார்த்தான். அவன் தன் கண்களையே நம்பவில்லை. சட்டியினுள் ஒரு கடிதம் இருந்தது. அதில் எழுதியிருந்ததாவது,

அண்ணே!

உன்னுடைய பேலா என்னிடமிருக்கிறது. என் மனமார்ந்த வந்தனத்தை உனக்குத் தெரிவிக்கிறேன். துக்கம் கொள்ளாதே.

இப்படிக்கு,
முனியப்பன்.

இப்பொழுது வீராசாமியின் மனம் என்ன நிலையிலிருக்கிற தென்று உங்களுக்குத் தெரியுமல்லவா?

டாக்டர்:—நான் சொன்னபடி ஜன்னல் கதவுகளை எல்லாம் திறந்து வைத்துக்கொண்டு தூங்கினீரா?

நோயாளி:—செய்தேன்.

டாக்டர்:—நல்லது; தலைவலியும் மூக்கடைப்பும் போய்விட்ட தல்லவா?

நோயாளி:—இல்லை. என் சட்டைப்பையில் இருந்த கடிகாரமும் பவுண்டன்பேனாவும்தான் போய்விட்டன. —கே. ஆர். ராஜம்.

'இதை ஒருவரிடமும் சொல்ல வேண்டாம்'

[பா. பாலசுப்பிரமணியம்]

இரவு சுமார் 12-மணி இருக்கும். எங்கும் ஒரே காரிருள். தெருவில் ஜனநடமாட்டம் கூட இல்லை. நானும் என் நண்பன் கோபுவும் சினிமா இரண்டாவது காட்சிக்குச் சென்றுவிட்டு வீடுதிரும்பிக் கொண்டிருந்தோம். சினிமா காட்சிச்சாலைக்கும் எங்கள் வீட்டிற்கும் ஒரு மைல் தூரமிருக்கும்.

வரும்வழியில் என் நண்பன் கோபு தனக்கு மிகவும் தாகமாக இருப்பதாகவும், உடனே தண்ணீர் அருந்த வேண்டுமென்றும் சொன்னான். எனக்கும் அதிக தாகமாகவே இருந்தது. இருந்தாலும் என்ன செய்வது? நடுநிசி. தெரிந்தவர்கள் ஒருவரும் கிடையாது. ஆனால், சற்று தூரத்தில் எங்கள் ஆபீஸ் மானேஜர் கங்காதரம் பிள்ளையின் பங்களாவும், அதைச்சுற்றி ஒரு தோட்டமும், அதில் ஒரு கிணறும், இருப்பது எனக்குத் தெரியும். கங்காதரம் பிள்ளை வீட்டில் எல்லோரும் படுத்துத் தூங்கிவிட்டதால் ஒருவருக்கும் தொந்திரவில்லாமல் கிணற்றுக்குப்போய் தண்ணீர் குடிக்கலாமென்று தோன்றிற்று.

இருவரும் கிணற்றை யடைந்தோம். அருகில் ஒரு தாம்புக் கயிறும் வாளியும் கிடந்தது. வாளியைக் கயிற்றில் முடிந்து கிணற்றினுள் விட்டேன். வாளி தண்ணீரை முகந்துகொண்டது. பிறகு வெளியே இழுக்கவும் வாளியில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இல்லாமல் காலியாக இருந்தது. கோபுவும் அநேகந்தடவை முயன்று பார்த்தும் ஒன்றும் பயன்படவில்லை. எங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. கோபு 'இது இத்தோட்டத்தில் உலாவும் ஆவியின் வேலைதான் என்றும், அது இப்படி நம்மை ஏமாற்றிப் பிறகு வந்து ஒரே அறையாக அறைந்துவிடும்' என்றும் சொன்னான். இதைச் சொல்லும்பொழுதே அவன் கைகால்கள் நடுக்கமெடுத்தன. இருவரும் ஓட்டமெடுக்கத் தயாரானோம்.

'யார் சாமி அது? தோட்டத்தில் இந்நேரத்திற்கு என்ன வேலை?' என்று கேட்டுக்கொண்டே அத்தோட்டத்தின் காவற்கார

இன்ஸ்பெக்ஷன்

[T. A. S.]

எல்லோரும் துரைசாமி ஐயர் வித்தியாலயத்தையே விரும்பினர். காரணம் என்னவென்று உங்களுக்கு யாருக்காவது தெரியுமா? பையன்கள் கஷ்டப்படாமல் வருடா வருடம் பாஸ்செய்து விடுவதுதான். இப்பொழுது நீங்களும் வாயைச் சப்புகிறீர்களல்லவா, நாமும் நம் பையனை அவருடைய வித்தியாலயத்திற்கு அனுப்பலாமென்று. ஆமாம், வாசித்துவிட்டுப் பின்னு ஊகியுங்கள்.

துரைசாமி ஐயருடைய பட்டப் பெயர்கள் கீழ்வருமாறு:— (1) தூங்குமூஞ்சி துரைசாமி. (2) உள்ளாங்கண்ணு வடிச்சமூஞ்சி. மேற்படி இரண்டு பட்டப் பெயரும் அவருடைய முகத்தைப்பற்றி மாத்திரமே யென்றால் மற்றவைகளைப்பற்றி கூறவேண்டிய அவசியமேயில்லை.

அவருக்கு எல்லோர் பேரிலும் அன்பு உண்டு. என்றாலும் அக் கிளாஸில் வாசித்துவந்த லீலாவின்மேல் மிகுந்த பிரியம் உண்டு. கேள்விக்குப் பதில் தப்பாகச் சொன்னாலும் அது அவருக்குச் சரியாகவே யிருக்கும். இதனாலே அவருக்கு 'ஓரவஞ்சனை ஒன்னரைக் கண்ணன்' என்ற பட்டம் இருப்பதிலும் நேயர்களுக்கு ஆச்சரியமுமில்லை என்னலாம்.

உபாத்தியாருக்கு அவ்வப்போது தேவையான சாமான்களைக் கொடுத்துவிடனும். இல்லையேல் அவன் அவ்வருஷம் கம்பாஸ்தான்.

னாகிய கந்தன் எங்கள் முன் தோன்றினான். நாங்கள் இருவரும் நடந்ததை உரைத்தோம். கந்தன் தனக்குவந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு அவ்வாளியை எடுத்து எங்கள் முகத்திற்கு நேராகப் பிடித்தான். அதன் வழியாக ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்கள் பூராவும் தெரிந்தன. வாளிக்கு அடித்தட்டே இல்லை யென்பது கோபுவுக்கு 'உள்ளங்கை நெல்லிக்கனி' போல் விளங்கிற்று. கோபு இதை ஒருவரிடமும் சொல்லவேண்டாமென்று என்னையும் கந்தனையும் வெகுவாக வேண்டிக் கொண்டான்.

அதனால்தான் பையன்கள் பாஸ்பண்ண கஷ்டப்பட வேண்டிய அவசியமில்லை என்று கூறினேன்.

இன்ஸ்பெக்டர் ஒருநாள் வித்தியாலயத்தைப் பார்வையிட வந்தார். அன்றுதான் உபாத்தியாயரே இலக்கணப் புத்தகத்தை எடுத்துப் பார்த்தாரென்றால், பையன்களைப்பற்றி கூறவேண்டியதே இல்லை.

மணி அடித்தது. இன்ஸ்பெக்டர் கிளாஸிற்குள் நுழைந்தார். உபாத்தியாயருக்கு நடுக்கம் உண்டாகிவிட்டது. என்றாலும் வெளிக்குக் காட்டிக்கொள்ள இஷ்டப்படாமல் அடக்கிக்கொண்டார்.

இன்ஸ்பெக்டர்:—டே, கடைசிப் பையா! கேஸ் (Case) என்றால் என்ன?

பையன்:—யாராவது மண்டையை கிண்டையை உடைத்துக் கிட்டுக் கச்சேரிக்குப் போனா, அதைக் கேஸ் என்று சொல்லுவாங்கோ, ஸார்.

இன்பெக்டர் மற்றவர்களை எல்லாம் கேட்க அவர்கள் முதலில் சொன்னவன் பதில் சரி என்று எல்லாரும் பேசாமல் எழுந்து நின்றார்கள்.

மறுபடியும் இன்ஸ்பெக்டர்:—ஒரு மைலுக்கு எத்தனை அடி?

கோபாலன்:—மயிலின் தலையையும் வாலையையும் சேர்த்து அளந்தால் $1\frac{1}{2}$ அடி இருக்கும்.

உபாத்தியாயர் மனந்தளராமல் 'ஸார், இந்தப் பையன்களெல்லாம் ரொம்ப மண்டூகங்கள். அந்தப் பெண் நல்ல பதில் சொல்லுவாள். அவள் பெயர் லீலா. அவளைக் கேளுங்கள்' என்றார்.

இப்பொழுது பையன்களின் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது. ஆனால் என் செய்வது? இன்ஸ்பெக்டர் ஒருவரிருக்கிறாரே!

இன்ஸ்பெக்டர்:—லீலா, ஒரு அடிக்கு எத்தனை அங்குலம்?

லீலா:—தங்களைப் போன்றவர்கள் அடித்தால் அதன் நீளம் பத்து அங்குலம் இருக்கும்.

எல்லாரும் 'கொல்' என்று சிரித்தார்கள். உபாத்தியாயர் முகத்தில் ஈயாடவில்லை.

மறுநாள் துரைசாமி ஐயர் தன் குலாச்சாரப்படி கோயிலில் மணியடித்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் நான் பிரமித்துப் போனேன்!

'வாருங்கோ மாப்பிள்ளை!'

[சேங்கரி சேன்]

என் மாமனார் வெகு ஜம்பமாக தலைத் தீபாவளிக்கு என்னை உடனே புறப்பட்டு வரும்படியாக கடிதமெழுதி விட்டார். மற்றும் என் புதிய மனைவியும் அன்பொழுகும்படியான ஓர் கடிதமெழுதினாள். மாமனார் கடிதத்தை அசட்டை செய்தாலும் புதுமனைவியின் கடிதத்தை அசட்டை செய்ய முடியுமா? ஆயினும் தீபாவளி சமயத்தில் மாமனார்தானே முக்கியம்! மாமனார் வீட்டிற்கு, அதிலும் தலைத் தீபாவளிக்கு செல்வதென்றால் சாதாரணமாகவா போவது? எனது நண்பர்களிடம் ஒரு வார வாய்தாவிற்கு சில சாமான்களை இரவல் (வாடகைக்கு) வாங்கினேன்.

மைலப்பனின் கைக்கடிகாரத்தை கட்டவே (எங்கென்று கேட்காதீர்கள். கைக்கடிகாரத்தை வேறெங்கு கட்டுவார்கள்) அது ஒரு 'டைம்பீஸ்' மாதிரி யிருந்தது. துரை ராஜ் கொடுத்த மோதிரமோ ஓர் பெட்டி மாதிரி யிருந்தது. வேறு வழியின்றி கடைசியாக அதை பெருவிரலில் அணிந்து கொண்டேன். முனுசாமியின் பூட்ஸ் ஒன்று தான் எனக்கு அதிக சிரமத்தையும் 'சோக்' நடையையும கொடுக்க ஆரம்பித்தது. அது மிகவும் இறுகலாக இருந்தது.

தாயுமான சுந்தரத்தின் தொப்பியோ முகத்தையே மூடிவிடக் கூடியதாயிருந்தது. அதை என் தலையில் அணிந்திருந்ததைக் கண்ட போர்ட்டர் பொன்னுசாமிகூட 'இந்தக் கூடை என்ன கூடை?' யென்று கேட்டான். வாலியப்பனின் கோட்டோ ரொம்பவும் தொளபுளா என்றிருந்தது. நான் அணிந்திருந்த எங்கள் தாத்தாவின் தோபரா சொக்காயைவிட இது சற்றுப் பெரியதுதான். படுக்கையையும் மற்றும் சில உடுப்புகளையும் தனியாக ஓர் மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டு போகவேண்டிய சிரமத்தை அந்தக் கோட்டு நீக்கியது ஜமக்காளத்தையும் மற்றும் உடுப்புகளையும் என் இடுப்பைச் சுற்றி கட்டின பிறகே அந்த கோட்டு இரவல் கோட்டு என்று சொல்லாதென தோன்றியது.

சேலத்திலிருந்து மூன்றாவது வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்து கொண்டுவந்த நான் கண்டமானடி ரயில்வே ஸ்டேஷனை

அடைந்ததும் அங்கிருந்து (அடுத்த ஸ்டேஷன்) விழுப்புரத்திற்கு ஓர் முதல் வகுப்பு டிக்கட் வாங்கினேன்.

விழுப்புரத்தில் வண்டியும் எதிர்பார்த்தபடி நின்றது. எங்கு நிற்காமல் ஓடிவிடுமோவென்று நினைத்தது தவறு. அப்படி வண்டி நிற்காமல் ஓடினல் அபாய சங்கிலியைப் பிடித்து இழுத்தால் வண்டி நின்று விடுகிறது. யாராவது என்னை யாரென்று கேட்டால் நான் 'ஸோ அண்டு ஸோ' (So and so)வின் மருமகனென்று கூறினல் போதும். ஏனென்ருல் என் மாமனரும் ரயில்வேக் கம்பெனியில் ஓர் ஆபீஸர்தான்.

என் மாமன் யார்? மாமி யார்? என்று மட்டிலும் கேட்டு விடாதீர்கள். அவர்களெல்லாம் பலேபலே ஆசாமிகள். என் மாமனர் மகாக் கெட்டிக்காரர். அத்தகைய கெட்டிக்காரரையே ஆளும் என் மாமியாரின் சமர்த்தை நான் உங்களுக்குச் சொல்லத் தயாராக இல்லை. அப்படி நான் சொன்னலும் நீங்கள் கேட்கத் தயாராகவில்லையென்பது எனக்கு நன்ருகத் தெரியும். சொல்லென்ருல் சொல்லி விடுகிறேன். சட்டத்தினுள் தந்தை—மாமனராக மாறுகிருர். தாய் மாமியாராக மாறுகிருர். தந்தைக்கும் மாமனருக்கும் தாய்க்கும் மாமிக்கும் வித்தியாசத்தை உண்டு பண்ணுவது சட்டத்தினுள்தான். (In law) அவர்களின் பெயரையும் கூறிவிடும் என்கிறீர்களே. அது முடியாது. ஏனென்ருல் என் மனைவிமட்டும் அவள் மாமனர் மாமியின் பெயரை கூறப்படா தென்கிருளே, நான் மட்டும் எப்படி என் மாமனர் மாமியின் பெயரை கூறுவது?

மரியாதைக்கு மரியாதை. அவ்வளவுதானே, என்? சொன்னல் தான் பாவம் குற்றம். எழுதினல் அது பேனவைத்தானே சாரும். சுப்பிரமணியம் செட்டியார் என் மாமனர். அவரது எசமானி, இல்லை இல்லை அவரது சம்சாரம், அவரது மனைவியார்? மறுபடியும் அந்த செட்டியார்? அவரின் மனைவி யார்?' என்று கேட்டீர்களானல் என் னருகேயுள்ள தடியை எடுத்துக் கொள்வேன். (சிவ! சிவ! உங்களை அடிப்பதற்கென்று நினைத்துக்கொள்ள வேண்டாம். என் கைத் தடியது. அஃதின்றி நடப்பது கடினம்)

வண்டி நிற்பதற்கு முன்னதாகவே என் இடுப்பில் சுற்றியிருந்த ஜமக்காளத்தையும் மற்ற உடைகளையும் அவிழ்த்து ஓர் மூட்டையாக கட்டிவிட்டேன். இப்பொழுது அந்த 'தொளபுளா' கோட்டு 'நான் இந்த மனிதருடையது அல்ல' என்று காட்ட ஆரம்பம் செய்து விட்டது. சட்டென்று ஓர் யோசனை தோன்றியது. கோட்டைக் கழற்றி அதில் ஒரு கையை மட்டும் மாட்டிக்கொண்டேன் நாஷக்காக—அந்த பத்தாத (நெருப்பு வைத்தாலல்ல—காலுக்கு) பூட்ஸ் என்னை வெகு ஜோராக நடக்கும்படி செய்தது. மாமனரும்

மாமியாரும் மற்ற அந்த வீட்டிலுள்ள நபர்களும் 'வாருங்கோ மாப்பிள்ளே' யென்றூர்கள். அதில் என் மாமியின் குரல்தான் ரொம்ப வும் நைஸாக இருந்தது. என் மாமியும் அடிக்கடி 'ஐஸில் நைஸ் கலந்ததுபோல்' என்று கூறுவார்கள். அவாது குரலும் அப்படித் தான் இருந்தது. ஆனால் 'ஐஸ்' மட்டிலும் கோடை காலத்தில் கிடைக்கும். 'நைஸ்' எந்த காலத்தில் கிடைக்குமென்பது எனக்குத் தெரியாது.

அவர்கள் 'வாருங்கோ மாப்பிள்ளே' என்றதற்கு நான் புன்ன கையுடன் தலையை அசைத்துவிட்டு நோாக மேன்மாடிக்குச் சென் றேன். அந்த அறை சுத்தமாகக் கூட்டப்பட்டு கோலம் போடப்பட் டிருந்தது. அந்தக் கோலத்தில் என் மனைவியின் பெயர் காணப்பட்ட தைக் கண்டு எனக்கு அளவிலா ஆனந்தம் உண்டானது. கோட் டைக் கழற்றி ஆணியில் மாட்டினேன். ஆயினும் என் தோபாா சட்டையை கழற்ற என் மனம் துணியவில்லை. ஏனெனில் அதை வாங்கினபொழுது எண்ணமுடியாத அத்தனை சந்திர வடிவங்க ளிருந்தன. அதில் இப்பொழுது சிறிய ஓட்டைகள் பெருக ஆரம் பித்து எண்ணும்படியான நிலைமைக்கு வந்துவிட்டன.

அடுத்த அறையில் யாரோ குசுகுசுவென்று பேசுவதுகேட்டது. சுறில் காதை வைத்து கேட்டதில் 'இந்த மாப்பிள்ளையைப்போல் நான் பார்த்ததே கிடையாது. அந்த கூலி ஆளுக்கு அரையணு கொடுத்தால் போதும். இவன் ஓரணு கொடுத்தான். மைனர்போலத் தான் செலவழிக்கிறுன். சாமிநாதன் காபி வாங்கி கொடுத்தானும். அதில் ஒரு சங்கத்தனே குடித்துவிட்டு மீதியை சாக்கடையில் ஊற்றி விட்டானும். என்னமோ சுத்த அசட்டு மாப்பிள்ளை நம்ப மாப் பிள்ளை' யென்று என் மாமனுர் அவர் தம் தேவியாரிடத்தில் சொல்லிக் கொண்டிருந்தார்.

என் மைத்துனன், அடே யப்பா இது மாமியார் வீடல்லவா? மரியாதையாக யிருக்க வேண்டுமே! அந்த சிறிய பையர் ஒரு தட்டில் பக்ஷணங்களும் ஒரு டம்ளரில் காபியும் கொண்டுவந்து என் முன் னிலையில் வைத்து 'அத்தான்! சாப்பிடுங்கள் என்ருர். எனக்கு வாாம லிருக்குமா கோபம். என்னை மரியாதையாக 'அத்தார்' என்று அவன் அழைத்திருந்தால் பாவாயில்லை. வாய்கூட நனையாத அவ் வளவு காபியும் ஒரு பிடிகூட ஆகாத அவ்வளவு பக்ஷணங்களும் அந்த தட்டிலிருந்ததைக் கண்ட என் மனம் பகீரென்றது. இப்பொ ழுது நினைத்தால் கூட அழுகை வருகிறது. மாமனுர் வீடென்று கருதியே அழாமலிருந்தேன். வேட்டகத்தில் ஒரு கை பார்க்கலா மென்று என் வயிற்றை ஒரு வாரமாகக் காயவைத்திருந்தது அவர் களுக் கெப்படித் தெரியும்? அந்தப் பயர்(ல்) மைத்துனர் சொல்லி யிருக்க வேண்டும். சரி என்ன செய்வது? அன்றும் விரதம் அதுஷ்

டிக்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டு 'மெனி தேங்க்ஸ்' என்றேன். அதைக் கேட்ட அவன் என்னை ஒருவிதமாகப் பார்த்து விட்டுச் சென்றான்.

அவனப்பாவிடம் சென்று அவனென்ன சொன்னான் தெரியுமா? 'அப்பா! அத்தான் என்னை 'மணி, தேன் குரூ' என்றான். 'நான் மணியாம். என் பெயரைக்கூட மறந்துவிட்டானே' என்றான்.

சற்று நேரத்திற்கெல்லாம் யாரோ மெத்தைப்படி யேறிவரும் சப்தம் கேட்டது. மெட்டி உண்டாக்கிய ஓசையிலிருந்து என் மனைவியாகத்தானிருக்குமென்று யூகித்தேன். உடனே சிவனிடமிருந்து வாங்கிவந்த கண்ணாடியை அணிந்துகொண்டு முகத்தை சிரித்த விதம் வைத்துக்கொண்டேன். வந்தவள் கதவின் சந்திலேயே நின்றுகொண்டு 'என் உடம்பிற்கென்ன? சரியாக சாப்பிடுவதில்லை யென்று கேள்விப்பட்டேன்' என்றாள்.

'என்ன உனக்கு இவ்வளவு வெட்கம் இப்படி வரப்படாதோ என் பக்கம். மூக்கே! கொக்கே!' என்றேன். (இது புதுநாகரிகப்படி மற்றும் அவள் கொக்கைப்போல் வெண்மையாக இருந்தாள்) அப்பொழுது யாரோ 'ஆண்டாள்! ஆண்டாள்!' என்று கூப்பிடவே 'இதோ வந்துவிட்டேன்' என்று கூறிச் சென்றபொழுதுதான் அவள் என் மாமியார் என்று அறிந்தேன். மூக்கே கொக்கே என்று கூறினதற்கு என்ன நினைத்துக் கொள்வார்களோ! அந்த 'கண்ட்ரிகளுக்கு 'கண்ணே! கிளியே!' என்றால்தானே தெரியும்.

விடியற்காலை எட்டுமணிக்கு-என் கடிகாரத்தின்படி-என் மனைவி கையில் ஒரு டம்ளருடன் வந்தாள். வெட்கத்தால் தலைகுனிந்து என் கட்டிலினருகே நின்றாள். அவள் நாணத்தை அறிந்துகொண்டு அவள் கையிலிருந்த டம்ளரை வாங்கி அதிலிருந்ததை மடமடவென்று குடித்துவிட்டேன். என் பசி எனக்குத்தானே தெரியும்.' 'என்னடி கமலம்! இப்பொழுதுதானா என்மேல் உனக்கு கிருபை பிறந்தது. இதென்ன இவ்வளவு தித்திப்பாகயிருக்கிறதே' என்றேன். அவள் குனிந்த தலை நிமிராமல் 'தாங்கள்தான் என் தாயாரிடத்தில் நன்றாக பசி எடுப்பதில்லை யென்றும், வயிறு ஒரு மாதிரியாக இருக்கிறதென்றும் கூறினீர்களாம் ஆகவே பேதி மாத்திரையை காபியில் கலந்து உங்களுக்குக் கொண்டுவந்தேன்' என்றாள்.

அதைக் கேட்டதும் என் மனம் பகீர் என்றது 'தம்'பிடித்து பட்டினி கிடக்க நேர்ந்ததை நினைக்க நினைக்க என் மனம் சொல்லித் தான் தீருமோ!

அன்றிரவு கண்களை மூடிக்கொண்டு உறங்குபவனைப்போல் பாசாங்கு செய்தேன். ஏனெனில் அது என் மனைவியின் கட்டளை. அப்பொழுது 'ஆண்டாள்! உன் மருமகப்பிள்ளையை சாதாரண பேர்

வழியென்று நினைத்துவிடாதே. நம்ம அபார பண்டிதர் வடிவேல் பண்டிதன் என்னத்திற்காவான்' என்றார் என் மாமனார். 'அப்படியானால் இந்த ஊர் முனிசிபல் ஹைஸ்கூலில் ஓர் தமிழ் பண்டிதர் வேலை காலியாயிருக்காமே. அதில் சிபார்சு செய்யாமலே சேர்த்துவிடுகிறதுதானே' என்றாள் என் மாமியார்.

'அட அசடே! பள்ளிக்கூடத்து பண்டிதரல்ல. சிங்கப்பூர் ஹேர் கட்டிங் சலூன் பண்டிதராக்கும். நேற்றுமாலை நானும் அருகில் உட்கார்ந்துகொண்டுதானிருக்கிறேன். தன் சமர்த்தைக்காட்டவோ என்னமோ இரண்டே நிமிஷத்தில் முகத்தை சுத்தம் செய்துகொண்டார். அடைப்பமெல்லாம் புதுமாதிரியாக இருக்கிறது. கடை வைத்தாலும் தினம் கால் அரை கிடைக்கும்' என்றார் என் மாமனார். 'அது மட்டுமா! அந்த சம்பந்தமே நமக்கு வேண்டாமென்றதை கேட்டீர்களா! நேற்று நான் மேன்மாடிக்குச் சென்றேன். கண்ணாடி போட்டும் என்னை தெரிந்துகொள்ளாமல் என்னென்னமோ பிதற்றினார். (இது அந்த் சிவனின் சாலேசாக் கண்ணாடி செய்த வேலை. நான் ஜவாப்தாரியல்ல 'நான் கூலிங்கிளாஸ்' என்று நினைத்தேன். அதைப் போட்டதால்தான் என் மாமியை அடையாளம் தெரிந்து கொள்ள முடியாதபடி செய்தது)

கடைசியாக ஊருக்குப் போகும்நேரம் வந்தது. வாசலில் வண்டி நின்றது. மைத்துனனும் மைத்துனிகளும் (கரிய துணி) பல்லைக் காட்டிக்கொண்டு நின்றார்கள். மணிபர்சில் கையைவிட்டேன். என் மாமனார் என்னை மைனரென்று சொன்னது ஞாபகத்திற்கு வரவே அவரிடத்தில் நல்ல பெயர் எடுக்க வேண்டுமென நினைத்து தலைக்கு ஒரு தம்படி கொடுத்தேன். குழந்தைகள் வாங்க மறுத்தன. 'பரவாயில்லை. வாங்கிக் கொள்' என்று அன்பாகக் கூறினேன். இப்பொழுது என்னை அவர்கள் மிகவும் செட்டாக செலவு செய்கிறானென்று கூறுவார்களல்லவா? ஊருக்குச் சென்றதும் என் தாயார் அம்மணியம்மாள்' ஏன்டா நாகு! உன் மாமனார் என்னடா கொடுத்தார்' என்றாள்.

'அம்மா! அதையேன் கேட்கிறாய். 'மாப்பிள்ளை! உங்களுக்குக் கடவுள் (நண்பர்கள்) கிருபையால் ஒன்றிற்கும் குறைவில்லை. உங்களுக்கு ஏதாவது வாங்கிக் கொடுக்கலாமென நினைத்தேன். உங்களிடம் எல்லாம் இருக்கிறபடியால் இல்லாதது எது என்றுதான் தெரியவில்லை. (என்னிடம் இல்லாதது 'மூளை' என்று அவருக்கெப்படித் தெரியும்) மற்றும் யோசனை செய்தே தாங்கள் வளரும் பிள்ளையாகையால் பெரியதாகவே எல்லாவற்றையும் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். பின்னால் பார்த்துக் கொள்ளலாம் போய் 'வாருங்கோ மாப்பிள்ளை' யென்றார் அந்த ஈயாலோபி மாமனார்' என்றேன் நான்.

இல்லம்

[திருவையாறு கே. வைத்தியநாதன்]

ஒரு மனிதனது குடும்பம் தொடங்கப்படும் இடம் அவனது இல்லமேயாகும். அது மச்சாயினும்—குச்சாயினும், மாளிகையாயினும் — குடிசையாயினும், இளந்தம்பதிகளின் வாழ்க்கை ஸ்தலமாகி விடுகிறது. தம் இல்லத்தில்தான் அவர்கள் தங்கள் அன்புப் பயிரை வளர்க்கிறார்கள். அங்கேதான் அவர்களது ஆசை வாழ்வு சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது.

மனிதன் தனக்குச் சொந்தமாகவுள்ள பொருள்களில் தன் வீடும் ஒன்று எனக் கருதுகிறான். அதனாலேதான் அவனது பேச்சுகளுக்கு இடையே 'என் வீடு, என் இல்லம்' என்ற சொற்றொடர்கள் எழுகின்றன. அவன் வீட்டிற்கும் அவனுக்கும் மிக நெருங்கிய உறவு எப்படியோ ஏற்பட்டுத்தான் போகிறது. இன்றேல் அவன் 'வீட்டுக்காரன், அகமுடையான்' என்றெல்லாம் அழைக்கப்படுவது எங்ஙனம்? அவனுக்கு வாழ்க்கைப்பட்ட நங்கைகூட 'வீட்டுக்காரி, அகமுடையாள்' எனப் பலராலும் அழைக்கப்படுகிறாளல்லவா?

வயலிலே வேலைசெய்யும் ஒரு ஏழைக் குடியானவன் 'பொழுது சாய்ந்துவிட்டது. வீட்டிற்குப் போகவேண்டும்' என்று தனக்குத் தானே கூறிக்கொள்ளுகிறான். தன் மனைவி, மக்கள் வீட்டிலிருப்பதால் அவன் அவ்வாறு கூறிக்கொண்டானென நாம் ஐயுறலாம். ஆனால் மனைவி மக்களற்றவன்கூட அவ்வாறு சொல்லிக்கொள்வதை நாம் பலதடவைகளில் கேட்டிருக்கிறோம். எனவே தன் மனைவி மீதுள்ள காதலால், மக்கள்மீதுள்ள வாஞ்சையால்மட்டும் அவன் அவ்விதம் கூறிவிடவில்லை. என்னவோ அவனும் அறியாத ஒருவித பிரேமை அவன் வீட்டிலே இருக்கிறது. அது எந்த வடிவத்திலிருக்கிறது? எப்படியிருக்கிறது? என்றெல்லாம் அவனுக்குத் தெரியாது. நேரஞ் செல்லச்செல்ல தன் வீடுபோய்ச் சேரவேண்டும் என்ற ஒரே கவலைதான் அவனைச் சூழ்ந்து நிற்பது. அந்தக்கவலை எதனால் உண்டாகிறது என்று அவனாலேயே திட்டமாய்க் கூறமுடியாது.

பொருளற்ற, கணவனற்ற ஒரு கிழவி எங்களூரிலே உண்டு. அவள் ஒரு சீமாட்டி வீட்டிலே கூலிவேலை செய்துவந்தாள். அந்தச்

சீமாட்டியிடமிருந்து அவளுக்குப் பொருள் வடிவத்தில் கூலிகிடைப்ப தில்லை. வயிற்றுக்குச் சோறும், இடுப்புக்குத் துணியுந்தான் அந்தக் கிழவி பெறுங்கூலி. அவளுக்குச் சிறுகுடிசை வீடொன்றுண்டு. மேலே திறந்தகூரையும், சுற்றிலும் இடிந்து சரிந்த மண்சுவர்களு முள்ள அந்தக் குடிசைவீடு அவளுக்கு ஒரு மாளிகைபோல. என்றேனும் 'கிழவி! இருட்டிப்போய் விட்டதே. இங்கேதான் படுத்துக் கொள்ளேன்' என்று அந்தச் சீமாட்டி கூறுவாளானுல், அந்தக் கிழவி 'போ அம்மா கிடக்கு! வீட்டையும் வாசலையும் விட்டுட்டு....' என்று சொல்லிக்கொண்டே தன்வீட்டை நோக்கிப் புறப்பட்டு விடுவாள்.

இப்படியேதான் மனிதன் எவனுக்கும் தன்வீடு என்றால் ஒரு தனி இன்பம், ஒரு தனிப்பற்று உண்டாய்விடுகிறது. பகல் முழுதும் எங்கு சுற்றித்திரிந்தாலும் இராப்பொழுது வந்ததே தன் இல்லத்திற்குச் செல்லவேண்டுமென்ற உணர்ச்சி வயப்பட்டவனுகித் திரும்புகிருன். வெளியில் அலைந்துதிரிந்த மனிதனுக்கு வீடுசுவர்க்கம் மாதிரிதான்; அங்கேதான் அலுப்பெல்லாம் ஆறுகிறது. உழைப்புக்கேற்ற ஓய்வை அவன் தன் வீட்டில்தான் பெறுகிருன்; சிரமந்தீர அவன் உறங்குவது தன் வீட்டில்தான்.

'ஒருவன் உத்தியோக சாலையினின்றும் வீடுநோக்கித் திரும்புகிருன் வீட்டுக்குச் சற்றுதூரத்தில் வரும்போதே அவனது அருமை நாயின் குரலோசை அவனுக்குச் செவி விருந்தளிக்கிறது. வீட்டு சாளரத்தின் கம்பிகளுக்கிடையிலோ, திண்ணை முகப்பிலோ கூரிய இருவிழிகள் அவன் வருகையை ஆவலுடன் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றன. அவன் அருகில்வந்ததே அவை மலர்ந்து பிரகாசிக்கின்றன.' இது ஒரு ஆங்கிலமேதாவியின் கவிக்கூற்று.

'சுவர்க்கம் ஒரு இனிய கனி. அதை இல்லமாகிய மலர் அளிக்க வல்லது......உலகப் போராட்டங்களை வெளியே தள்ளிவிட்டு உலகப் பற்றுக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது இல்லம்.......வீடு ஒரு தங்க அணிகலன், அதன் மத்தியிலே ஒளிரும் மணிதான் வீட்டுக்காரி......ஒரு வீடே தந்தைக்கு சாம்ராஜ்யமாகவும், தாய்க்கு உலகமாகவும், புதல்வர்களுக்கு சுவர்க்கமாகவும் காணப்படுகிறது' இவைகளெல்லாம் சில பெரியார்களது அபிப்பிராயங்கள்.

வீடு மிகப்புனிதமானது. வீட்டுக்காரி தன் வீட்டைத் தினமும் மெழுகி சுத்திசெய்து பாத்திரங்களைத் துலக்கி நீராடி தூய ஆடையணிந்து தன் அட்டில் தொழிலில் பிரவேசிக்கிருள். அடுப்பு எரிகிறது. நல்ல சுவையுணவு தயாராகிறது. அந்த உணவுக்குத் தானே மனிதன் தினமும் ஓடியுழைப்பதெல்லாம்! தூய்மையான இல்லத்தில் தான் திருமகளின் அருள் சுரக்கும், அதில்தான் அவனது குடும்ப

தேவதைகள் குடிகொள்கின்றன. அவனையும் அவனது குடும்பத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அவைகளுக்குத்தானே!

எந்த வீடும் அழகின் உறைவிடமாயிருக்கவேண்டும். அழகிய பொருள்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கவேண்டும். அப்போதுதான் மனிதர்களது அறிவு விசாலிக்கும். அழகிய தத்துவங்கள் பல அவர்களது ஆழ்ந்த உள்ளத்திலே உதிக்கும். மேலும் குழந்தைகளது ஆரம்பக்கல்வி வீடுகளில்தான் தொடங்குகிறது என்பதை நாம் மறக்கக்கூடாது. ஆதலால் சிறுவர்களது மனதுக்கு உற்சாகம் அளிக்கக்கூடியதான, அவர்களது அறிவை வளர்க்கக்கூடியதான பல சிறந்த பொருள்கள் வீடுகளில் வைக்கப்படவேண்டும். இதற்கு மாறாக நம்மவர்களது பெரும்பாலான இல்லங்கள் மிகச் சீர்கேடான முறையில் இருந்துவருகின்றன. வீடுமுழுதும் தும்பு தூசி பறந்தும், கூடங்களிலும், தாழ்வாரங்களிலும் தங்கள் வியாபாரச் சாக்குகள் நிறைந்த மூட்டைகள் அடுக்கியும், சமையலறை, படுக்கையறை முதலிய விடங்களில் வீட்டிற்குரிய பண்டம் பாத்திரங்களைப் பரப்பி வைத்தும், வீடுகளைப் பாழ்படுத்தியிருப்பதை நாம் பலகிராமங்களிலும், நகரங்களிலும் கண்டிருக்கிறோம். மற்றும் சில வீடுகளில் மனிதர்களும், ஆடுமாடுகளும் சேர்ந்தே வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் உண்டு உறங்கும் இடங்களுக் கருகிலேதான் அவைகளும் உண்டு உறங்குகின்றன. இத்தகைய இல்லங்கள் நந்தம் தமிழ்நாட்டில் அனந்தம்.

'ஐயோ! பாவம்! அவர்கள் ஏழை. என்ன செய்வார்கள்?' என்று நம்மில் சிலர் அவர்கள்பால் தங்களுக்குள்ள அனுதாபத்தை வெளியிடுகின்றனர். அந்தோ! அன்பர்களே! இவ்வாறு அறியாமையில் நம்மவர்கள் மூழ்கிக்கிடக்கும் வரையில் நமது சமூகத்தார் உடல் வளம்பெற்று நெடுநாள் உயிரோம்பி வாழ்தல் என்பது இயலுமா? 'தரித்திரம், பொருளாதார மந்தம்' போன்ற பிரச்சினைகளையெல்லாம் பொருள்நூல் வல்லார், அரசாங்க நிபுணர் முதலான பெரியார்களிடத்து ஒப்படைத்துவிட்டு நம்மால் இயன்ற முறையில் நமது இல்லங்களைச் சீரான முறையில் அமைத்துக்கொள்ள ஏன் நாம் முயலக்கூடாது? யாரும் சிறிது முயன்றால், மிகக் குறைந்த பொருட்செலவிலே தன் வீட்டையும் அதன் சுற்றுப்புறங்களையும் சுத்தமாகவும் நாகரிகமாகவும் வைத்துக்கொள்ளலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

ஒரு எளிய கூலியும் மனம் வைத்தால் தன் சிறு குடிசையை மிகச் சுத்தமாகவும், அலங்காரமாகவும் வைத்துக்கொள்ளலாம். எனவே நம்மவர்கள் இனியாவது தம் இல்லங்களைச் சிறந்தமுறையில் அமைத்துக்கெள்வார்களாக.

தந்திரம்

[கோவை S. வெங்கடராமன்]

'கோபாலா ஏன் வீண் பிடிவாதம் செய்கிறாய்? உனக்கோ இப்பொழுது வயது 20 ஆய்விட்டது. இனியும் உனக்கு விவாகம் செய்து வைக்காமலிருந்தால் உலகம் என்னையன்றோ நிந்திக்கும். ஆகையால் வீண் பிடிவாதத்தை விட்டு நான் சொல்கிறபடி ரங்கநாதஞ் செட்டியார் குமாரத்தி பங்கஜத்தை மணந்து கொள்' என்று கிருஷ்ணசாமி செட்டியார் தன் மகனைப் பார்த்துச் சொன்னார். கோபாலன் தன் தந்தை சொல்லில் அதிருப்தியடைந்தவனாய் காணப்பட்டான். மீண்டும், மீண்டும் கிருஷ்ணாசாமி செட்டியார் வற்புறுத்தவே கோபாலன் கோபத்துடன் 'அப்பா! எனக்கு விவாகமே வேண்டாமென்று எவ்வளவோ தடவை சொல்லியும் ஏன் என்னை வீணாக தொந்திரவு செய்கிறீர்கள்?' என்று கழறினான்.

'அப்படிச் சொல்லாதே. நானும் உன் தாயாரும் உனக்குக் கலியாணம்செய்து எங்கள் கண்குளிரப் பார்த்து ஆனந்திக்க ஆசைப் படுகிறோம். உன் மனதிலுள்ளதை ஒளியாமல் சொல்லு. தந்தையாகிய என்னிடம் சொல்ல ஏன் சங்கோசப் படுகிறாய்?'

'அப்பா தாங்கள் இன்று ஒருநாளுமில்லாதவாறு விடாப்பிடியாய்ப் பிடிப்பதால் நான் என் மனதிலுள்ளதை வெளிப்படையாய்ச் சொல்லிவிடுகிறேன். ஆனால் தாங்கள் என் இச்சைப்படி நடந்து கொள்ளவேண்டும்'

'எதுவாயினும் ஒளியாமல் சொல்லு'

'அப்பா! நான் தங்கத்தையே விவாகம்செய்து கொள்வதாகத் தீர்மானித்து விட்டேன்'

'யாரை!? தங்கமா! யாரது?'

'குழந்தை செட்டியார் குமாரத்தி தங்கம்'

'வேண்டாம், அந்த சம்பந்தம் நமக்கு வேண்டாம். வேறு யாரையேனும் நம்மினத்தவர்களாய்ப் பார்த்துச்சொல்'

'ஆனால் அவர்கள் நம்மினத்தவர்களில்லையா? அவர்கள் வீட்டில் தாங்களுமகூட எவ்வளவோ தடவை விருந்துண்டிருக்கிறீர்களே!'

'குழந்தாய் நீயோ சிறுபிள்ளை. உனக்கு உலகவிவகாரம் தெரியாது. அவர்களும் நம் சாதியார்கள்தான். ஆனால் அவர்கள்

மூதாதைகளில் யாரோ ஒருவர் விதவை மணம்செய்துகொண்டாராம். அந்த விதவையின் சந்ததியில் வந்தவர்கள்தான் இந்தக் குழந்தை செட்டியாரும். ஆகையால் யாதொருகுற்றங் குறையில்லாத குடும்பத்தாராகிய நாம் அவர்கள் சம்பந்தம் வைத்துக்கொள்ள நான் ஒருக்காலும் ஒருப்படேன்.'

'இந்தச் சமாதானங்களையெல்லாம் நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். தங்கத்தை விவாகம்செய்து வைப்பதானல் பேசுங்கள்' என்று கோபத்துடன் கோபாலன் சொன்னன்.

'நீ என்னதான் பிடிவாதம் செய்தாலும் என்னுடலில் உயிருள்ளவரைக்கும் அப்பேர்ப்பட்ட சம்பந்தம் செய்ய ஒத்துக்கொள்ளவேமாட்டேன்' என்று கட்டோடு மறுத்துவிட்டார்.

'ஆனல் இனிமேல் என்னிடம் கலியாணப்பேச்சே பேசாதீர்கள்' என்று கண்டிப்பாய் சொல்லிவிட்டு, சரேலென்று வெளிப்பட்டு, வாடியமுகத்துடன் தங்கத்தின் வீட்டை நோக்கி பற்பல எண்ணமிட்டவாறே நடந்தான். 'தந்தையோ தங்கத்தைமணக்க இஷ்டப்படவில்லை, நாமோ தங்கத்தை மணந்துகொள்வதாக வாக்களித்து விட்டோம். தந்தையின் அனுமதியின்றி விவாகம் செய்துகொண்டால் செய்துகொள்ளலாம். ஆனல் சிறுவயது முதல் எவ்வளவோ அன்புடன் வளர்த்துவந்த தாய்தந்தையின் அனுமதியின்றி விவாகம் செய்துகொள்ள என்மனம் இடங்கொடுக்கவில்லை என் செய்யலாம்' என்று சிந்தனை செய்துகொண்டே சென்றவன், திடீரென ஒரு முடிவுக்கு வந்தவன்போல் 'ஆம். அதுவே சரி, மணந்தால் தங்கத்தை மணப்பது, இல்லையேல் பிரம்மச்சாரியாய் இருந்து விடுவது' என்ற தீர்மானத்திற்கு வந்தான்.

இதற்குள் தங்கத்தின் வீடும் சமீபித்துவிட்டது. கோபாலன் வரவிற்காக எதிர்பார்த்திருந்த தங்கம், கோபாலன் வாடியமுகத்துடன் வருவதைக்கண்டு அன்புடன் வீட்டிற்குள் அழைத்துக் கொண்டுபோய் விசனத்தின் காரணம் என்னவென்று கேட்டாள்.

கோபாலனும் அன்று தனக்கும் தன் தகப்பனுக்கும் நடந்த வாக்கு வாதங்களையெல்லாம் சொன்னன். அதைக்கேட்டு தங்கமும் மிகுந்த வருத்தமடைந்தாள்.

ஆயினும் கோபாலன் தங்கத்திற்கு வேண்டியமட்டும் தேறுதல் கூறினன். தான் எப்படியும் அவளை மணந்து கொள்வதாகச்சொல்லி விடைபெற்று வீடுவந்து சேர்ந்தான்.

அன்றுமுதல் கோபாலன் தான் எப்படி தங்கத்தை மணந்து கொள்வது, என்று எண்ணி எண்ணி ஏங்கினன். கோபாலனின் தந்தையோ தன் மகனின் பிடிவாதத்தையும் அவன் தகாத சம்பந்தத்தை விரும்பி நிற்பதையும் குறித்து வருந்திக்கொண்டிருந்தார்.

மேற்கண்ட சம்பவம் நடந்து மாதம் ஒன்றும் கழிந்தது. ஒரு நாளிரவு யாருக்கும் சொல்லிக்கொள்ளாமல் தங்கத்தின் தாய் தந்தையர்கள் அவ்வூரைவிட்டு வெளியேறி விட்டார்கள். இதுவிஷயத்தைப்பற்றி பலர் பலவிதமாய் பேசத்தலைப்பட்டார்கள். 'குழந்தை செட்டி தன் பெண்ணை பெரிய பணக்காரன் மகனாகிய கோபாலனுக்கு மணம் செய்துவைக்க எவ்வளவோ ஜெகஜாலம் செய்துபார்த்தான். காரியம் நடக்கவில்லை, பேசாது கம்பிநீட்டி விட்டான்' என்றும், 'கிருஷ்ணசாமி செட்டியார் என்ன லேசானவரா? அவராவது தன் மகனுக்கு இந்த மட்டச்சாதியில் பெண் கட்டுவதாவது' என்றும், 'என்னதான் கிருஷ்ணசாமி செட்டியார் முடுக்காயிருந்தாலும், பையன் அந்தப் பெண்ணைத்தான் கலியாணம் செய்துகொள்வேன் என்று சொல்லுகிறானாமே! அப்படியிருக்க செட்டியார் என்ன செய்யமுடியும்?' என்றும், 'கோபாலன்தான் அப்பெண்ணையே கலியாணம் செய்து கொள்வேன் என்று சொல்கிறான். உண்மையில் அப்பெண்ணுக்கும் அவள் பெற்றோர்களுக்கும் கோபாலன் பேரில் விருப்பமில்லை என்றுதான் தோன்றுகிறது. விருப்பமிருந்தால் இப்படி திடீரென ஊரைவிட்டுப் போவார்களா?' என்றும் பலபலவிதமாகப் பேசத் தலைப்பட்டார்கள்.

கிருஷ்ணசாமி செட்டியாரோ குழந்தை செட்டியார் ஊரை விட்டுப் போனதைப்பற்றி வெகுவாக சந்தோஷப்பட்டார். தன் மகனைப் பிடித்திருந்த சனியன் அன்றுடன் ஒழிந்தது என்று நினைத்தார். இனி தன் மகன் சொன்னபடி நடந்து கொள்வான் என்றும் தீர்மானித்தார். என்றாலும் தன் மகனிடத்தில் கலியாணத்தைப் பற்றிப் பேச இப்பொழுதும் செட்டியாருக்குப் பயம்தான். இப்படியாக மாத மாறும் ஓடிமறைந்தது.

சேலத்தில் தம்மினத்தாரில் நல்லகுலத்தில் ஒரு பெண்ணிருப்பதாகவும், அப்பெண்ணிற்கு சீதனமாக ரொக்கம் ரூ. 3000-ம் நகையில் ரூ. 2000மும் கொடுப்பதாகவும் செட்டியாருக்கு தகவல் கிடைத்தது செட்டியார் பெரிய பணக்காரர் என்றாலும் பெண்ணிற்குப் பெண்ணும் நகையும் ரொக்கமும் கிடைப்பதையும் விட்டுவிட அவருக்கு மனமில்லை. எப்படியாவது அப்பெண்ணை தன் மகனுக்கு மணமுடிக்க வேண்டுமென்று எண்ணினார். கோபாலன் சம்மதிப்பானா என்ற ஒரு சந்தேகம். எப்படியும் கோபாலனுக்குச் சொல்லிச் சரிசெய்து விடலாம் என்று தீர்மானித்தார். தன்மகனை யழைத்து விஷயத்தைச் சொன்னார். கோபாலனும் ஒத்துக்கொண்டான். செட்டியாருக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவேயில்லை. மேற்கொண்டு ஆகவேண்டிய சகல முயற்சிகளையும் செய்தார். ஓர் சுபதினத்தில் விவாகமும் சகல வைபவத்துடன் நடந்தேறியது.

விவாகம் நடந்த ஒரு வாரத்திற்குப் பிறகு ஷேட் நாராயணதாஸ் என்ற மார்வாடியிடமிருந்து கிருஷ்ணசாமி செட்டியாருக்கு

ஒரு நோட்டீஸ் கிடைத்தது. அதில் தன்மகன் ரூ. 5000 கடன் வாங்கி செலுத்தத் தவறிவிட்டதாகவும், அதைக்குறித்து நடவடிக்கை நடத்தப்போவதாகவும் கண்டிருந்தது. செட்டியாருக்கு அதைப் படித்தவுடனே தூக்கி வாரிப்போட்டது. தன் மகனுவது கடன்வாங்கவாவது, எதற்கும் கேட்டுப்பார்ப்போம் என்று தீர்மானித்து கோபாலனை யழைத்து நோட்டீஸ் விஷயமாய்க் கேட்டார்.

கோபாலன்:—'ஆம். கடன் வாங்கியது உண்மைதான்' என்று சொன்னுன்.

கிருஷ்ணசாமி:—'எதற்காக வாங்கினுய் என்னயறியாது?' என்று கேட்டார் கோபத்துடன்.

கோபாலன்:—தந்தையே! நான் தங்கத்தை மணந்துகொள்ள நிச்சயித்திருந்தது தாங்களறியாததல்ல. தாங்கள் அதற்கிணங்க கட்டோடு மறுத்துவந்தீர்கள். தங்களனுமதியின்றி அவளை நான் விவாகம் செய்துகொண்டால் செய்துகொள்ளலாம். ஆனுல் அவ்விதம் செய்ய என்மனது இடந்தரவில்லை. எப்படியாவது தந்திரம் செய்து தங்கள் அனுமதியின் பேரிலேயே காரியம் நடத்திவிடுவது என்று தீர்மானித்தேன். அவர்கள் இவ்வூரில் இருக்கும்வரைக்கும் என் எண்ணம் நிறைவேருது என்று கண்டு, அவர்களை திடீரென சேலத்திற்கு அனுப்பிவைத்தேன். தங்கள் குணத்தையறிந்த நான் பெண்ணிற்கு சீதனமாக பொருள் கொடுப்பதாயிருந்தால் ஒத்துக் கொள்வீர்களென்றெண்ணி, சேட்டினிடம் தங்களுக்குத் தெரியாது ரூ. 5000 கடன் வாங்கிக்கொடுத்து நகைகள் செய்துபோட்டு மீதியை சீதனமாகக் கொடுப்பதாக தங்களுக்குச் சொல்லி ஏற்பாடு செய்யும்படி என் நண்பனின் தகப்பனரிடம் ஏற்பாடுசெய்திருந்தேன். அதற்குப்பின்னுல் நடந்தது தங்களுக்குத் தெரியும். நான் எண்ணியபடி தங்கள் அனுமதியின்பேரிலேயே தங்கத்தை என் பத்தினியாயடைந்தேன். கடன்பட்ட தொகை பூராவும் ரொக்கமாகவும் நகைகளாகவும் சீதனமாகவும் திரும்பிவந்து விட்டது. தங்களையறியாது நான் இவ்வளவும் செய்ததற்காக என்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்' என்று இரங்கிய குரலில் பணிவாய்க் கேட்டான்.

கிருஷ்ணசாமி செட்டியார் இடியரவம்கேட்ட நாகம்போல் கல்லாய்ச் சமைந்து அசைவற்று நின்ருர். தான் என்ன சொல்லியும் தடுத்தும் தன் மகன் தான் வேண்டாத பெண்ணையே தந்திரமாக கலியாணம் செய்துகொண்டதனுல் பெரிதும் விசனமடைந்தார். அன்று முதல் அதே வியாகூலத்தால் பாதிக்கப்பட்டு துரும்பாய் இளைத்துப் போனுர். எவ்வளவு சிகிச்சை செய்தும் பிரயோசனப்படவில்லை. அவருக்கு ஏற்பட்டுள்ள அவமானத்தை இவ்வுலகத்திலிருந்து அனுபவிக்கச் சகியாதவராய் சிலநாளில் விண்ணுலகெய்தினுர்.

நடிக்கக் கற்றுக்கொள்ளும் விதம்

[மேட்டுப்பாளையம் P. கணேசன்]

குலசேகரன் ஒரு மந்திரவாதியிடம் மந்திரங்கள் கற்றுக்கொண்டு பேய் ஓட்டுதல் முதலியவைகளில் சாமர்த்தியசாலியானான். அவன் ஒரு அறையில் பயங்கரமான காளி, சாமுண்டி, முனீஸ்வரன் பூதம் முதலிய உருவங்களை வைத்துக்கொண்டு தன்னிடம் வருபவர்களை நடுங்கச்செய்து தன்னை மந்திரவாதியென நம்பிக்கை வரும்படி செய்து, பேயோட்டுதல் முதலான வேலைகளை நடத்தி வந்தான்.

ஆனால் மேற்படி உருவங்களை வைத்திருக்கும் அறைக்கு தன் மனைவி காந்தாமணியைமட்டும் வாராதபடி பார்த்துவந்தான். அவ்வறையை அவள் பார்த்தால் பயந்து விடுவாளென்றும், அவ்விதமானால் அவ்வறையிலுள்ள உருவங்களை வெளியேற்றவேண்டி வருமென்றும், அன்றியும் அவன் தொழிலுக்கே மோசம்வந்து விடுமென்றும் கருதி, பலமுறை அவன் உயிர்த்துணைவி கேட்டும், அவ்வறையை காண்பிக்க மறுத்துவிட்டான். அதன்பின் காந்தாமணியும் தன் கணவனைக் கேட்பதை விட்டொழித்தாள்.

நாட்கள் சில சென்றன. குலசேகரனுக்கு வரும்படி மிகவும் குறையலாயிற்று. சிறிது காலத்தில் அந்த நீசத்தொழிலை விட்டுவிடவும் எண்ணங்கொண்டான். ஒருநாள் தான் வேறுவேலை கற்றுவர சென்னைக்குப் போவதாகவும், திரும்பிவர ஒருமாதம் ஆகுமென்றும் தன் மனைவியிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

இந்த சம்பாஷணை நடந்த ஒரு வாரத்திற்கெல்லாம் குலசேகரன் சென்னைக்குப் புறப்படுவதானான். போகும்போது தன் வீட்டுச் சாவிகளின் கொத்தை தன் மனைவியிடம் தந்து, அந்த மந்திர உருவங்கள் உள்ள அறையைமட்டும் திறக்கவேண்டாமென்று கண்டிப்பாகச் சொல்லிச் சென்றான்.

காந்தாமணி அந்த மூடப்பட்டுள்ள அறையின்மீதே ஞாபகமாய் இருந்ததால் குலசேகரன்சென்ற மூன்றாம் நாள் எப்படியாவது அந்த அறையைத் திறந்து பார்க்கவேண்டுமென்று அதன் பூட்டை குலசேகரன் தந்துபோன சாவியால் திறந்தாள். ஆயினும் அவள் மனம் நடுங்கியது. என்ன பயங்கரமான காட்சி அந்த அறையில் இருக்குமோவென அச்சமுற்றாள். திறக்காமல் மூடிவிடவும் நினைத்

தாள். பிறகு துணிந்து திறந்தே பார்ப்பதென்ற முடிவுக்கு வந்தாள். அந்த சமயம் தெருக்கதவை யாரோ தட்டவும் நடுக்கத்துடன் பூட்டை பூட்டிவிட்டு வெளியில் வந்து கதவைத் திறந்தாள். தபாற் காரன் கடிதமொன்று தந்துசென்றான். அது குலசேகரனது கடிதம். தான் வந்தவேலை முடிந்து விட்டதால் இரவு புறப்பட்டு மறுநாள் பகல் 12-மணிக்கு வருவதாக எழுதி இருந்தான். கடிகாரத்தை நோக்கினாள். 10½-மணியாக இருந்தது. அவன் 12-மணிக்கு வருவதற் குள் அந்த அறையைத் திறந்தாள்.

திறந்து உட்சென்றதும் அங்குள்ள பயங்கரக் காட்சிகளைக்கண்டு அலறியவாறு கீழே விழுந்தாள். பிறகு நடுங்கிக்கொண்டே வெளி யில் வந்து அறையின் கதவைமூடிப் பூட்டிவிட்டாள். எனினும் அந்த அறையிலிருந்த விபரீதக்காட்சி அவள் மனதில் பதிந்து வெகு பயங்கரத்தைக் கொடுத்தது. இதற்குள் மணியும் 12-ஆக குலசேகர னும் பெட்டியுடன் வீட்டிற்குள் நுழைந்தான். காந்தா பிரியமாய் உபசரித்தாள். ஆயினும் அவள நடுக்கம் தீரவில்லை. குலசேகரனிடம் சாவிகளைக் கொடுத்துவிட்டு அடுத்த வீட்டிற்குச் சென்றாள். அவ்வி தம் சென்றாலாவது தன் மன நடுக்கம் சற்றே தீராதாவென்பது அவள் கருத்து.

காந்தாமணி சென்றதும் சென்ற மூன்று நாட்களாக பார்க்கா திருந்த தனது மந்திர அறையின் ஞாபகம் உண்டாகவே, குலசேகரன் அவ்வறையைத் திறந்தான். திறந்ததும் அவனுக்கெதிரில் கிடந்த கடிதமொன்றை எடுத்துப்பார்க்க, அது நேற்று சென்னையிலிருந்து காந்தாவுக்கு தான் எழுதி தபாலில் போட்ட கடிதமாக இருந்தது. காந்தா தன் கட்டளையைமீறி அறைக்குள்வந்து நடுங்கிப்போயிருக் கிறாளென்றும், அதனாலேயே வீட்டிலிருக்கப் பிடிக்காமல் பக்கத்து வீட்டுக்கு போயிருக்கிறாளென்றும் தெரிந்து கொண்டான். அதே சமயம் நூலாசிரியர்களுக்கு திடீரென்று தோற்றும் புதுயோசனை யைப்போல் அவன் மனதிலும் ஒரு குறிப்பான சிந்தனை உதய மாயிற்று. அச்சிந்தனையின்படியே செய்வதென்று தீர்மானித்தான்.

உடனே அறையைப் பூட்டிவிட்டு பெருங்கோபத்துடன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான். காந்தாமணியும் அந்த சமயம் உள்வா உடனே ஆத்திரத்துடன் எழுந்து 'இன்று உனக்கு வந்த என் கடிதம் எங்கே?' என்று வினவினான். காந்தாமணி அந்த கடிதத்திற்காக முன்பே தேடிப்பார்த்துக் காணாமல் கவலை கொண்டிருந்தாளாதலின், இப்போது குலசேகரன் அதையே கேட்டதும், அந்த மந்திர உருவ அறைக்குள் அந்தக் கடிதம் தவறி விழுந்திருந்து, அதனால் தான் அவ்வறையைப் பார்த்தது தெரிந்து விட்டதோவென நடுங்கினாள். குலசேகரன் கோபத்துடன் பெட்டியைத்திறந்து பளபளப்பான கூறிய கத்தியொன்றை எடுத்துக்காட்டி 'உண்மையைச் சொல் கிறாயா?—வெட்டட்டுமா?' என்றான். காந்தாமணி நடுக்கத்துடன்

மந்திர அறைக்குள் தான் சென்றது உண்டென்றும், தான் பயந்து கீழே விழுகையில் கடிதமும் ஒரு சமயம் அங்கு விழுந்திருக்கலாமென்றும், தன்னை மன்னிக்க வேண்டுமென்றும், காலில்விழுந்து கெஞ்சினாள்.

குலசேகரனோ அவளைப் பிடித்துத்தள்ளி, 'என் கட்டளையை மீறுவதற்கு உனக்கு என்ன அவ்வளவு தைரியம்?' என்று கடுஞ் சினத்துடன் உரக்கப் பேசி தன் கத்தியை ஓங்கினான். காந்தாமணி அலறிக்கொண்டு 'நான் தெரியாமற் செய்தேன். பிழை பொறுக்க வேண்டுமென்று மறுபடியும் அவன் காலில் விழுந்தாள். கண்ணீர் ஆறாகப் பெருகிற்று.

குலசேகரனுக்கோ வரவரக் கோபம் அதிகமாயிற்றே தவிர குறையவில்லை. 'என் கட்டளையை மீறி அந்த அறையைத் திறந்த குற்றத்திற்காக இன்னும் கால்மணி நேரத்திற்குள் உன்னைக் கொல்லப் போகிறேன். நீ அதற்குத் தயாராய் இரு' என்று சொல்லி விட்டு வெளிக்கதவை மூடித் தாளிட்டான்.

குலசேகரனின் முகம் சண்டாளன் முகத்தைப்போலும் ஒரு கொலைகாரப் பாவி முகத்தைப்போலுமிருந்தது.

காந்தாமணி என்ன செய்வாள்? நடுநடுங்கியவாறே கடைசிக் கட்டுக்குப் போனாள். கதறினாள். துணை எவருமில்லை. 'ஆயிற்றா? இன்னும் பத்துநிமிஷமே இருக்கிறது' என்று கத்தினான் குலசேகரன். காந்தாமணி பின்னும் அஞ்சியவளாய் மாடியின்மீது ஏறி உதவிக்கு எவரையாவது அழைக்கலாமென்றெண்ணி தெருவில் போவோர் ஒருவருமில்லையா என்று கவனித்தாள். அதற்குள் குலசேகரன் ஐந்து நிமிஷங்களே இருக்கிறதென்று கத்தினான். வீட்டிற்குள் இருந்தபடியே மாடியில் காந்தாமணி நிற்பதையும், தவிப்பதையும் ஒரு பக்கம் நன்றாய் கவனித்தபடியே இருந்தான். இனி மூன்று நிமிஷமே என்று கத்தினான். பிறகு இரண்டே நிமிஷங்கள் என்றான். 'உன்னைக் கொல்லாது விடப்போவதில்லை' யென்று கர்ஜித்தான் குலசேகரன். காந்தாமணி மிகவும் தத்தளித்தாள்.

தனக்கு மரண காலம் நெருங்கிவிட்டதென்பதை உணர்ந்தாள் அனாதைப் பெண் காந்தாமணி. அச்சமயம் வீதியில் யாரேனும் போவோர் வருவோர் இருப்பார்களே யானால், ஆத்திரத்துடன் அவர்களை ஓடி வரும்படியும், தான் கொலை செய்யப்படப் போவதாயும் சைகை காண்பித்து அழைக்கலாமென்று வீதியை நோக்கினாள். அவளது துர் அதிர்ஷ்டம் ஒருவரேனும் வீதியிலில்லை. அதற்குள் ஒரு நிமிஷமே பாக்கி என்று குலசேகரன் கூறிவிட்டுக் கத்தியுடன் மாடியின் முதற்படியை நெருங்கினான்.

காந்தாமணி குலசேகரனைக் கண்டதும் பதைபதைத்து நடுங்கியவளாய் அலறினாள். குலசேகரனோ இரக்கமற்ற சண்டாளனாய்,

கத்தியை ஓங்கி அவள் கழுத்தில் போட்டுவிட்டான். அது மட்டுமா? காந்தாமணியின் தேகத்தில் பல இடங்களிலும் குத்திவிட்டான் சண்டாளன். இப்படியும் உண்டா ஒரு மூர்க்கன்?

காந்தாமணி பிரமித்து வீழ்ந்தாள். குலசேகரன் கடகடவென சிரித்தான். கொலையாளியின் முகமும் கோபமும் காணுமொளிந்தது.

காந்தாமணி வீழ்ந்தவாறு சற்றே மறுபக்கம் திரும்பிப் பார்த்தாள். கூர்மையான கத்தி கீழே யிருந்தது. அதை எடுத்தாள் கையில். என்ன ஆச்சரியம்! அது ஒரு கனத்த காகித அட்டையால் மேலுக்குமட்டும் ஒருவித பளபளப்பான காகிதம் ஒட்டப்பட்டு உண்மையானதொரு கத்தியைப் போலவே விளங்கிற்று. தன் கணவனின் முகத்தை நோக்கி தழுதழுத்த குரலில் 'இவ்விதமாகவா என்னை பயமுறுத்துகிறது' என்றாள் காந்தாமணி.

குலசேகரன் காந்தாமணியை தடவிக் கொடுத்துக்கொண்டே 'கண்மணி, இக்கொடுமைக்கு என்னை மன்னிக்க வேண்டும். நேற்று சென்னையில் சினிமா படம் பிடிப்பதற்காக ஒரு கதையைத் தயாரித்து அதில் தன் கணவனின் கோபத்திற்காளாகிக் கொல்லப் படப் போகும் பெண்ணைப்போல என்னை நடிக்க வேண்டுமென்று மேற்படி கார்ப்பரேஷன் அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர். அதை இன்னும் மூன்று தினத்தில் நடிக்கவேண்டும். அந்த நடிப்பை எவ்விதம் பிரத்தியக்ஷக் காட்சிபோல் நடிப்பதென்று நேற்று முதல் யோசித்துக் கொண்டே இருந்தேன். உன்னைவிட்டுப் பிரிந்தது மனதிற்குப் பிடிக்காததால் உடனே புறப்பட்டு வந்தேன். மந்திர உருவ அறையில் நான் அனுப்பிய கடிதம் கிடந்ததால் நீ அறையைத் திறந்திருக்கிறு யென்று கண்டுகொண்டேன். அந்த சமயம் திடீரென்று என் மனதில் ஒரு புதுயோசனை எழுந்தது. அந்த அறையைத் திறந்ததற்காக உன்னைக் கொன்று விடுவதாக பயமுறுத்தினல் நீ எப்படியெல்லாம் நடுங்குகிறாயோ அவைகளை இயற்கையிலேயே நேருக்கு நேராகக் கண்டு கொண்டால், பிறகு அந்த விதமாக நான் பெண் வேடத்துடன் நடிப்பதற்குச் சுலபமாகவும் பிறர் வியக்கும்வண்ணம் சிலாக்கியமாகவும் இருக்குமென்று தீர்மானித்துக் கொண்டேன். இந்தக் கோபாவேசம் ஒரு சமயம் கெடுதியாய் முடிந்துவிடாமலிருக்க ஜெர்மனியில் நாடகத்திற்கென்றே தயாரிக்கப்பட்டு சினிமாக் கம்பெனிக்கு வந்திருந்த இந்த விசித்திரமான காகித அட்டைக் கத்தியை எடுத்துக்கொண்டு இவ்வளவு ஆரவாரம் செய்து ஒரு பெண்ணினது இயற்கையான உண்மையான நடுங்குதலை கண்டு கொண்டு விட்டேன். இனி என் வாழ்நாளில் இவ்வித அக்கிரமம் செய்யேன். என்னை மன்னிப்பாயா!' என்றான்.

'மனப்பூர்வமாய் மன்னிக்கிறேன். ஆனால் நான் உண்மையாகவே நடுங்கி விட்டேன்' என்றாள் காந்தா. 'எனக்கு அப்படி நீ

நடுங்கிய உண்மைச் சரக்குதானே வேண்டும். இந்த நடிப்பில் எனக்கு 500 ரூபாய் கிடைக்கும். அப்படியே கொண்டுவந்து உனக்கு 'காசு மாலை' செய்து போட்டு விடுகிறேன்' என்றான் குலசேகரன்.

இச்சம்பவங்கள் நிகழ்ந்த அன்று மாலையே அந்தப் பாழும் மந்திரங்கள், உருவங்கள் எதுவுமே தனக்கு வேண்டாமென்று கூறி, அவன் அச் சாமான்களையும், உருவங்களையும் வேறு வீட்டிற்கனுப்பி விட்டு மந்திர அறையைத் திறந்து வைத்துவிட்டான் குலசேகரன். காந்தாமணியும் அளவற்ற மகிழ்ச்சியுற்றாள்.

இது நடந்து ஒன்றரை ஆண்டாயின. இப்போது காந்தாமணி தன் கழுத்தில் 'காசுமாலை' மட்டுமல்ல. 'கடிகாரக் கொலு'சுடனும் இன்னும் மற்றைய ஆபரணங்களுடனும் பிரகாசித்துக்கொண்டு நிற்கிறாள். குலசேகரன் அளவற்ற காதலுடன் அவளோடு இல்லறம் நடத்தி வாழ்ந்து வருகிறான். அவர்களின் சுகத்தை பங்கு போட்டுக் கொள்வதுபோல் காந்தாமணியின் இரண்டு வயதுக் குழந்தை 'தமிழரசு' பத்திரிகை ஒன்றை கையில் வைத்துக்கொண்டு தவழ்ந்து விளையாடுகிறது.

வெளி வந்து விட்டது! வெளி வந்து வட்டது!!

தாசிகளும் தாசிகாந்தர்களும்

(ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப்புலவர் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இதன் முன் பாகத்தைச் சென்ற வருட 'தமிழரசு' இதழ்களில் தொடர்ச்சியாகப் படித்த நேயர்கள் நாள்தோறும் இப் புத்தகத்திற்கு ஆடர் செய்துகொண்டே இருக்கிறார்கள். இந் நூலைச் சிலபக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும்படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப் புத்தகத்தின் விலை

எட்டணா தான்

சொற்பப் பிரதிகளே அச்சிட்டிருப்பதால்
முந்திக் கொள்ளுங்கள்.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

கமலகாந்தா

[தேவகோட்டை V. இராமநாதன்]

அத்தியாயம் 18.

தையலின் துயரம்

முன் அத்தியாயத்தின் நிகழ்ச்சிக்கு மறுநாள், மாலை வேளை மெல்லிய இளந்தென்றல் வீசிக்கொண்டிருந்தது. இந்நேரத்தில் கிருஷ்ணபுரி ஜமீந்தார் மாளிகையின் பின்புறத்தேயுள்ள பூங்காவனத்தில் ஒரு யௌவனக்கட்டழகி ஒரு சமாச்சாரப் பத்திரிகையுடன் உல்லாசமாக உலாவிக்கொண்டிருந்தாள். அப்பூங்காவனத்தின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த சிறிய பங்களா, அதிக அலங்காரமாகத் தோன்றியது. அதற்குச் செல்லும் பாதை சலவைக் கற்களால் மிக அழகுறப் பாவப்பட்டிருந்தது. வழியின் இருமருங்கும் பந்திபந்தியாய் தொட்டிகளில் பூச்செடிகள் நிறைந்திருந்தன. சிறிது சிறிது தூரத்தில் மின்சார தீபங்கள் பலவித நிறங்களில் இணைக்கப்பட்டிருந்தன. இரத்தினக் கம்பளம் விரித்தாற்போல் எங்கும் பசுமையாய் புல்படந்திருந்தது. காற்றில் மரங்களின் சலனமேற்படும்பொழுது பழுத்த பழங்கள் உதிர்வதும், நறுமணங் கமழும் தென்றல் வீசுவதும், மயில்களாடுவதும், மதுவுண்ட தேனீக்கள் ரீங்காரம்போடுவதும், மனதை ஆனந்தசாகரத்திலாழ்த்துமென்பதற்கையமில்லை.

இப்படிப்பட்ட உல்லாசமான பூங்காவில் ஆனந்தமாக உலாவிக்கொண்டிருந்த நங்கைக்கு சுமார் பதினாறு பிராயமிருக்கலாம். அவளின் கார்முகிலையும் கருத்த வண்டினங்களையும் ஒத்த கூந்தலையும், வில்லைப்பழித்த புருவத்தையும், கயல்கண்களையும், குவிந்த கன்னங்களையும், பவளத்தையொத்த இதழ்களையும், முத்தாரம்போன்ற பல்வரிசையையும், குயிலுமினிய குரலையும், மூன்முறுவல் பூத்த அழகிய வதனத்தையும், கச்சின்கண் அடங்கா கனதனங்களையும், உடுக்கையை யொத்த இடுப்பையும், தாமரைபோன்ற பாதங்களையும், தங்கத்தில் செதுக்கி மெருகு கொடுத்தாற்போன்ற ஜ்வலிப்புள்ள தேககாந்தியையும், அன்னத்தைப் பழித்த மென்னடையையும், இன்னும் இவையன்ன இதர விசேஷங்களையும் கண்டால், கண்டவர் மனம் கல்லாயினும் கனியுமென்றால், அதிகம் எழுதுவானேன்!

ஐயோ! கடவுள் கொஞ்சமும் நெஞ்சிரக்கமற்றவர். படைக்கிறார். காக்கிறார். பின்னால் அழிக்கிறார். அழித்தல் என்றவிடத்தில் கொஞ்சமும் தாரதம்மியமற்றவர். எனவே, மண்மேல் பிறப்பது இறப்பதற்கென்றே ஆகின்றது. இது உலகமறிந்த உண்மை. என்றாலும் அழகுக்கு அழகாய் ஜனித்தவர்களும் மடிவதென்றால் சகிப்பதெங்ஙனம்? போகட்டும். இவ்வழகியும் ஒருநாள் மடிவது நிச்சயமாதலின், அவளின் அழகை அதிகம் விஸ்தரித்து வாசகர்களுக்கு கடவுளின் செயலில் குரோதம் உண்டாக்காது கதையை நோக்குவோம்.

எழில் மலிந்த அந்நங்கை சமாச்சாரப் பத்திரிகையைப் பிரித்தாள். இரண்டொரு பக்கங்களைப் புரட்டினாள். எதையோ கண்டாள். கண்டதும் கண்கலங்கினாள். 'ஐயோ! என் தலைவிதி இவ்வாறும் இருக்குமென் றெண்ணவில்லையே! சிறுவயதில் துரதிஷ்டவசத்தால் பெற்றோரை யிழந்தேன். எனது தந்தையின் தகப்பன் பணப்பேயால் பீடிக்கப்பட்டு, நான் முன்பின் அறியாத ஒருவருக்கு என்னை மணம் செய்து கொடுத்தார். ஐயோ! அவர் எத்தனை பெண்களின் கற்பை யழித்தார்? 'நாதா! இச்செயல்புரிவோர்க்கு கதிமோக்ஷமில்லை' என்று பன்முறை கூறியும் கேட்காது லீலைபுரியத் துணிந்தார். அதன்பயனை இன்றேயடைந்தார்! அடைந்ததில் ஆச்சரியமுண்டோ? கற்பென்றால் நெருப்பன்றோ! கற்பின் மகிமைக்கு இணையுண்டோ! 'எப்புண்ணியவதியின் சாபம் பலித்ததோ! ஒருவழியில் அவர் கஷ்டம் அனுபவிப்பது நேர்மையேயானாலும், அவர் எனது நாதனன்றோ! கல்லென்றாலும் கணவனன்றோ! புல்லென்றாலும் புருஷனன்றோ! ஏ! தெய்வமே! அவர் துஷ்டரென்றாலும், என்னைப் பொருத்தாகிலும் காட்டிக் கொடாமலிருக்கலாகாதா! கற்புள்ள மங்கையர் கணவனைப் பிரிந்து வாழ்வதில் பயன் என்ன? இந்நிலையில் நான் அல்லலுறக் காரணமென்ன? எனது தந்தையின் தகப்பன், பண மோகம் கொண்டதன்றோ!' ஏ! பணமே உன் திருவிளையாடல்,—இல்லை,— உன் சதிச்செயல்!' என்றுகூறி

கண்ணீர் சொரிந்து கலக்கமுற்று நின்ற வேளையில், யாரோ வரும் அரவம்கேட்டது. அடுத்த நிமிஷம் ஒருமாது அங்குற்று, 'அடி! லீலா! என் கண்ணீரும் கம்பலையுமாய் நிற்கின்றாய்?' எனவே,

'ஆ! மாமி!....மாமி!! யான் என்செய்வேன்? எவ்வாறுரைப்பேன்? ஐயோ!....உங்கள் மைந்தருக்கு...ஐயோ! தெய்வமே' என்றவாறு மேலே கூறமுடியாமல் தடாலென வீழ்ந்து மூர்ச்சித்தாள். அம்மாதரசியோ ஒன்றும் தோன்றாமல் திகைத்தாள். சிறிது நேரத்தில் லீலா மூர்ச்சை தெளிந்தெழுந்தாள். உலகமே சுற்றுவதாய்த் தென்பட்டது. 'ஆ! மாமி! நான் எங்கிருக்கின்றேன்? அவர் எங்கே? வந்துவிட்டாரா?' என்றாள். அம்மாது அவளின் மனமயக்கத்தைத் தெளிவித்து 'லீலா! என்ன சொல்லுகிறாய்? எனக்கொன்றுமே விளங்கவில்லையே!' என்றாள். 'மாமி! என்ன சொல்லுவேன்! இப்பத்திரிகையைப் பாருங்கள்' என்று கூறி பத்திரிகையில் குறிப்பிட்ட ஒரு பக்கத்தைக் காட்டினாள். அதில் கீழ்வருவன காணப்பட்டன.

கமலகாந்தா கண்டு பிடிக்கப்பட்டாள், சரோஜினிதேவிக்கு இனாம்.

கதிரேசனுக்கு கடுங்காவல்.

கிருஷ்ணபுரி ஜமீந்தார்வீட்டு விவாஹ வைபவத்தின்போது காணாமற்போன காரிகை கமலகாந்தா துப்பறியும் மிஸ். சரோஜினி தேவியின் முயற்சியால் கண்டுபிடிக்கப் பட்டாள்.

இதில் பல துப்பறியும் ஆண்சிங்கங்களைவென்ற சரோஜினி தேவிக்கு கமலகாந்தாவின் தந்தை ஐயாயிரம் ரூபாயும் ஒரு தங்கப் பதக்கமும் கொடுத்தார்.

உளவறிந்த விபரம்.

ஜமீந்தார் வீட்டின் பின்புறமுள்ள பூங்காவனத்தில் ஒரு செடியில் காற்றால் அடிபட்டுக்கொண்டு கிடந்த, கமலகாந்தனால் எழுதப்பட்டாற்போன்ற கடிதத்தைக் கண்டெடுத்த சரோஜினி, அக்கடிதத்தில் இருந்த நீரெழுத்தை உற்றுநோக்கினாள். அதில் ஒரு சிங்கத்தின் உருவமும் ஆங்கில எழுத்துக்களின் முதலெழுத்தும் தோன்றின. ஆண்பிள்ளையாக நடித்து மிஸ்டர் என். நாயுடு என்ற மாறுபெயருடன் ஜேம்ஸ் அச்சாபீஸில் உத்தியோகம்பெற்று ஓய்வேற்பட்ட பொழுதெல்லாம் பழைய காகிதக்கோர்வைகளைப் புரட்டி யார்யாருக்கு சிங்க உருவமும் ஆங்கில அக்ஷரங்களில் முதல் அக்ஷரமும் உள்ள காகிதங்கள் விற்கப்பட்டிருக்கிறதென்று கவனித்து வரும்பொழுது, கதிரேசனின் பெயரும் மற்று பிருகவான்களின் பெயரும் தெரியலாயின. ஏற்கனவே கதிரேசன்மேல் ஏற்பட்டிருந்த சமுசயத்தால் கமலகாந்தாவை அவனே கவர்ந்திருக்க வேண்டுமென்று ஐயமுற்றாள். பின்பு அச்சாபீஸ் வேலையை ராஜிநாமா செய்துவிட்டு மாறுவேடத்துடன் கதிரேசன் காரியங்கள் ஒவ்வொன்றையும் கவனித்து வந்தாள். நேற்று அஸ்தமிக்கும் நேரத்தில் கதிரேசன் கிருஷ்ணபுரியின் வடக்குப்பாட்டை வழியாக நடந்து

கொண்டிருக்கும்பொழுது மிஸ். சரோஜினி தன்னுடன் ஒருபோலீஸ் அதிகாரியையும் அழைத்துக்கொண்டு பிச்சைகாரர்கள்போல் வேடமணிந்துகொண்டு கதிரேசனைப் பின்பற்றி நடந்தனள். கதிரேசன், சிறைசெய்து வைத்திருந்த கமலகாந்தாவை துர்கிருத்தியத்திற்காக துன்புறுத்தியபொழுது, இவ்விருவர்களும் கதவை உடைத்து உட்சென்று கதிரேசனை கைதியாக்கி, கமலகாந்தாவைக் காப்பாற்றினர். இன்றுகாலை இவ்வழக்கு விசாரிக்கப்பட்டு, கதிரேசனுக்கு இரண்டு வருட கடினதண்டனை விதிக்கப்பட்டது.'

இதனை வாசித்த லீலாவின் மாமியாகிய சாந்தாதேவி, 'ஓ தெய்வமே! பிள்ளைப்பேறின்றி பலகால் உன்னைப் பூஜித்ததின்பலனாக அக்குறையை நீக்கினாய்! ஆனால் அவனை அடாக்காரியத்தி லீடுபடச்செய்து கடுஞ்சிறை வைத்தாய்! எங்களை இவ்வாறு சோதித்தல் முறையோ? 'கமலகாந்தாவைக் காந்த கள்வனைப் பெற்றவள் இவள்' என்ற வசைமொழிக்கு ஆளாக்கினாய்? இதற்கோ பிள்ளைக் கலிதீர்த்தாய்? பெற்றபயன் இதுதானா? இப்பழிக்கு இலக்காகாமல் மலடியாய் இருந்திருப்பின் நலம்போலும்! சென்றதைப்பற்றி பின் பேசி என்ன?' என்று கண்ணீர்விடுத்து கலங்கினாள். இவ்விருவர்களின் துக்கம் காணச் சகியாமல் ஆதவன் அஸ்தமித்தான். துக்கம் மிக்க மாமியும் மருகியும் இல்லம் நடந்தனர்.

'பெறுமவற்றுள் யாமறிவதில்லை, அறிவறிந்த மக்கட்பேறல்ல பிற' என்றார் நாயனார். அதற்கு இணங்க, அறிவுள்ளமக்களை யடையவேண்டும், இன்றேல் மக்கட்பேறு வேண்டற்க.

அத்தியாயம் 19.

ஜர்மனியில் கமலகாந்தன்

ஜர்மனியில் ஒரு பெரிய மாளிகையின் தனித்ததொரு அறையில் ஒரு மேஜை முன்பு வாலிபனொருவன் அமர்ந்தவண்ணம், ஏதோ சிந்தனையி லாழ்ந்திருந்தான். பளபளப்பும் மன்மத சொரூபமும், அன்பும் அமைதியும் கருணையும் பொலிவுற்ற அவனது திருமுகம் சற்று சோர்வைக்காட்டியது. ஆயினும் அகத்தின் மலர்ச்சி அதிகம் குன்றவில்லை. மேஜைமீதிருந்த தமிழ் பத்திரிகையை எடுத்துப் பிரித்தான். அதில் முன் அத்தியாயத்தில் கண்ட கமலகாந்தா மீட்கப்பட்ட செய்தியையும், கதிரேசன் தண்டிக்கப்பட்டதையும் படித்தான். 'ஆ! என்ன கோரம்! என் அருமைக் காதலி அப்பாவி கதிரேசனால் சிறையிலடைபட்டு தவிக்க நேர்ந்ததோ? அந்தோ! அவனின் சிறையில் அவள் என்ன நினைந்தனளோ! அவன் இப்பொழுது என் கண்முன்வரின் சித்திரவதை செய்வேன். ஆம்! நிச்சயம் செய்தே முடிப்பேன். இப்பொழுது மிஸ். சரோஜினி

உதவிக்கு முன்வராவிட்டால் அவளின் கதியாதாகும்! கதியென்ன? அதோ கதிதான்! போகட்டும் கஷ்டத்தின் பின்தான் சுகமுண்டு என்பார்கள். அதேபோல் என்து காதலிபட்ட கஷ்டத்தின் பின்பு, கதிரேசன் சிறைப்படல் ஆயினன்!' என்று சிந்தனை புரிந்தான்.

இவனை நேயர்கள் உணர்வீர்களாதலால் மேலே நோக்குவோம். மாலை நேரம். மணி சுமார் 5 இருக்கலாம். மாலைத் தபால் ஒன்று வந்தது. அதனைப் பிரித்த கமலகாந்தன், கீழ்வருமாறு வாசித்தான்.

ஆசை நாயகரே!

நமஸ்காரம். எனது அன்பான முத்தங்கள்.

தாங்கள் என்னைவிட்டுப் பிரிந்தபின் நான்பட்ட கஷ்டங்கள் சொல்லத்தா மற்றவை. அவைகளை எழுதுவதென்றால் பேனாவும் நடுங்கும். அச்செய்தியை பத்திரிகையில் படித்திருப்பீர்கள். ஆனால் ஆண்டி ஒழிந்தான், மடமும் காலியாயிற்று' என்றாற்போல், அக்கதிரேசனும் சிறைப்பட்டான், எனது பயமும் தீர்ந்தது. என்றாலும் ஒருவழியில் துக்கம் மேலிடுகிறது. அப்பாதகனை மணந்தவளும் என்போன்ற பெண்ணல்லவா? அவள் துன்புற யான் ஏன் ஜனித்தேன்?

அது போகட்டும். நான் தங்கள் திருமுகத்தைக் காணாது ஆதவனைக் காணாத தாமரைபோலும், மழைமுகம் காணாத பயிர் போலும், தாய்முகம் காணாத சேய்போலும், வாடியிருக்கின்றேன். உங்களைப் பிரிந்தபின் ஒரு நிமிஷம் கழிவதென்றால் ஒரு யுகம்போலிருக்கிறது. நாமிருவரும் கலந்துறவாடிய அந்த ஆனந்த நாட்களை எண்ணி எண்ணி ஏங்குகின்றேன். சீக்கிரத்தில் தங்கள் திருமுகம் காண ஆவல். ஆதலின் ஓடி வருக.

முத்தங்கள் ஏற்றருள்க.

தங்கள் பிரியை

கமலகாந்தா.

கடிதத்தை வாசித்த கமலகாந்தன், உடனே கமலகாந்தாவிற்கு பதில் வரைய முனைந்தான். காகிதம் பேனா ஆகியவற்றை எடுத்தான். ஆனால் அடுத்த நிமிஷம் யோஜனை உலகில் புகுந்தான். 'ஆம்! அது தான் நலம். நேரில் எழுதினால் அவளின் பெற்றோர் ஒரு வேளை சினத்தல் கூடும். ஆதலால் மிஸ். சரோஜினி மேல் பார்த்து கமலகாந்தா வசம் கொடுக்க வரைவதே சிலாக்கியம்' என முடிவு கொண்டு,

என் அன்பின் அணைகடந்த அமுதே!

உனது கடிதம் கண்டு இன்புற்றேன். உனது பெருந் தன்மையும் தாராளச் சிந்தையும் மெச்சற்பாலதே. உன்னையே சிறைவைத்த ஒருவனிடம், அவன் மனைவியை எண்ணி இரக்கம் காட்டுவது உனது பரோபகார குணத்தையும், பெருந்தன்மையையும் தெற்றென விளக்கிக்காட்டா நிற்கிறது.

காதலி! நான் உன்னைப் பிரிந்து சில மாதங்கள் கூடப்பூர்த்தியாகுமுன், எனது வரவை விரைவில் எதிர்பார்க்கும் உனக்கு, என்ன சமாதானம் எழுதுவதென்றே தோன்றவில்லை. எனினும் ஈசனருளால், பரீக்ஷையில் வெற்றி பெற்றதும், அரைக்ஷணமும் தாமதியாமல் உன்னை வந்தடைவேன். இது திண்ணம். மிஸ். சரோஜினிக்கு எனது மனமுவந்த நன்றி உரியதாகுக.

உன் பிரியன்,

கமலகாந்தன்.

என்று எழுதி தபாலில் சேர்த்துவிட்டு, உல்லாசமாக உலாவும் பொருட்டு கடற்கரைக்குச் சென்றான். இருள்சூழும் நேரம் சமீபித்தது. நிமிஷங்கள் கழிந்து மணிகளாயின.

சுமார் 8 மணி இருக்கலாம். இரும்பு வாராவதியினருகில் கமலகாந்தன்மட்டும் ஏகாங்கியாக நின்றிருந்தான். கடற்காற்று வெகு சுகமாக வீசிக்கொண்டிருந்தது. சுமார் இருபத்தி இரண்டு வயது மதிப்பிடத்தக்க வாலிபன் ஒருவன் தனது முகம் தவிர மற்றைய பாகங்களை துணியால் போர்த்தவண்ணம் கமலகாந்தனை யணுகி தாழ்ந்த குரலில் 'ஐயா! நான் தங்களையே தஞ்சமென்று வந்துள்ளேன். காப்பாற்ற வேண்டும். ஒருவேளை கைவிட்டால் என் கதி—ஐயோ—அதோ கதிதான்' என்றான்.

கமலகாந்தனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஏதோ கனவு காண்பதுபோல் தோன்றியது. சற்று கழிந்தபின் அவ்வாலிபனை நோக்கி, 'உங்கள் விருத்தாந்தமென்ன? என்னிடம் தஞ்சம் புகுந்ததாகக் கூறிய காரணமென்ன?' என வினவினான்.

'ஐயா! நான் ஒரு பாவி! மகாபாவி! சண்டாளன் நான். என் வரலாற்றை கூறுமலேயே அறிவீர்கள்' என்றான் வந்த வாலிபன்.

இவ்வாறு கூறக் கேட்ட கமலகாந்தன், 'இதென்ன விந்தை! இருளில் வந்து தஞ்சமென்றார்! காப்பாற்ற வேண்டுமென்றார்! அவருடைய விருத்தாந்தத்தை நானறிவேனென்கிறார்! நாமோ இவ்வூருக்குப் புதிது! ஒருவரையும் அறியோம்!' என்று தன்னுள் சிந்தித்தவனாய், 'ஐயா! நீங்கள் கூறுவது நகைப்பையே விளைவிக்கின்றதேயன்றி, விஷயம் யாதென அறியக்கூடவில்லை. நான் இவ்வூருக்குப் புதியவன். ஒருவரோடும் பழகிலேன். அவ்வாறிருக்க, நீங்கள் கூறுவதை நானெப்படி யூகிக்க முடியும்?' எனவே,

'ஐயா! இப்பொழுது அவ்வாறுதான் கூறுவீர்கள். நான் அவ்வரலாற்றைக் கூறின் புலனாகும். ஆனால், முன்னதாக என்னைக் காப்பாற்றுவதாக உறுதி கூறுங்கள்' என்றான் அவ்வாலிபன்.

'கவலை வேண்டாம். என்னால் கூடுமானால் காப்பாற்றுகிறேன்' என்றான் கமலகாந்தன்.

'அன்புள்ள தயாளரே! தாங்கள் கல்வியின் பொருட்டு இங்கு வரும்பொழுது கப்பலில் தங்களுக்கு தீங்கிழைத்தவன் நானே! ஐயோ, கூறவும் நா நடுங்குகின்றது! தங்களை கொஞ்சமும் நெஞ்சிரக்கமற்று கடலில் தள்ளிய பாதகன் நான், கொடிய சண்டாளன் நான்! மகாபாவி நான்! ஆனால் என் சுய உணர்ச்சியால் அவ்வாறு செய்யவில்லை. எல்லாம் அச்சண்டாளனின் தூண்டுதல்-கிருஷ்ணபுரி யுவஜமீந்தார் சண்டாளன்—கதிரேசனின் தூண்டுதலால் செய்தேன்.

அதனால் சிறைப்பட்டேன். அங்கு எனக்கேற்பட்ட கஷ்ட நிஷ்டூரத்தால், சிறைச்சாலையினின்று தப்பி வந்தேன். இப்பொழுது இங்கு எனக்கு சுற்றமில்லை, துணையில்லை, நிதியில்லை; தங்களையன்றி வேறு கதியில்லை. ஆகையால் நான் செய்த மலை போன்ற குற்றத்தை கடுகு போலெண்ணி மன்னித்து காத்து ரட்சிக்க வேண்டும்' என்று கூறி கமலகாந்தனை கையெடுத்து வணங்கினான்.

இதுகாறும் பொறுமையுடன் கேட்ட கமலகாந்தனுக்கு கோபம் பொங்கி எழுந்தது. ஆனால் மறுகணம் இரக்கம் குடிபுகுந்தது. 'ஐயா! மன்னித்தேன். இனிமேல் அப்பாதகன் சென்ற வழிதனையும் பின் தொடர வேண்டாம். என்னால் ஆகவேண்டுவது யாது?' என்றான்.

'ஐயா! கொஞ்சம் பொருளுதவி வேண்டும்' என்றான் அவ்வாலிபன். உடனழைத்துச் சென்று பொருளுதவி யனுப்பினான்.

என்னே உதாரகுணம்! தன்னை வஞ்சித்தார்க்கும் தயவு காட்டும் தகைமை! குணநிதி குணங்களிலெல்லாம் மேம்பட்ட குணம். இவ்வழியையே உலகம் பின்பற்றுக. (தொடரும்)

சிறுவன்:—அம்மா! தெருவில் ஒருவன் கத்திக்கொண்டிருக்கிறானே! அவனுக்கு ஏதாவது காசு கொடுக்கவேண்டாமா?

தாயார்:—யாரடா அவன்? பிச்சைக்காரனா?

சிறுவன்:—இல்லையம்மா, மிட்டாய்க்காரன்.

—கே. ஆர். ராஜகோபால்

'மனோ யாத்திரை'

—:o:—

[கா. தி. ஸ்ரீ]

சுகந்தமான தென்றல் காற்று அழகிய நந்தவனங்களில் புகுந்து மலர்களின் மணத்தைக் கொள்ளை கொண்டு ஜில்லென்று வீசுகின்றது. அருகில் ஓடும் அழகிய நீரோடையில் துள்ளியெழும் மீன்கள் அந்தி வெயிலில் பொன்னிறமாய் ஒளிர்கின்றன. மெத்தென்ற பசும்புற்றரைகள் யாவர் மனதையும் தம்பால் கவர்ந்திழுத்து அமரச் செய்கின்றன. மேல்திசையில் மேகங்கள் பற்பல ஒளி ரூபங்களுடன் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருக்கின்றன. குயில், மைனா முதலிய பக்ஷிகள் தங்கள் மதுரமான சப்தங்களால் காதுகளுக்கோர் நல்விருந்தளிக்கின்றன. இவ்வித இயற்கை வளங்களைக் கவனித்துக்கொண்டே மெய் மறந்திருக்கும் வேளையிலே,

திடீரென ஓர் வான்கோழி விண்ணிலிருந்து பறந்து வந்து, அச்சமற்று, அருகில் நெருங்கி 'குழந்தைகளே, கவலையுறுதீர்கள், வரும்வினை வந்தேதீரும், பொறுமையே பெருமை, மனோதிடம் மானிடர்க்கழகு, முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்' என்பனபோன்ற பற்பல நீதிகளைச் சொல்லி பின் நந்தவனத்தின் மதில்மேலேறி நின்று மயிலைப்போல் மாறி மாறி களிப்புடன் விளையாடி உள்ளே குதித்து மறைந்தது. இவ்வித ஆச்சரியத்தைக் கண்டு பின்தொடர்ந்து சென்று உள் இறங்கவும் ஒரு கற்பாறையின் பிளவு தென்பட்டது. அதை நோக்குங்கால் பல் நிறக் கற்களாலமைந்த படிக்கட்டுகள், கண்டோர் மனதைக் கவர்ந்து, எங்கே போகின்றோம், எங்கே இருக்கின்றோம், என்றறியாத விதமாய், கீழ்நோக்கியே இழுத்துச் சென்றன.

பொன்னிறமான இளம்வெயில். அழகிய பூங்காவனம். சொல்லற்கரிய பலவித புஷ்ப விருக்ஷங்கள், பூஞ்செடிகள், மலர்க்கொடிகள் செழிப்புற்று பல்நிறப் பூக்களைப் பூத்து நிலத்தில் பரப்பி நின்றன. அவைகளின் இடையிடையே செப்பனிடப்பட்ட ஒழுங்கான பாதைகளும், ஓரங்களில் புற்களும், ஆங்காங்கே பலவித மேடைகளும் காணப்படுகின்றன. அத்துடன் பக்ஷி ஜாலங்கள் தங்கள் இன்னிசைக் கீதங்களைப் பாடி காற்றில் கலக்கின்றன. இயற்கையான பல நீர்ச்

சுனைகள், தெப்பங்கள் நீழாவி? மண்டபங்களுடன் தெள்ளிய நீரை யுடைய அல்லி, செந்தாமரை, செங்கழுநீர் வெண்தாமரை முதலிய நீர்க்கொடிகள் படரப் பெற்று விளங்கின.

இவ்விதப் பூங்காவின் நடுவில் ஓர் மாளிகை தென்பட்டது. அதன் அமைப்பும் ஒளியும் கண்டோர் யாவரையும் பிரமிக்கும்படிச் செய்தன. அம்மஹால் நவமணிகளாலும் சலவைக் கற்களாலும் வெகு ரமணீயமாய்க் கட்டப்பட்டு, அருணனுதிக்கும் திக்கு நோக்கிய வாயிலையுடைத்ததா யிருந்தது. மாளிகையின் மேலேறி சுற்றுமுற்றும் நோக்குங்கால், பொன், வெள்ளி போன்ற வான ளாவிய மலைத்தொடர்கள் நாலா பக்கங்களிலும் அரண்போல் நின்று பசும் வெயிலில் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. ஆனால் ஆங்காங்கே பீரங்கிகளும் துப்பாக்கிகளும் வெடிப்பதற்குச் சித்தமாய் அரண் மனையை நோக்கி நிறுவப்பட்டிருந்தன. கலைமகள் உலகமென விளங்கும் இப்பிரதேசத்தில் மேற்கண்ட யுத்த ஆயுதங்களை நோக் குங்கால், அவை மனதில் திகிலை உண்டுபண்ணின. அம்மாளிகை ஜனசஞ்சாரமற்று தோன்றிற்று.

எனினும் மனோதிடத்துடனே உபாசனா தேவியாகிய ஆதிபரா சக்தியைத் தியானித்து மெய்யை மறைத்துப் பின் கீழிறங்கி மாளி கையை நோக்கினபோது, கதவு பூட்டப்பட்டு வெளியே முத்திரை வைக்கப்பட்டிருந்தது. உள்ளே மின்சார விளக்குகளின் ஒளி தரையில் குவித்திருக்கும் நவரத்தினங்களில் தாக்கி, பற்பல நிறங் களுடன் பிரதி பலித்து திறந்த ஜன்னல்களின் வழியே வீசுகின்றது.

பலகணி வழியாய் உள்நோக்குங்கால், சர்வ லக்ஷணமும் பொருந்திய ஓரிளம் பெண் ஏதோ சிந்தையி லாழ்ந்தவளாய் அங்கு மிங்கும் உலாவிக்கொண்டிருந்தாள். அவளது ஒப்பிலா தேஜஸ், மாசு படிந்து உற்சாகக் குறைவுடன் காணப்பட்டது. அம்மாதின் 'திருமுக மண்டலம்' அவள் அவ்விடத்தின் எஜமானி யெனவும் ஏதோ ஒரு வித வருத்தம் அவளது மனதை வாட்டுவதாகவும், அகத்தது காட்டும் பளிங்கியென விளங்கியது.

'நாதா, நாதா' என எழுப்புகிறாள். அருகில் படுத்திருந்த ஓர் புண்ணிய புருஷனை. 'எனக்கும் எனது மக்களுக்குமுள்ள மனோ வேதனையை என்று நீக்குவீர்கள்? சதா சர்வ காலம் தூங்கியவண்ண மிருந்தால் என்றுதான் விமோசனம்? என்று தனது செவ்விய வாயிதழ்களால் மதுரமாய் மொழியும் சப்தம் காதில் விழுகின்றது.

'என் அன்பே, தன் கைப்பொருளையும் தன் ஆயுதத்தையும் பிறன்கையிற் கொடுக்கும் பேதை பதரே' என்பதை நீ அறியாயோ? அதோ பார், நம் குழந்தைகளுக்கு அளித்த நேமி ஆயுதங்களை அவர் கள் கையாடும் திறமையைவிட்டு, இறப்பில் கட்டித் தொங்கவிட்டு புகையடையச் செய்திருக்கின்றனர். அறியாப் பாலர்கள்போல், அவர்

கள் உலக அனுபவமும், ஊக்கமும், போதிய அறிவும் காணாது, கவலைக் குள்ளாகிறார்கள். வயது ஆக ஆகத்தானே, அவர்கள் கொஞ்சங் கொஞ்சமாய் தங்கள் தங்கள் கடமைகளை அறிந்து வருகிறார்கள்.'

'கிளியே! மெய் வருந்தாதே, அவர்களுக்கு நீயாவது புத்தி புகட்டி நேமி ஆயுதங்களைக் கையாடச் சொல்லி, ஒற்றுமையாய் வாழச் செய். இன்னும் கொஞ்சகாலம் உன் பொறுமையைக் கையாண்டிரு. என் யோகமாகிய தூக்கத்தைக் கலைக்காதே இனி' என்று சொல்லிவிட்டு அப்புறம் புரண்டு படுத்து கண்களை மூடினார் அச்சுந்தர புருஷன்.

கணவனின் இன்சொல் ஏற்று, அந்நங்கை, 'குழந்தைகளே குழந்தைகளே' என அழைத்ததும் பற்பல கடையுடை பாவனைக ளோடு கூடிய சிறியவர்களும் பெரியவர்களுமாக அநேகம் பிள்ளைகள் ஒருவரை யொருவர் இடித்துத் தள்ளிக்கொண்டு 'அம்மா, அம்மா' என ஓடி வந்து சுற்றிக்கொண்டனர். ஒவ்வொருவரையும் அன்புடன் வாரி யெடுத்து முத்தமிட்டுக் கீழேவிட்டு 'பாலர்காள், உங்களுக்குள் ஒற்றுமையில்லை; உங்கள் அஜாக்கிரதையாலன்றோ இந்த பூதப்படை களுக்கு அடிமையாக நேரிட்டது. நம்மை இவ்வறையிலடைத்து நம் பொருள்களை வாரிக்கொண்டுபோகும் பைசாசங்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டாமா! அறையிலடைபட்டு சுவாதீன மற்று, அவர்களால் இடப்படும் கால்வயிறுகூட நிறம்பாத கஞ்சியை உண்டு உயிரை வைத்திருக்கும்படியும் நேரிட்டதே! சிறுவர்களே, நீங்கள் உங்களுக்குள் யாதொரு விரோதமுமின்றி ஒற்றுமையுடன் உங்கள் நேமி ஆயுதங்களைக் கையாடி 'விர்' என்று சுழற்றி அப்பிய சித்து வாருங்கள்! உங்கள் விலங்குகளைத் அறுத்துக்கொள்ள போதிய அறிவு பெறுங்கள்' என்று புத்தி சொல்வதை, அப்பிள்ளைகள் தாய் முகம் நோக்கியவாறு செவி கொடுத்து கேட்கின்றனர்.

அவ்வளவிலே பூதப்படைகள் ஆர்பரித்துவரும் சப்தம் கேட்டது. 'அதோ புதியதோர் நாவாடை தென்படுகின்றது, பிடி பிடி' என்று தடிகள் தூக்கி ஓடிவரவே 'ஐயோ, இல்லை, இல்லை, இனி மேல் வரவேயில்லை' என்று கூறிக்கொண்டே ஓட்டம் ஓட்டமாய் பழையபடி படிக்கட்டு வழியே மேலேறி 'பிழைத்தேன் பிழைத்தேன்' என புல்லாந்தருசுக்கு வந்து விழுந்த பிறகுதான் அஜீரணத்திற்கென வயித்தியர் கொடுத்த (பூரணதியோ என்னமோ) லேகியத்தின் மயக்கமும் தெளிவுற்றது. இதன் குணம் எப்படி இருக்கிறதென்று பார்த்தீர்களா?

உபாத்தியாயர்:—(பையனைப் பார்த்து) உன் தலையில் களிமண் இருக்குதாடா! எது சொன்னாலும் தெரியவில்லையே!

பையன்:—ஆமாம் சார். சிறுவயதில் தின்றிருந்தாலும் தின் திருப்பேன்.

—எஸ். எம். ஜி. சுல்லா

கருதுவோர் மணமா? அல்லது காதல் மணமா?

[V. பெரியசாமி]

விவாக முகூர்த்தம் என்றால் அன்று ஏராளமான ஜனங்கள் குழுமி ஆனந்திப்பார்கள். சிறுவர் சிறுமிகள் தாங்கள் இனிமேல் அநுபவிக்கவிருக்கும் இன்ப மணவாழ்க்கையை எண்ணி எண்ணி மனம் பூரிப்பார்கள். மணமகளையும் மணமகனையும் மணவறைக்கனுப்பும் சமயம் வாலிபர் முதல் வயோதிக கிழவர் கிழவிகள் ஈருக தம்பதிகளை வாழ்த்தி அனுப்புவதோடு மணமகனைப் பார்த்து 'அப்பா! பெண் ஒன்றும் அறியாதவள். எல்லாம் நீ தான் கவனித்துக் கொள்ளவேண்டும்' என்றும், இன்னும் ஏதேதோ கேலி விலாஸமாக சொல்லி ஆனந்தமாரி வருஷிப்பதுபோல் மகிழ்வெய்து மணவறைக்கனுப்புவார்களல்லவா?

அந்தக் களிப்பும் குதூகலமும் மாறிவிடும் என்று நான் ஐயமறச் சொல்வேன் எங்களூர் திருமண மொன்றில். அஃதெங்ஙனமென்று நீங்கள் ஐயுறலாம். சொல்லுகிறேன் கேளுங்கள். எங்களூர் சிதம்பரம் செட்டியாரென்பவரைத் தெரியாதார் இலர். அவர் மிகுந்த ஆஸ்தி உடையவர். அவர் மகள் மாணிக்கவல்லிக்கோ வயது 18. புஷ்பவதியாகி மூன்று வருடங்கள் பறந்து சென்றன. ஏன் இன்னும் மணமாகவில்லையென்றால், நல்ல மணமகன் கிடைக்காததுதான் காரணம்.

ஒருநாள் சிதம்பரம் செட்டியார் ரெங்கநாதன் செட்டியார் வீட்டை நாடிச் சென்றார். மாலை 4 மணி இருக்கும். ரெங்கநாதன் செட்டியார் ஏதோ ஜோலியாக வீட்டிற்குள் இருந்தார். நம் செட்டியாரைக் கண்டதும், 'வாருங்கள்! வாருங்கள்!! என வெகு அன்போடு வரவேற்றார். பின்பு ரெங்கநாதன் செட்டியார் (சிதம்பரம் செட்டியாரைப் பார்த்து) என்ன விசேஷம் சௌக்கியம்தானே?' என்றார்.

சிதம்:—எல்லோரும் சௌக்கியம்தான். தங்கள் சௌக்கியம் எப்படி?

ரெங்க:—நானும் சௌக்கியம்தான்.

சிதம்:—ஓர் விஷயம்; அதைத் தங்களிடத்தில் கேட்கவேண்டும்.

ரெங்க:—என்ன விஷயம், சும்மா சொல்லுங்கள்.

சிதம்:—என் மகள் மாணிக்கவல்லியை தங்கள் மகனுக்கு மணம் செய்துவைக்க வேணுமென்பது எனக்கு ஓர் அவா, அதற்குத்தான்.

ரெங்க:—(சற்று மௌனமாக) 'பையன் சிறுவனாச்சுதே. இப்பொழுது கல்யாணம் செய்தால் பின்பு தோதாக இராதே' என்றார்.

சிதம்:—அடா! இதற்குத்தானா! என்ன போங்கள். இதையா சொல்லுவது. தங்கள் மகன் பேரால் பாங்கியில் அறுபதாயிரம் ரூபாய் போட்டுவைக்கிறேன். மணம் செய்வித்ததும் பினங்குக்கு நம்ம கடைக்கு அனுப்பிவைத்து கொஞ்சநாள் சென்றபின் வந்ததும் எல்லாம் ஒத்துப்போய்விடும்' என்றார்.

இதைக்கேட்டதும் பார்க்கவேணுமே நமது ரெங்கநாதன் செட்டியாரை. தலையை அசைத்தவண்ணம் அப்படியே சொக்கிவிட்டார். தான் இருப்பது பூலோகமோ சுவர்க்கலோகமோ? என்று எண்ணிவிட்டார்போலும். பின்பு ஏதோ ஓர் முடிவுக்கு வந்தவர்போல 'எல்லாம் கடவுள் சித்தம். நீங்கள் இவ்வளவு அவாவோடு கேட்பதால் நான் என்ன சொல்வது? தங்களிஷ்டப்படியே செய்வோம்' என்றார்.

சிதம்:—இம்மாதத்திலேயே கல்யாணத்தை வைத்துக்கொள்வோமே.

ரெங்க:—ஆஹா! அப்படியே வைத்துக்கொள்வோம்'

பின்பு சிதம்பரம் செட்டியார் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டவராய் ரெங்கநாதன் செட்டியாரிடம் விடைபெற்றுக்கொண்டு தம் இல்லம் வந்து சேர்ந்தார்.

இனிச் செட்டியாரின் புதல்வி மாணிக்கவல்லியின் அழகின் வடிவத்தைக் கவனிப்போம். இம்மடமயிலாள் தேகம் என்னவோ உதித்துப் பெருத்து நல்ல கருப்பு நிறமாகக் காணப்படுகிறாள். இச்சிங்காரியின் மேனி நிறத்துக்கும் காக்கை நிறத்துக்கும் போட்டி இட்டால் அப்போட்டியில் நிச்சயமாக நம் மாணிக்கவல்லியே வெற்றியடைவாள் என்றால், இம்மாதரசியின் அழகை வர்ணித்துரைக்கவும் வேண்டுமோ?

இத்திருமண விஷயம் நம் மணமகன் சோமுவின் அன்னை அறிந்து ஆற்றொணா வியப்பும் அருவருப்பும் கொண்டவளாய்த் தன் கணவனிடத்தே சென்று 'நம் சோமுவுக்கா மாணிக்கவல்லியைச் செய்ய நிட்சயித்து விட்டீர்கள்? ஹா என்ன கொடுமை? இப்படியும் செய்வாருண்டா? எனக்கு அம்மணம் சம்மதமில்லை. நம் சோமுவுக்கு அவளைச் செய்வதாயிருந்தால் என் முகத்தில் யாரும் விழிக்க

வேண்டாம். எவ்விதமேனும் தொலையுங்கள்' என்று மடமடவென தெம்மாங்கு ராகத்தைப் பிரயோகம் செய்தாள்.

இதைக் கேட்டதும் நம் செட்டியார் என்ன சும்மா இருப்பாரா? தொடுத்தார் அடுத்த பல்லவியை. 'அடி மீனுக்ஷி, ஏன் என்மேல எரிந்து விழுகிருய்? விஷயம் இன்னும் விளங்கவில்லைபோல் தெரிகிறது. பைத்தியகாரி! நம் மகன் பேரால் பாங்கியில் அறுபதாயிரம் ரூபாய் போட்டு வைப்பதாகச் சொன்னார்கள். அதனைல்லவோ நான் ஒப்புக் கொண்டேன். இல்லையேல் நானு சம்மதிப்பேன். உனக்கே தெரியாதா?' என்ருர்.

அம்மாளுக்கு வந்த ஆவேசம் ரூபாய் அறுபதாயிரத்துடன் அடக்கம். 'நம் மகன் பேராலாவென்று' அதி ஆவலோடு கேட்டாள்.

ரெங்:—உம், நம் மகன் பேராலேதான். 'இனி நமக்கென்ன குறை வந்துவிட்டதடி, யோகம்' என்று ஒரு குதூகலக் குலுக்குக் குலுக்கி விட்டார்.

சிறுவன் சோமுவின் வயதோ 15. அவன் சிவந்தமேனியும், அழகிய எழிலுடம்பும், நாகரிக அழகும், வாய்ந்து வடிவாகக் காணப்படுகிருன். இச்சுந்தர வாலிபன் இப்பொழுது ஸ்கூலுக்குப் போய் வருகிருன். நாங்கள் காணும்பொழுதெல்லாம் அவனைப் பார்த்து 'கல்யாண மாப்பிள்ளை ரூபாய் அறுபதாயிரம்' என்றதும் அவனையறியாமல் அடங்காக் கோபம் மூக்கின்மேல் வந்து விடுகிறது.

வாசகநேயர்களே! முன்புசொல்லிய கலியாண குதூகலச் செய்தியில் தம்பதிகளை ஆசீர்வதிப்பதோடு மணமகனுகிய மாப்பிள்ளையைப் பார்த்து கேலி விலாஸமாக 'பெண் அறியாதவள், எல்லாம் நீ தான் கவனித்துக் கொள்ளவேண்டும்' என்று சொல்லி ஆனந்தமாக மணவறைக் கனுப்புவார்களல்லவா? இத்திருமணத்தில் யாரிடம் சொல்லி இன்புறுவார்களென்பதுதான் எனக்குச் சந்தேகத்திலும் ஓர் சந்தேகம்.

இம்மங்கல விவாகம் அடுத்தமாதம் நடைபெறுவதாக வதந்தி உலாவுகின்றது. இந்த நாகரிக விவாகத்தை காதல் மணம் எனச் சொல்வதா? அல்லது கருதுவோர் மணம் எனச் சொல்வதா? என்பதைத் தமிழரசின் மூலம் எனக்குச்செய்தி அனுப்புங்கள்.

உபாத்தியார்:—ரங்கனைப் பார்த்து 'கத்திப்படியடா' என்ருர்.

ரங்கன்:—கத்தி எங்கேயாவது படிக்குமா சார்?

பக்கத்திலிருந்த தெலுங்குப் பையன்:— 'அட்டக்காது' ரங்கா என்ருன்.

ரங்கன்:—அட்டைக்குக்கூட காது இருக்கிறதாடா, என்ன ஆச்சரியமாக இருக்கிறதே! என்ருன். —பி. எம். ஜானகிராம்

கருத்தும் கல்வியும்

[K. வீரப்ப முதலியார்]

கருத்தென்றால் அபிப்பிராயம், பயன், எண்ணம், கவனம், குறிப்பு, சிந்தனை, யோசனை, விவேகம் என்ற பலபொருள் குறிக்கும் ஒரு சொல்.

கல்வி என்றால் இங்கே நூற்படிப்பினை குறிக்கும். கருத்தின்றிக் கல்வியில்லை.—கற்கவும் முடியாது. ஆனால் கல்வியில்லாத உயர்திணை, அஃறிணையாகிய உயிர்ப்பிராணிகளிடத்தும் எண்ணமிருப்பதைக் காண்கின்றோம். அவைகள் மணமில்லா மலர்போலும், உயிரில்லா உடம்புபோலும் ஒன்றிற்கும் உதவாதொழிகின்றன.

காவியங்களாகவும், ஓவியங்களாகவும், சிற்பங்களாகவும், மக்களுக்கு எடுத்துக்காட்டி இன்பமூட்டுந்திறன், பகுத்தறிவும் படிப்பும் கலந்த இசையாளருக்கே உண்டு. கல்வியில்லாத கருத்து, புதைத்து வைத்த தனத்தோடொக்கும். புதைத்துவைத்த தனம் பிறருக்கும் பயன்படாது புதைத்து வைத்தவனுக்கே சிலசமயங்களில் வைத்த இடம் தெரியாமல் மறந்தும், மறைந்தும் உதவாதொழியும்.

மேலும் சில கல்லாதாரிடத்து சிறந்த கருத்துக்கள் தோன்றினும், கற்றோரும், மற்றோரும் கவர்ச்சி கொள்ளும்விதமாக அவைகளை சொல்லுந்திறனற்று, பரந்த உலகத்தில் நிறைந்து நிலைபெறும், வழியின்றித் தேய்ந்து மாய்ந்தழியும். இன்று நம் சிந்தைக்கும் செவிக்கும் இன்பமூட்டும் செந்தமிழ்ப்பாக்களும், நூற்களும், கருத்தென்னும் மங்கையோடு கல்வி என்னும் ஆடவன் புணர்ந்து, கருத்திடைக் கருவுயிர்த்துக் கவிஞர் அகத்திடைப் பிறந்து, கற்றோரால் வளர்க்கப்பட்ட குழந்தைகளன்றோ!

நம் அந்தமில் செந்தமிழ் நாட்டிற்கு அறிவுச்சுடர் கொளுத்தி, புத்துயிரும், புத்தின்பமும் அளித்த பாரதியாரின் பரந்த எண்ணங்கள் வாழ்க்கையில் அவர்கண்ட மாண்புகள், பக்தி, வீரம், இயற்கைக் காட்சியில் தான் அனுபவித்த இன்பம், இன்னோன்ன பிறவும் காவிய உருவெடுத்து, நம் கண்முன்னே காட்சியளிப்பதற்குக் காரணம் அவர்கற்ற கல்வியன்றோ? அனுபவத்தால் பலநாட்

சென்று நாம் அறிந்துகொள்ளும் விடயங்களையும், பலதேசத்தின் பழக்க வழக்கங்களையும் கல்வியால் சிறிது நேரத்தில் தெரிந்து கொள்கிறோமன்றோ?

கிளி, மைனா முதலிய பறவைகளை நாம் பேசப் படிக்கவைத்தால், பேசுகின்றன. அவைபோல் நமக்கும் தாய் தந்தையர் சிறிதளவு பேசக் கற்பித்ததைப் பொருள் தெரிந்து பேசுகின்றோமென்பதன்றி, கல்வி கற்காவிட்டால் அவைகளைவிட நாம் எவ்வாறு உயர்ந்தவர்களாக எண்ணிக்கொள்வது? சிலர் பகுத்தறிவினாலென்று பகாலாம். அப்பகுத்தறிவோடு, படிப்பும் கலந்து பயன்தாராவிடில் நம்வாழ்க்கையில் இன்பமேது, அமைதியேது, முற்போக்கு ஏது? கல்வியில்லாத மக்களை மாக்களென்றே நமது திருவள்ளுவரும்.

'விலங்கொடு மக்களனையரி லங்குநூல்
கற்றாரோடேனையவர்'

எனக்கூறிப் போந்தார். மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும், ஏற்றத்தைத் தந்து நமக்கு இன்பம் அளிக்கவல்ல கல்வியை மறுக்கலாமா?

எனவே கல்வியும் கருத்தும் கலந்தே ஒருவனுக்கு நன்மையைச் செய்யுமென்றுணர்ந்தோம். ஆகையால் மக்களைப்பெற்று வளர்த்த மாதாபிதாக்களே, காப்பதற்கு வகையின்றி கணக்கற்ற மக்களைப் பெற்றுவிட்டீர்கள். உங்கள் கடமைகளில், கல்விகற்கும் குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதும் ஒன்று என்று உணருங்கள். உணராதாருக்கு உரையுங்கள். குறைந்தது ஆரம்பப்பாடசாலைப் படிப்பாகிய ஐந்தாவது வகுப்புவரையிலாகிலும் கற்கும்படிவிட்டு அப்படிப்பு மட்காமலிருக்கும் பொருட்டும், உலகியல், அரசியல் முதலிய சங்கதிகளை அறியும்பொருட்டும் பல சஞ்சிகைகளை வரவழைத்து மக்கட்கு வழங்குங்கள். அப்பொழுது நாம் கருதிய இன்பம் கைகூடுமானதால் அதற்கு எல்லாம்வல்ல இறைவன் துணை புரிவாராக.

காதலன்:—என் அருமைக் காதலி! நீ என்னைத் தவிர வேறு யாராவது முத்தமிட இசைந்தாயா?

காதலி:—ஆம்!

காதலன்:—அப்படியானால் என்னைத் தவிர உனக்கு வேறு காதலர்கள் உண்டா?

காதலி:—உங்களைத் தவிர வேறு காதலனும் கிடையாது.

காதலன்:—அப்படியானால் உன்னை யார் முத்தமிட்டது?

காதலி:—என் அருமைத்தாய் தந்தையர்கள். —S. செல்லப்பா

கமலாட்சி அல்லது காரிகையின் களங்கமற்ற காதல்

[மயிலை எஸ் ஐ. நாதன்]

(நமது தொடர்கதை)

7-வது அத்தியாயம்

காதலன் காதலி நிலைமை

காலமோ இளவேனிற்காலம், பொழுதோ கதிரவன் மேற்கு திசையில் சாய்ந்துவிட்டான். இடமோ அழகிய நந்தவனமாயினும் அதைச் சுற்றிலும் கற்பாறைகளால் அமைக்கப்பட்டு கொஞ்சம் கரடுமுரடானதாக இருந்தது. அவ்வனத்தின் மத்தியில் சிங்காரிக்கப்பட்டிருந்த ஓர் அழகிய ஆசனத்தில் ஓர் முரட்டு மனிதன் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனுடைய லக்ஷணம பாதாளலோகத்திலிருக்கும் ராக்ஷசர்களுக்கு சமானமாகும். பறட்டைத் தலையும், கரடு முரடான பருத்த முகமும், பெருத்து தடித்த உதடும், சப்பை மூக்கும், சாளவாயும் பனம் பழத்தினுங் கரியமேனியும், குட்டைகையும், நீண்ட காலுமுடைய அம் மனிதனை எவர்தான் வெறுக்கமாட்டார்கள்.

அவன்தான் அக்கொள்ளை கூட்டத்தாரின் தலைவனான வீரப்பன் என்பவன். அவனைச் சூழந்து சில முரட்டு மனிதர்கள் நின்றுகொண்டும் உட்கார்ந்துகொண்டுமிருந்தார்கள். அவர்களில் தனக்கு மிகவும் வேண்டியவனிடம் கமலாட்சியின் அழகைப்பற்றியும் அவளது குணத்தைப் பற்றியும் விசாரித்தான். அதற்கு அவன், 'அப்பப்பா! அவளுடைய அழகை என்னவென்று சொல்லுவது? அவளுடைய கூந்தலோ கரியமேகம்போலுள்ளது. அவள் சூடியிருக்கும் புஷ்பமானது அக்கரிய மேகத்தினிடையே

தோன்றும் நட்சத்திரங்கள் போன்றதாயிருக்கிறது. அக்கூந்தலை அவிழ்த்து தொங்கவிட்டால் ஆலம் விழுதைப்போல் வளர்ந்து படிப்படியாய்ச் சரிந்து இருக்கின்றது. அவளது முகம் சிவப்பாக வெகு அழகாக இருக்கிறது. மெல்லிய கழுத்தும், சிறுத்த இடையும், வாழைத் தொடையுமுடைய அவள் மிகவும் அழகாகத் தோன்றுகிருள். அவளது குணமோ தங்கம் போன்றது. அவளைப் பிடித்து சிறைபடுத்திய போதிலும் எங்களிடமும் மற்ற வேலையாட்களிடமும் ரொம்பவும் பட்சமாகவும், பொறுமையாகவும் பேசுகிருள்' என்று கூறினன். இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த அத்தலைவன் அவளை தானே மணந்து சுகமாக வாழவேண்டுமென்று கருதிவிட்டான்.

பின்னர் அத்தலைவன் தன்னை ஒருவிதமாக அலங்கரித்துக்கொண்டு கமலாட்சியிருந்த அறையை நாடிச் சென்ருன். அவன் அலங்கரித்துக்கொண்டிருந்தது, துடைப்பக்கட்டைக்கு பட்டுக் குஞ்சம் கட்டினதுபோலிருந்தது. அப்போது ஆகாயத்தில் சந்திரன் குளிர்ச்சியான பிரகாசத்தை வீசிக்கொண்டிருந்தான். அவன் தன் அறையை நாடி வந்ததும் கமலாட்சி, அவனை ஓர் ஆசனத்தில் அமரும்படி கூறிவிட்டு, தான் ஒரு பக்கமாக நின்றுகொண்டு, வெளிப்பக்கம் தன் பார்வையைச் செலுத்தினுள். அப்போது அத்தலைவன் அவளை நோக்கி, 'ஓ என் உயிருக்குயிரான பெண்மணியே! உன் அழகையும், குணத்தையும் கண்டு மெச்சினேன். இதுவரைக்கும் கலியாணம் வேண்டியதில்லை யென்றிருந்த எனக்கு உன்னை கண்ட நாள் முதற்கொண்டு உன்னையே கலியாணம் செய்துகொண்டு நாமிருவரும் ஏகபோகமாக இருக்கலாமென்று உறுதி கொண்டேன். நீயும் இக்கொள்ளை கூட்டத்துக்கு இராணியாக இருந்து உன் இஷ்டம்போல் நடந்து வரலாம். என்ன சொல்லுகிருய் பெண்மணி?' என்று ஆசையோடு கேட்டான். இதைக்கேட்ட அவள் ஈயத்தைக் காச்சி காதில் ஊற்றினதுபோல் துடிதுடித்து, வெட்கி, ஒன்றும் பதில் பேசாமல் தன் விதியை நினைத்தவாறு அவ்விடமே சிலைபோல் நின்ருள்.

வீரப்பன்:—பெண்மணியே! நான் சொல்லுவது உனக்கு விளங்கவில்லையா? நீ எப்படியாவது என்னைத்தான் மணந்துகொள்ள வேண்டும்.

கமலாட்சி:—ஐயா! நான் கலியாணமே செய்து கொள்ளுவதில்லை என்று தீர்மானித்துவிட்டேன். ஆகவே அவ்விஷயத்தைவிட்டு வேறு வார்த்தை பேசவேண்டும்.

வீரப்பன்:—நானும் முதலில் அப்படித்தா னிருந்தேன். இப்போது உன்னைக் கண்டு நான் கலியாணம் செய்து கொள்ளலாம் என்று நினைக்கவில்லையா? அதுபோல் நீயும் என்னைப் பார்த்து கலியாணம் செய்து கொள்ளுவாய்.

கமலாட்சி:—சரி, சரி, எனக்கு அவ்விஷயத்தில் விருப்பமே கிடையாது. நான் கன்னியா ஸ்திரிபோல்தான் வாழப் போகிறேன்.

வீரப்பன்:—முடியாது என்னைத்தான் நீ மணமுடித்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் உன்னை யார் சும்மா விட்டார்கள்?

என்று கூறிக்கொண்டே தன் வேலையாட்களை கூப்பிட்டான். அதற்குள் கமலாட்சி 'இப்போது இம்முரடனுடன் நாம் வாதாடினுல், இவன் ஆட்களைக்கொண்டு நம்மை ஏதாவது செய்யக்கூடும். இவ்வுடலை அவர்கள்

தீண்டவும் கூடாது. ஆகையால் நாம் கலியாணம் செய்து கொள்ளுவதாக சொல்லிவிட்டு, அதற்குள் நாம் எப்படியாவது இவ்விடத்தைவிட்டு தப்ப வழிபார்க்க வேண்டும்' என்று தனக்குள் கருதி அத்தலைவனை நோக்கி, 'ஐயா! நான் தங்கள் மனதை சோதித்துப் பார்த்தேன். நான் தங்கள் இஷ்டம்போல் கலியாணம் செய்து கொள்ளுகிறேன். ஆனால் நான் 6 மாத காலம் நோம்பு இருக்கவேண்டும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தேவதைக்கு பூஜை செய்ய வேண்டும். இது முடிந்த 6-வது மாதம் தங்களை கலியாணம் செய்து கொள்ளுகிறேன். அதுவரைக்கும் எந்த ஆடவனும் என்னைவந்து பார்க்கக் கூடாது. பெண்களின் மூலமாகவே காரியம் எல்லாம் நடக்கவேண்டும்' என்று சிறிது புன்னகையோடு, இதுவும் விதியோ என்று நினைத்துக்கொண்டு, கூறினாள். இதைக் கேட்ட அத்தலைவன் சந்தோஷமடைந்து அவ்வாறே செய்வதாக கூறிவிட்டு போய்விட்டான். அந்நாள் பரியந்தம் அவளிடம் ஒரு ஆடவனும் செல்வது கிடையாது. பெண்களின் மூலமாகவே அவளுக்கு வேண்டியவைகள் எல்லாம் நடந்துகொண்டு வந்தன.

இப்படியாக நாட்கள் கழிந்துகொண்டு வருகையில் ஒருநாள் கமலாட்சி தன்னறையில் ஓர் மூலையில் உட்கார்ந்துகொண்டு, 'ஐயோ! தெய்வமே நானெந்த ஸ்திரியை புருஷனுடன் கூடி வாழ வெட்டாதபடி செய்தேனோ! எந்த சதிபதிகளை வாழ ஒட்டாத நிலைமையிலடித்தேனோ! காதலித்த எந்த ஆடவர் பெண்டிர்களின் காதலை அழித்தேனோ! ஓ ஜெகதீசா! நான் எந்த மகத்தான பாவத்தைச்செய்து இப்பிரபஞ்சத்தின்மீது தோன்றினேனோ, அனாதரட்சகா! நான் எந்தப் பிறவியில் செய்த தீவினைப் பயனோ, இகத்தில் பதரான இப்பெண் ஜென்மத்தை எடுத்து இக்கொடிய திருடர்களிட சிக்கினேன்.

'என்செயலாவதி யாதொன்றுமில்லை யினித் தெய்வமே
யுன்செயலே யென்றுணரப் பெற்றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றுமில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ விங்ஙனேவந்து மூண்டதுவே'

என்று கமலாட்சி பலவிதமாக சிந்தனைகொண்டு தன் விதியை நினைத்துக் கொண்டு, இருகரங்குவித்து கண்ணீர் ததும்ப, 'கருணைக்கடலே, என்னை நல்ல குடும்பத்தில் புத்திரியாக பிறப்பித்து, அன்றுமுதல் இந்நாள் பரியந்தம் கஷ்டமென்பதை கொஞ்சமும் அனுபவிக்காமல் என்னை சீரும் சிறப்போடும் வளர்த்துவந்த எனக்கு, இவ்வித கஷ்டங்களை கொடுத்தால் ஏ! கருணைக் கடலாகிய கடவுளே! நான் எப்படித்தான் சகிப்பேன்? இதுவும் உன் திருவருளாயின், பாவியாகிய யான் அக்கஷ்டத்தை அனுபவித்தே தீருவேன்' என்று பலவிதமாக பகவானைத் துதித்துக்கொண்டு வந்தாள். பின்னர் சிறிது பொறுத்து, 'ஏ! கருணாகரி! நான் இவ்வித கஷ்டங்களை அனுபவிக்க நேரிட்டதினாலன்றோ உமக்குரிய பல திருப்பெயர்களை இப்பாவியின் வாயின்று பன்முறை சொல்லித் துதிக்கத் தகுந்த பாக்கியத்தையாவது பெற்றேன்' என்று கடவுளைப் பார்த்து தோத்திரிப்பாள்.

பின்னர் தன் காதலனைப்பற்றியும் அடிக்கடி பின்வருமாறு சிந்திப்பாள். "எனது மறைவால் என்னருமைக் கண்மணியாகிய எனது காதலர் எவ்வாறு

மனம் சகித்தாரோ, எவ்வாறு அவர் மனங் கொதித்ததோ! ஐயோ கடவுளே யான் ஒன்றும் அறிகிலேனே! என் ஆருயிரை எப்போதுதான் பார்பேனோ? அல்லது ஒரு வேளை பார்க்காமல் இவ்விடத்திலேயே உயிர் துறப்பேனோ? என் அன்பே! அன்று பூந்தோட்டத்தில் என்னையன்றி வேறு எவரையும் மணம் செய்து கொள்ளமாட்டேன் என்று உறுதி கூறினீர்களே, நானும் உங்களையே மணந்து உங்கள் ஆவலை பூர்த்தி செய்வதாக உறுதிமொழி கூறினேனே. நான் அவ்வார்த்தைகளை நினைக்குந்தோறும் என் மனமானது அனலிற்பட்ட மெழுகுபோல் உருகுகின்றதே இவ்வித நிலைமையிலிருக்கிற நான், எவ்விதம் தப்பி உங்களது திருமேனியை கட்டியணைக்கப் போகிறேன். காதலரே! என்னை பல விடங்களிலும் தேடி காணாததினால், தாங்கள் வேறு கலியாணம்செய்து கொண்டீர்களோ? அல்லது என்னை நினைத்து ஏக்கம்பிடித்து அல்லும் பகலும் வருந்துகிறீர்களோ ! எவ்விதத்திலாவது தாங்கள் என்னை மறந்துவிட மாட்டீர்களென்பது திண்ணம். என் கண்மணி! ஒரு நிமிஷமேனும் தங்களை மறந்திருக்க முடியவில்லையே. அடே! என் கண்ணாளா! என் திகட்டா தெள்ளமிர்தமே! இனி யான் எப்போது உங்களுடைய கமலமுகக் காட்சியைக் கண்டுகளிப்பேன்? உலக மின்னதென்பதையும், கலியாணமென்பது இன்னதென்பதையும் கண்டு மகிழலாமென்று இவ்வளவு நாட்களாக ஆவலோடு காத்திருந்தேனே. அவைகள் எல்லாமிப்போது பகல் கனவுபோலாயிவிட்டதே. நான் என்ன அப்படி பெரிய மகத்தான பாவம்செய்து இப் பிரபஞ்சத்தின்மீது தோன்றினேனோ!' என்று கூறி அப்படியே மெய்மறந்து மூர்ச்சையானாள்.

இது நிற்க, முன்னதிகாரத்தின் இறுதியில் சோமநாதனைக் காப்பாற்றி அவனை வீட்டுக்கனுப்பிய சாமியார், விபூதி பட்டை பட்டையாக சாற்றிக் கொண்டு, மோவாய்க்கட்டையிலும், கன்னத்திலும் தாடி வளர்ந்து நீண்டு வயிறு வரையில் தொங்க, இடுப்பில் காவி வஸ்திரம் கட்டிக்கொண்டும், மேலே ஓர் காவி வஸ்திரம் போட்டுக் கொண்டும், மடியில் விபூதிப்பட்டையும், கையில் ஒரு விசிறியும், கக்கத்தில் ஒரு பெரிய புத்தகமொன்றும் கொண்டும் பாதங்களில் பித்தளைக்குமிழிட்ட பாத குறடுடன் தன் சிஷ்யன் ஒருவனோடு வழி நடந்து நெடுகப் போய்க்கொண்டிருந்தார். முடிவாக ஓர் சிற்றூரை யடைந்தார். அவ்வூரில் சுமார் 20, 25 வீடுகளும், ஊரிற் கருகே ஓர் சிற்றாறும், அதன் கரைகளில் தென்னை பனை முதலிய மரங்களுமிருந்தன. அதன் அருகில் ஒரு சிறிய பிள்ளையார் கோவிலுமிருந்தது. ஒருநாள் அவ்விடத்தில் கிடைத்த காய் கனிகளை புசித்துவிட்டு இருவரும் காலத்தைக் கழித்துக்கொண்டு வருங்

காலத்தில் பிற்பகல் அப்பிள்ளையார் கோவிலண்டையில் அவ்வூர் ஜனங்கள் குழுமியிருந்தனர். நம் சாமியார் அவ்விடத்தில் போடப்பட்டிருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்து, 'ஏ! பரம சாம்பவா! ஹா மகாதேவா! இக்குடி ஜனங்கள் சகல சம்பத்தும் பெற்று சுகஜீவிகளாய் வாழவேண்டும்' என்று ஆசீர்வதித்து பின்வருமாறு பிரசங்கம் செய்தார். 'ஜீவஆத்துமாக்களை, பிரம்ம மகா தேவன் சிருஷ்டித்து வருகிறார். அச்ஜீவன்கள் சரிவர தன் காலத்தைக் கழித்து வரவேண்டும். இவர்களை காப்பாற்ற நாராயணபகவானும் அவ்வாத்து மாக்களை பரிபாலித்துக்கொண்டு வருகிறார். சிருஷ்டிக்கப்பட்ட அச் ஜீவ ராசிகள் ஆங்காரம் பெற்று, சகலவிதமான பாவதோசங்களி லீடுபடுவார்களே யானல் அக்கொடியர்களை சரிவர தண்டிக்க ருத்திரர் தக்கபடி சம்ஹாரத் தொழிலை நடத்தி வருகிறார். இதுதான் பொதுப்படையாக கூறும் உலக மென்பது.

கோவில்களில் சிலைரூபமாக நிற்கும் விக்கிரகங்கள் ஈசுவரன் திருச் சாயலாகவும், பக்தர்களின் உருவமாகவும் வைக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளை நாம் பகவான்களாகவும், பக்தர்களாகவும் மனதில் நினைத்துக் கொண்டு, நம் சிந்தனையாவையும் அவ்வழியில் திருப்பி கைகூப்பி 'அரகரா' வென்று தொழுவதே சாலவும் நன்று. ஆனல் தற்போது சில மானிடர்கள் மண், பொன், பெண் முதலியவை தங்களுக்கு கிடைக்குமாறும், அல்லது தங்களுக்கு ஏற்படும் குறைபாடுகளை நிவர்த்திக்கும் பொருட்டும், கோவிலிற்சென்று சொற்ப பொருளின் ஈசுவரனுக்கு பழம், தேங்காய், கற்பூரம், விபூதி முதலிய அபிஷேகங்களை செய்வித்து அக்கடவுளை ஏமாற்று கிறார்கள். ஏன் எனில் அவர்கள் அக்கோயிலைவிட்டு வெளியேறிய பின், பல அக்கிரமங்களையும், கொடுமைகளையும் செய்ய துவக்கி விடுகிறார்கள். அந்தோ பரிதாபம்! அவர்கள் முடிவாக தங்களையே ஏமாற்றி முடிவில் எமலோகம் போய் சேருகிறார்கள்.

இவ்வுலகில் ஜனங்கள் பேயென்றும், பிசாசென்றும் பூதமென்றும் சொல்லுவது யாவும் பொய்யே. அவைகள்மீது நம்பிக்கை யில்லாதவனிடமும், அருவருக்கும் குணமுடையோனிடம் சென்றுகேட்டால் அதன் உண்மை தெரியும். விசேஷமாக அப்பேய், பிசாசுகள் இரவில்தான் தெரியுமாம். ஏன் எனில் வெளிச்சமில்லாமல் இருளாக யிருப்பதுதான் அவ்விதயோசனைக்கும், சிந்தனைக்கும் இடமாகும். 'இருண்டவன் கண்ணுக்கு மிரண்டதெல்லாம் பேய்' என்ற உலக வழக்கம்போல், ஒருவன் என்ன நினைவுகொண்டு இருளில் பார்த்தாலும், அம்மனத்தோற்றமே புலப்படும். இத்தோற்றத்தைத்தான் பேயென்பார்கள். அவர்களுடைய புத்தியில் அச்சமயத்தில் எந்த எண்ண முண்டாகிறதே அதையே தங்கள் மனதில் ஏற்றிக்கொண்டு வாயில் வந்த வாறு பிதற்றுவார்கள். இதே காரணமாக ஆகாரம் நித்திரையில்லாது இளைத் துப் போவார்கள். இதைக் கருதியே பெரியோர்கள், தனிமையாக, துணை யின்றி, எவரும் வெளியேறக் கூடாதென்பார்கள்.

* * *

இல்லறத்தி லீடுபட்டிருப்பவர்கள் தங்கள் காரியங்களையும் செய்கை களையும் அடிக்கடி சிந்தித்து தங்கள் குடும்பத்தை சரிவர நடத்திவரவேண்டும். அப்படிக்கில்லாதபடியாலன்றோ, இக்காலத்தில் தற்கொலைகள் விசேஷமாக

நடந்துவருகிறது. இவைகளுக்கு காரணம் பெற்றோர்களேயாவர். முதலில் ஒவ்வொருவர் நடவடிக்கைகளையும் குடும்பத்தலைவன் கண்டு அவ்வப்போது அவர்களுக்கு வேண்டியவைகளைச் செய்தும், குற்றங்குறைகளை அவ்வப்போதே வேரோடு களையவேண்டும். இவைகளை ஒழுங்காகச்செய்து வருவார்களே யாகில் குடும்பத்தைச்சார்ந்த மாமி, மருகிகளும், புத்திரர்களும், ஆண்-பெண் நட்பும், நாத்தி, சிற்றன்னை முதலியவர்களும் ஒழுங்காக நடந்து வருவார்கள். அப்போதான் அக்குடும்பம் ஓர் நல்ல குடும்பமென்று, யாவராலும் புகழ்ப்படும்.

பகவான் எல்லாவிடங்களிலுமிருக்கிறார். ஏன் நாம் நமது வீடுகளிலே அவரை சிந்தித்து வேண்டிக் கொள்ளாமல் கோவில்களுக்குச் செல்லவேண்டு மென்பீர்கள்? நமது வீடுகளில் ஈசனை தியானிக்கும்போது பலவித குடும்பத் தொந்தரவுகள் வந்துசேரும். பிள்ளைகளும் அதற்கு தடங்கலா யிருப்பார்கள். நாம் நமது மனஇஷ்டம்போல் பகவானை வணங்கி தோத்திரிக்க முடியாது. கோவில்களில் அவ்விதமான இடைஞ்சல்கள் கிடையாது. தாராளமாக பகவானை சிந்தித்து பாதங்களில் வீழ்ந்து சேவிக்கமுடியும். ஆகவே பெரி யோர்கள் ஏகாந்த இடங்களைச் நாடிச்செல்லுகிறார்கள். மண்ணாசை, பெண் ணாசை, பொன்னாசை இவைகளில் முக்கியமாக பெண்ணாசையாலன்றோ பலவித வழிகளிலும் பணம் சம்பாதித்து மனையாளைத் திருப்திசெய்து அவளாற் கிடைக்கக்கூடிய இல்லறசுகத்தை அனுபவிக்கின்றனர். இதனா லன்றோ, 'அற்றது பற்றெனில், உற்றதுவீடு' என்றபடி இவைகளை துறந்தவர் களாகிய என்னைப்போன்ற சந்நியாசிகள் ஏகாந்த இடங்களில் வாசஞ்செய்து சதா கடவுளைப்பற்றி நினைக்கவும், எக்காலமும் அழிவில்லாத சுவர்க்கலோக பதவியைபோய் சேரவும் ஏதுவாகிறது.

குடும்பத்திலீடுபடுபவர்கள், எப்படி தாமரையானது தான் வளருவதற்கு தண்ணீரே காரணமாக யிருந்தாலும், அது தன் இலைகளில் தண்ணீரைப் பற்றாதிருக்கிறதோ, அப்படியே வினையே காரணமாக ஜென்மம் எடுத்து வினையின் பயனை யனுபவிக்கும்போது அதில் மனம் செலுத்தாமல், நமது செயல்கள்யாவையும் அப்பகவானுக்கு ஒப்படைத்து பயபக்தியோடு வாழ்ந்து வந்தால் முடிவில் சுவர்க்கலோகம் அடையலாம்,' என்று சொல்லி தன் பிரசங்கத்தை முடித்தார். அவ்வளவிலே அக்குடிஜனங்கள் அச்சாமியாருக்கு மாலைகள் சூட்டி அவரைப் போற்றிப் புகழ்ந்தார்கள். அவரும் யாவருக்கும் விபூதி தந்து தன் சிஷ்யனோடு தான் தங்கியிருந்த ஆசிரமத்துக்குச் சென்றார்.

ஆறாவது அத்தியாயத்தின் இறுதியில் கூறியபடி சோமநாதன் திருடர் களால் அணிந்திருந்த ஆபரணங்கள் களவாடப்பட்டு, அந்தரத்தில் விடப்பட்டு, பின்னர் சாமியார் உதவியால் வண்டியொன்றில் ஏறிக்கொண்டு தன் மாளிகை வந்து சேர்ந்து வண்டிக்காரனுக்கு கொடுக்கவேண்டிய தொகையை கொடுத்து விட்டு, 'ஆ! தெய்வமே! இதுவும் உன்செயலோ. நல்லதுக்கு இதுகாலமில்லை என்று உலகத்தார் சொல்லுவதுபோல், நன்மைக்காக நாம் உழைக்கப்போனால் நமக்கே ஆபத்தாயிருக்கிறது. ஆனால் 'தெய்வம் நின்று கொல்லும்' என்று பெரியோர்கள் சொல்லுவதுபோல், பகவான் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதான் வருகிறார்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு ஏங்கி தனது

நாற்காலில் சாய்ந்துவிட்டான். பின்னர் தன்னை தைரியப்படுத்திக்கொண்டு 'இருக்கட்டும் இதோடு விட்டுவிடுவேனோ! கடைசிபரியந்தம் ஒரு கைபார்த்து விடுகிறேன்' என்று சொல்லிக்கொண்டு தன் சகோதரியின் அறைக்குச் சென்றான். இவனது நிலைமையையறிந்த கற்பகவல்லி விசனமுற்று 'நம் குடும்பத்துக்கு கஷ்டகாலம் பிடித்திருக்கிறது. ஈசனுக்கு நாம் நாள் தோறும் பூஜைசெய்ய வேண்டும். ஏழைகளுக்கு அன்னதானம் செய்ய வேண்டும்' என்று கூறிக்கொண்டே தனது சகோதரனைப் பார்த்து, 'தம்பி! இன்று முதற்கொண்டு நமது மாளிகையை யண்டிவரும் ஏழை, எளியவர்களுக்கு வஸ்திரதானமும் செய்யவேண்டும்' என்றுகூற அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டு சோமநாதன் லோகநாயகியைப் பார்க்கச் சென்றான்.

கற்பகவல்லி தன் அறையிலிருக்கும் சரஸ்வதி படத்திற்கு பூக்களை போட்டு தன் குறைகளைசொல்லி தொழுதுகொண்டு தன் புத்திரியை நினைத்துக்கொண்டு, 'எனது திகட்டாவமுதே! என்னை பொருட்படுத்தாமல் எவ்வித கஷ்டங்களையும், வருத்தங்களையும் அனுபவித்து வேண்டிய தேவதைகளை ஆராதித்து, அநேக தான தர்மங்கள்செய்து, பத்துமாதம் சுமந்து, அதிக அவஸ்தைப்பட்டு ஈன்று, பின்னர் ஈ எறும்பு முதலியவை கடியாமல் இராப் பகல் கண்விழித்தும், பலவித மருந்து பருகிப் பத்தியங்களுக்கு ஆளாகியும், உனக்கு அமுதூட்டிச் சீராட்டி, பாராட்டி, தாலாட்டி வளர்த்தேனே! அது மட்டுமா கண்மணி! உன்னை வெயிலிலும், காற்றிலும், பனியிலும் தடுத்து என்மார்பிலும், வயிற்றிலும் அணைத்து உச்சிமோர்ந்து செவியுருவி சீராட்டி வளர்த்தேனே! என் அரும்புதல்வியை பிரிந்து இருக்கும்படியான மகா பாவியானேனே, கமலாட்சி! நீ அவ்வாடவனை மணந்துகொள்வதாக என்னிடம் கூறினாயே? அப்போதே உன் இஷ்டம்போல் காரியமுடிந்திருந்தால் நீ எவ்வளவு ஆனந்தமாயிருப்பாய்? நானும் உன்னை ஆசையோடு அடிக்கடி பார்ப்பனே! கண்மணி! இப்போதோ உன்னை திருடர்கள் தூக்கிச்சென்று எவ்வித கஷ்டங்களுக்கு ஆளாக்கிறார்களோ? அவர்கள் உபத்திரவம் சகிக்க மாட்டாமல் உயிரைத்தான் துறந்து விட்டனையோ? இனி உன்னை எப்போது காணப்போகிறேன்?' என்று பிரலாபித்தாள்.

இச்சமயத்தில் சோமநாதனுக்கு ஓர் ரிஜிஸ்டர் கடிதமொன்று தபால் காரன் கொண்டுவந்து, கையெழுத்து வாங்கிக்கொண்டு கொடுத்துவிட்டு போனான். அதை சோமநாதன் பிரித்துப்பார்க்க அவனுக்கு திகில் உண்டாகி விட்டது. ஏனெனில் அக்கடிதம் அக்கொள்ளைக் கூட்டத்தாரின் தலைவனான வீரப்பன் எழுதியதே. அதில், 'ஏன் இன்னும் மன்னிப்புக் கடிதம் எழுதி தினசரியில் வெளியிடவில்லை? இன்னும் இரண்டொரு வாரத்துக்குள் அவ்வாறு செய்யாவிடில் உன் சகோதிரி மகளை நீ காணமாட்டாய். அவளை நானே மணந்துகொள்வேன்' என்று எழுதியிருந்தது. இக்கடிதத்தை தன் தாயிடமும் சகோதரியிடமும் காட்டினான். அதற்கு, 'அவர்கள் அவனை எவ்விதத்திலாவது பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்து நமது குழந்தையை மீட்டு வரவேண்டும்' என்று ஒரே பிடிவாதமாக கூறினார்கள். சோமநாதன் 'இம்முறை கடைசிமுறையாக இருக்கட்டும், ஒன்று நான் சாகவேண்டும் அல்லது அவர்களைப் பிடித்து சுட்டுக்கொல்ல வேண்டும்' என்று மன உறுதிகொண்டு ஓர் கிழவன்போல் வேஷம் போட்டுக்கொண்டு தன் தாயிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு விட்டான்.

இதுமுதற்கொண்டு அவனை கிழவரென்று அழைப்போம். அவர் கோரக பத்துமைல் கடந்துசென்று ஓர் கானகத்தை யடைந்தார். அவ்விடத்தில் ஓர் சிறுகுடிசையொன்று ஏற்படுத்திக்கொண்டு அவ்விடத்தில் கிடைக்கும் காய் கனிகளை பறித்து தின்றுகொண்டு, அவ்விடத்திலே வாசம் செய்துவந்தார். இவ்வாறிருக்கையில் ஓர்நாள் பொழுது போனவேளை, யாரோ இரண்டு மனிதர்கள் அக்குடிசையை நாடிவந்து, தங்களை இவ்விரவில்மட்டும் காப் பாற்றும்படி வேண்டினார்கள். அதற்கு அக்கிழவர் அப்படியே காப்பாற்றுவ தாகக்கூறி அவர்களை அச்சிறு குடிசைக்குள் அழைத்துக் கொண்டுபோய் அவர்களுக்கு வேண்டிய கனிகளை கொடுத்து புசிக்கும்படிசெய்து அவ்விடத் திலே படுத்துக் கொள்ளுமாறுசெய்து, தான் படுத்து நன்றாக உறங்கிவிட் டார். நடுநிசிவேளையில் அவ்விருவரில் ஒருவன் அக்கிழவரை, கூர்ந்து கவனித் தான். அப்போது அவரது அங்கவஸ்திரம் சிறிது விலகியிருந்த படியால் அவரது வேஷத்தைக் கவனித்துவிட்டு தன்னுடனிருந்த மற்றவனுக்கும் இதை கூறிவிட்டான். 'நமது கூட்டத்தாரைக் கண்டுபிடிப்பதற்காகவே இவன் இவ்வேஷம் போட்டுக்கொண்டிருக்க வேண்டும். நாம் இதுவரைக்கும் சுற்றி வந்தவிடங்களில் எல்லாம் ஒருவரையும் காணவில்லை. நாம் சரிவர வேலைசெய்ய வில்லையென்று நமது தலைவன் வீரப்பன் அடிக்கடி மூறையிடுகிறான். ஆகவே இன்றைக்காவது நமது வேலையின் திறமையை அவன் காணவேண்டும்' என்றுகூறி முடிவுசெய்துகொண்டு அவ்விருவரும் பொழுதுவிடியும் வரைக் கும் அக்கிழவரை காவல்செய்து கொண்டிருந்தார்கள்.

பின்னர் பொழுது விடிந்துவிட்டது. கதிரவனும் கிழக்கு திசையில் தோன்றலானான். அப்போது கிழவர் விழித்துக்கொண்டு அவ்விருவரை நோக்கி, 'சிறிது ஆகாரம் புசித்துவிட்டு போகலாம்' என்று கூறினார். அதற்கு அவர்கள், 'கிழவரே உமது குட்டு வெளியாகிவிட்டது. நீர் கிழவர் அல்ல, குமரனேயென்று நாங்கள் தெரிந்துக் கொண்டோம்' என்று சொல்லி அவர் கள் வாய்மூடுவதற்குள் கிழவர் தன்னிடமிருந்த கோடாலியால் ஒருவனை தாக்க, அவன் சிறிது காயத்தோடு தப்பி அவனை, இறுகப்பிடித்துக் கொண் டான். கிழவர் அவனது பிடியிலிருந்து விடுவிக்க எவ்வளவோ கஷ்டப் பட்டும் ஒன்றுமுடியாமல் போய்விட்டது. ஆகவே அவ்விருவரும் அக்கிழவ ராகிய சோமநாதனின் கைகளை கட்டிவிட்டு அவனை அழைத்துக்கொண்டு தங்களிருப்பிடம்போய், தலைவனிடம் அவனை ஒப்படைத்தனர்கள். அவ்வீரப் பன், 'ஆகா சோமநாதா! உன் சாமார்த்தியமே சாமார்த்தியம். நீ எங்களை பிடித்து கொடுத்துவிடலாம் என்று நினைத்து விட்டாயா? சரி, உன்னை இனி லேசில் விடப்போவதில்லை' என்று கூறி அவ்விருவரையும் பார்த்து, 'இவனை நமது இருப்பிடத்தின் தென்கோடியில் தனிமையாக இருக்கும் கற்கோட்டை யில் அடைந்துவிடவும்' என்று கூறினான். அவ்வாறே அவர்கள் சோமநாதனை அழைத்துக் கொண்டுபோய் அடைத்துவிட்டார்கள். இக்கற்கோட்டை தனிமையாக அத்திருடர்கள் இருப்பிடத்துக்கு 220 அடி தூரத்தில் கட்டப் பட்டது. அவ்விடத்தில்தான் அத்திருடர்களுடைய காரியதரிசியாகிய பொன் னப்பன் வசிப்பது.

(தொடரும்)

'மதியுள்ள மைனர்'

[S. A. நாகரத்தினம்]

(ஓர் சிறு நாடகம்)

பாத்திரம்:—மைனர் சிவன். அனந்தாச்சாரி.

இடம்:—பங்களாவின் மேன்மாடி.

மைனர் சிவன்:—நான் எத்தனையோ பெண்களை பார்த்திருக்கிறேன். ஆனால் நேற்று நாடகத்தில் 'மனோகரி' யாக நடித்த அந்த வடிவழகியைப்போல் கண்டதே கிடையாது. அடடா! என்ன அழகு! உண்டா லோகத்திலே அவளுக்கிணை? பெண்ணென்றாலும் அவள்தான் பெண். பாழும் பிரமன் ஏன்தான் அவளை கண்டோர் காமுறு வண்ணம் படைத்தானோ? ஆண்மக்களின் மனதை உடைக்கத் தானோ! முற்றும் துறந்த முனிவர்களும் அவளைக்கண்டால் காமுறுவர் என்றால் என்ன அனந்தாச்சாரியாரே! நீரும் நானும் எம்மாத்திரம்? என்ன சிங்காரம்! என்ன ஒய்யாரம்! என்ன கெம்பீரம்! அவ்வடிவழகியின் அழகை வருணிக்க ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலும் முடியாதென்றால் நாம் எம்மாத்திரம்? எவனொருவன் அச்சுந்தரியை அடைகிறானோ, அவனே இவ்வுலகில் புண்ணியசாலி. அளவிலா செல்வமிருந்தும் என்ன பயன்? அனந்தாச்சாரி, மகா புத்திசாலியாக நீர் எனது நண்பாக வாய்த்தும் என்ன பயன்? அவளைக் கண்டது முதல் என் மனம் என்பாலில்லை. அவளை மறக்க முடியவில்லையே. அவளை எப்படியாவது.......சே! உம்மால் முடியாதென்று நினைக்கிறேன்.

அனந்தாச்சாரி:—நீர் சொல்வதெல்லாம் வாஸ்தவமே. அவள் கண்டோர் மனதை கவரத்தக்க கட்டழகு வாய்ந்த காரிகையென்பதில் சந்தேகமில்லை. ஆயினும் அவளோர் நாடகப் பெண்தானே. என்ன பிரமாதம்? பணம் பத்தும் செய்யும் என்பது தங்களுக்குத் தெரியாதா? இதென்ன பிரமாதம்? கொஞ்சம் சப்தம் காட்டினால் போதும். அதற்கும் அசையாவிட்டால் அப்புறம் இந்த அனந்தாச்சாரி இருக்கவேயிருக்கிறேன்.

மைனர் சிவன்:—சே! சே! நீர் சொல்லுவது முற்றிலும் பிசகு. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். அவளது பதிவிரதாத் தன்மை அவளது முகத்திலேயே, பளிங்குபோல் காணப்படவில்லையா? அவளையோர் சாதாரண நடிகை என்று நினைக்கவேண்டாம். அனந்தாச்சாரி! எனது சகல சொத்துக்களையும் அந்த மோகனுங்கிக்கே அர்ப்பணம் செய்யத் தயார். அவளை மறப்பதென்பது இந்த ஜென்மத்தில் முடியாத காரியம். ஹே கரியகுழல் கல்யாணி! என் மனதைக் கவர்ந்த ராணி! என்னிடம் வாதுப்புரிவது ஏனோ நீ! (பெருமூச்சு விடுகிறான்.)

அனந்தாச்சாரி:—சித்தம் கலங்கி பித்தம் கொண்டீரோ! மோகனங்கி மோகத்தை ஊட்டினள்போலும் மிஸ்டர் மைனர்! இந்தத் திரேகம் தங்களுக்கு உழைப்பதற்கென்று தானே உண்டானது. அப்படியிருக்க சஞ்சலம் ஏன்? ஆனால் நாம் நினைக்கிறபடி காரியம் அவ்வளவு சுலபத்தில் முடியுமா என்பதுதான் சந்தேகம்.

மைனர் சிவன்:—சந்தேகமாவது கிந்தேகமாவது. பணத்தை பணமென்று பாராமல் வாரி யிறைத்தால் ஆகாத காரியம்கூட ஒன்று உண்டா! உமதிஷ்டம்போல் செலவழியும். ஆனால் காரிய மட்டிலும் 'பழம்' ஆகவேண்டும். ஞாபகமிருக்கட்டும்.

அங்கம் II

இடம்:—பூங்காவனம்.

நேரம்:—மாலை.

மைனர் கார் மரத்தடியில் நிற்கிறது. அனந்தாச்சாரி மைனர் போல் அவனது ஆடைகளையே அணிந்துகொண்டு ஓர் பெஞ்சியில் அமர்ந்திருக்கிறான். கையில் 'கோல்டுப்ளேக்' சிகரெட். அதுசமயம் எதிர்பார்த்த ஆசாமி வருகிறான்.

அனந்தாச்சாரி:—மிஸ்டர்! மிஸ்டர்! (கையை தட்டுகிறான்) உம்மைத்தான், இங்கே வாருங்கள். இப்படி உட்காருங்கள். (அந்த ஆசாமியும் அங்கே வந்து அவனருகே அமர்கிறான்) தங்களைப் பார்த்தால் இவ்வூருக்குப் புதிதாக வந்திருக்கும்' மனோஞ்சித நாடக சபை'யைச் சார்ந்தவர்போல் காண்கிறது.

அந்த ஆசாமி:—ஆம். தாங்கள் நினைத்தது சரி. தாங்கள் யார்?

அனந்தாச்சாரி:—நான், இந்த ஊரில் யாரைக் கேட்டாலும் சொல்லுவார்கள்; மைனர் சிவனைப்பற்றி தாங்கள் கேள்விப்பட்டதில்லையா?

அந்த ஆசாமி:—உம். மைனர் சிவன் தாங்கள்தானு?

அனந்தாச்சாரி:—ஆம். நான்தான் மிஸ்டர் மைனர் சிவன். தங்களின் நாமதேயம் யாதோ!

அந்த ஆசாமி:—என் பெயர் ஜெயவேலு. தங்களைப் பார்க்கும் படியான பாக்கியம் ஏற்பட்டது எனது பூஜாபலன்.

அனந்தாச்சாரி:—மிஸ்டர் ஜெயவேல்! தங்களால் ஓர் முக்கிய மான காரியம் ஆகவேண்டி யிருக்கிறது. காரியம் சித்தியானுல் நீங்கள் இந்த நாடகத் தொழிலேயே விட்டுவிட்டு, ஹாவென்று இருக்கும்படியான நிலைமையில் தங்களை கொண்டுவந்து விடுவேன்.

ஜெயவேலு:—(யோசனை செய்து) ஸார்! என்னுல் முடியுமானுல் செய்யத் தடையில்லை. சொல்லுங்கள்!

அனந்தாச்சாரி:—உங்கள் கம்பெனியில் நேற்று மனேகரியாக நடித்த அந்த அழகிய ஆரணங்கு யார்? அவர் பெயரென்ன?

ஜெயவேல்:—(புன்னகையுடன்) அந்தப் பெண்ணு? அதைப் பற்றி தங்களுக்கென்ன?

அனந்தாச்சாரி:—மிஸ்டர் ஜெயவேல்! உங்களிடத்தில் சொல் லாமல் நான் யாரிடத்தில் சொல்லப் போகிறேன். அந்த வடிவழகி யின் மேல் அளவிலா காதல்கொண்டு தவிக்கிறேன். பிரதர்! நீங்கள் தான் உதவி செய்யவேண்டும். எப்படியாவது அப்பெண்மணியை... நீங்கள் எவ்வளவு கேட்டாலும் சரி, தரத்தடையில்லை, தாராளமாய்க் கேளுங்கள். ஏராளமாய்த் தருகிறேன்.

ஜெயவேல்:—அட ராமா! கடைசியாக என்னை கும்பகோணத் தான் என்று நினைத்துக் கொண்டீர்களாக்கும்.

அனந்தாச்சாரி:—மிஸ்டர்! மிஸ்டர்! கோபம் வேண்டாம். சினேக விஷயத்தில் கேட்டேன். தங்களால் முடியுமென்று என் புத்தியில் படவேதான் கேட்டேன். பிரதர், அந்த மோகனங்கியை கண்டநாள் முதல் என் மனதை பறிகொடுத்து விட்டேன். உண் மையை உங்களிடம் சொல்லுகிறேன். தயவுசெய்ய வேண்டும்.

ஜெயவேலு:—நீங்கள் அந்தப் பெண்ணின்மேல் காதல்கொண் டதைப்போல் எவ்வளவோ மைனர்கள் அவள்மேல் காதல்கொண்டு தங்களால் ஆனமட்டும் பாடுபட்டு அவதிப்பட்டிருக்கிருர்கள். ஆனுல் தாங்களே ஓர் அதிர்ஷ்டசாலி யென்றே நினைக்கிறேன்.

அனந்தாச்சாரி:—அவதிப்பட்டார்களா! ஏன்? நான் அதிர்ஷ்ட சாலி யென்பது தங்களின் சிநேகம் ஏற்பட்டதிலிருந்தே எனக்குப் புலப்பட்டது. பிரதர்! அந்தப் பெண் என்ன அவ்வளவு..............

ஜெயவேலு:—ஸார்! சென்னைக்குப் போவதற்கு சேலத்து வண்டியில் ஏறினால் முடியுமா? சரியான ஆசாமியைப் பிடித்தால் எல்லாம் முடியும். அந்தப் பெண் ஸார்! மிகவும பதிவிரதை. இன்னும் கலியாணமாகவில்லை. படித்த பெண். அவளின் பெயர் ஜெயம்.

அனந்தாச்சாரி:—(பாக்கெட்டிலிருந்து நூறுரூபாய் நோட்டில் இரண்டை எடுத்து) மிஸ்டர் பிரதர்! இதை வைத்துக்கொள்ளுங்கள். இது அட்வான்ஸ். பின்னால் வேண்டியது தருகிறேன். காரியம் பழும் ஆனால் சொல்லவும் வேண்டுமா! (பணத்தைக் கொடுக்கிறான்)

ஜெயவேல்:—(பணத்தைப் பெற்றுக்கொண்டு) 'ஸார்! என்னிடம் பணம் கொடுத்ததாகட்டும் அல்லது அந்தப் பெண்ணைப்பற்றி பேசிய விஷயத்தைப்பற்றியதாகட்டும், வேறு எவரிடத்திலும் தாங்கள் பேசாமலிருப்பதானால் நான் இக்காரியத்தில் தலையிட முடியும். இல்லையேல் என்னால் முடியாது. இதோ தங்கள் பணம்' என்று கூறி பணத்தை நீட்டுகிறான்.

அனந்தாச்சாரி:—என்ன பிரதர்! என்மேல் சந்தேகமா! நீங்கள் என்ன சொல்லுகிறீர்களோ அப்படியெல்லாம் கேட்கத் தயார். பணத்தை பாக்கெட்டில் போடுங்கள்.

ஜெயவேலு:—அப்படியானால் சரி. ஜெயம் என் சொல்லை மீறவே மாட்டாள். தங்கள் காரியம் பழமென்று நிச்சயமாய் நினைத்துக் கொள்ளுங்கள். ஆனால் அவளோர் சங்கோஷப் பிராணி, புதிய ஆடவருடன் பேசுவதென்றால்......

அனந்தாச்சாரி:—பிரதர்! அப்படியானால் என் தங்கையை அனுப்புகிறேன். அவள் சாமர்த்தியமாக காரியத்தை முடித்து விடுவாள்.

ஜெயவேலு:—ரொம்ப சரி. அதுதான் சிலாக்கியம். அப்படியானால் தங்கள் தங்கையை எப்பொழுது அனுப்புகிறீர்கள்?

அனந்தாச்சாரி:—ஏன்! நாளை மத்தியானமே அனுப்புகிறேன். அல்லது இப்பொழுது வேண்டுமானாலும் அனுப்புகிறேன்.

ஜெயவேலு:—ஸார்! அப்பொழுதெல்லாம் சௌகரியப்படாது. நாளை இரவு ஆட்டம் இருக்கிறது. சரியாக பன்னிரண்டு மணிக்கு கொட்டகையின் அருகேயுள்ள ஆலமரத்தடியில் வந்து இருக்கச் சொல்லுங்கள். ஜெயத்தை அங்கு வந்து சந்திக்கச் சொல்லுகிறேன். ஏனெனில் எங்கள் கம்பெனிக்கே இந்த சமாச்சாரம் எட்டப்படாது.

அனந்தாச்சாரி:—ரொம்ப வந்தனம் மிஸ்டர். தவறாமல் என் தங்கையை அந்த ஆலமரத்தடியில் வந்து இருக்கும்படி செய்கிறேன்.

(இருவரும் போகின்றனர்)

அங்கம் III.

இடம்:—ஆலமரம்.

நேரம்:—நடு நிசி.

(மைனரின் தங்கை ஆலமரத்தடியில் நின்றுகொண்டிருக்கிருள். குறித்த நேரத்தில் ஸ்திரீபார்ட் ஜெயமும் வருகிருள்.)

ஜெயம்:—(மெதுவாக) யாரது அங்கே நிற்பது?

மைனரின் தங்கை:—நான்தான் மிஸ்டர் மைனரின் தங்கை.

(ஒருவரை யொருவர் நெருங்கி பார்க்கின்றனர்)

ஜெயம்:—பெண்மணி! தங்களின் திருநாமம் யாதோ! அறியும் படியான பாக்கியம் கிட்டுமா?

மைனரின் தங்கை:—அம்மா! என் பெயர் மோஹனங்கி. தங்கள் பெயர் ஜெயம்தானே!

ஜெயம்:—ஆம் மோஹனங்கி! இவ்விருட்டில் நாம் தனித் திருப்பது தகாது. தயவுசெய்து என தில்லத்திற்கு எழுந்தருளு வீர்களா?

மோஹனங்கி:—தங்களிஷ்டம் என் பாக்கியம்.

(இருவரும் போகின்றனர்.)

அங்கம் IV.

இடம்:—ஓர் மேன்மாடி.

நேரம்:—இரவு

(அவ்வறையிலுள்ள ஓர் மேஜையின்மேல் பலவித பக்ஷணங் களும் பழ வகைகளும் பானங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. இருவரும் மேஜையினருகே உட்காருகின்றனர்.)

ஜெயம்:—மிஸ் மோஹனங்கி! உமக்காகத்தான் இவைகளெல் லாம் காத்துக்கொண்டிருக்கின்றன. சங்கோஷமில்லாமல் சாப்பிடும்.

மோஹனங்கி:—என் மனது அவைகளை நாடவில்லை. உம்மைத் தான் நாடுகிறது.

ஜெயம்:—அப்படியா? எனது அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்.

(மோஹனங்கி ஓர் முத்தம் கொடுக்கிருள்)

இதற்கு நிகருண்டா? இன்னொன்று கொடு.

இந்தா இதையும் வாங்கிக் கொள்.

(இவளும் கொடுக்கிறாள். சற்று நேரத்திற்கெல்லாம் முத்த யுத்தம் நிற்கிறது.)

ஜெயம்:—மைனரின் தங்கையே! என் மனதைக் கவர்ந்த நங்கையே! எனக்கு மோகத்தை ஊட்டும் மோஹனாங்கியே! நானோர் நற்செய்தி யுரைக்கப் போகிறேன். கவனமாய்க் கேள். மடமயிலே! என் மனதை கொள்ளையிட்ட பூங்குயிலே! அந்த மதியில்லா மைனருக்கு நீ ஓர் தங்கையாக வாய்த்தது, நீ செய்த பாவம்.

மோஹனாங்கி:—என் பிரிய ஜெயம்! உன் அழகிற்கு அடிமையான அந்த மைனர் சிவனை மதியில்லா சிவனென்று இன்னொருதரம் சொல்லாதே. உன்னையே ஓர் பெண் தெய்வமாக நினைத்து தன் இருதயத்தில் வைத்து சதாகாலமும் பூஜிக்கிறானென்பதை நீ எப்படி அறிவாய்?

ஜெயம்:—ஆம், உண்மையில் உன் சகோதரன், மைனர் சிவன், ஓர் மதியற்றவன்தான். அதற்குச் சந்தேகமே கிடையாது.

மோஹனாங்கி:—எப்படி?

ஜெயம்:—எப்படியா! நீ எப்படி என்னை இன்னும் ஓர் பெண் என கருதி யிருக்கின்றனையோ, அஃதேபோல் அந்த மைனர் சிவனும் 'மனோகரன்' நாடகத்தில் மனோகரியாக நான் நடித்ததைப் பார்த்துவிட்டு என்பால் மையல்கொண்டான். அவன் நினைத்துக்கொண்டிருக்கிறபடி நான் உண்மையில் ஓர் பெண்ணல்ல. நான் ஓர் ஆண்மகன். என் பெயர் ஜெயவேலு. நல்லவேளையாக நேற்று என்னைச் சந்தித்த உன் தமயன் என்னைப்பற்றியே (ஜெயம்) என்னிடம் புகழ்ந்து கூறியதுமல்லாமல் அவனது அடங்காக் காதலையும் தெரிவித்தான். நான் ஓர் தமாஷ் செய்யலாமென்று நினைத்தேன். ஆனால் தெய்வ சங்கற்பம் வேறு. மைனரின் தங்கையாகிய உன்னை அடையும்படி அந்த முருகப்பிரான் எனக்கருள் புரிந்தார். என்னை நாடகத்தில் கண்ட எத்தனையோ மனிதர்கள் உண்மையில் என்னை ஓர் பெண்ணென்றே இன்னும் நினைத்திருக்கின்றனர். என்னை ஜெயம் என்றும் அழைப்பார்கள். ஆகவேதான் அந்தப் பெண்ணின் (என்) பெயர் ஜெயம் என்று உன் அண்ணனிடத்தில் கூறினேன். இந்த விஷயமாக வேறு எவரைக் கேட்டாலும் குட்டு வெளிப்பட்டுவிடும் என்றுதான் வேறு எவரையுமே இந்த விஷயமாகக் கேட்கப்படாதென்று கூறினேன். ஆகவே ஜெயமும் ஜெயவேலும்—இருவரும்—ஒருவரே. என் காதலை நீ நிராகரிக்க மாட்டாயென்று நினைக்கிறேன். எனக்கு தஞ்சை ஜில்லாவில் போதிய நிலபுலன்களிருக்கின்றன.

(தன் பெண்ணுடைகளை அகற்றுகிறான்)

மோஹனாங்கி:—இதென்ன கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதுபோலானது. இப்பொழுது விஷயம் புலனாயிற்று. என் கண்பன் அனந்தாச்சாரி தன்னையே மைனர் சிவனென்று ஏமாற்றினான். நீ யவனை ஜெயம் என்பவள் வேறொரு பெண்ணென்று ஏமாற்றினை. தாரும் வாங்கிக்கொண்டாய். நீ மைனரின் தங்கையை ஏமாற்றி விட்டாயென்று மனப்பால் குடிக்கவேண்டாம். மைனருக்கு தங்கையேது கிங்கையேது. பெண் வேடம் புனைந்து உன்னை காணலாமென்று நினைத்து அந்த பிரகஸ்பதியின் பேச்சைக் கேட்டு என் மீசையை எடுத்ததுதான் கண்டபலன். என்னை யாரென்று நினைத்துக் கொண்டாய்? நான்தான் மைனர் சிவன்.

(எனக் கூறியதும் தன் வேஷத்தையும் கலைகிறான். இதைக் கண்ட ஜெயவேலு ஆச்சரியமும் பிரமிப்பும் கொண்டான்.)

மைனர் சிவன்:—இப்பொழுதாவது என்னை ஓர் மதியுள்ள மைனர் என்று ஒத்துக்கொள்ளுகிறாயா ?

ஜெயவேலு:—பரம்பரை வேஷதாரியாகிய என்னையே பஞ்சத்து வேஷதாரியாக நீ ஏமாற்றிவிட்டாய். உண்மையில் நீர் 'மதியுள்ள மைனர்' என்பதில் சந்தேகமில்லை.

(ஜெயவேலு அனந்தாச்சாரியிடமிருந்து பெற்ற ரூ. 200 திருப்பித் தருகிறான். ஆனால் மைனர் அதை மறுத்துவிட்டு அவனிடமிருந்து வேஷ்டியும் சர்ட்டும் அணிந்துகொண்டு வீட்டிற்குச் செல்லுகிறான்.)

எஜமான்:—'தன்னிடம் புதிதாய் வேலைக்கு வந்த நாட்டுப் புறத்தானைப் பார்த்து) அடே கந்தா, கடைக்குப்போய் ஒரு அணா சோடா மாவு வாங்கிவா' என்றார்.

கந்தன் கடைக்குச் சென்று அரையணா கொடுத்து சோடாவும் அரையணா கொடுத்து மாவும் வாங்கிக்கொண்டு போய் எஜமானன் முன்பு வைக்கிறான்.

எஜமான்:—(அதைப் பார்த்து கோபம்கொண்டு) அடே மடையா உன்னை யார் சோடா வாங்கிவரச் சொன்னது' என்று கேட்டார்.

கந்தன்:—(பயந்து) சாமி நீங்கள்தானே சோடா, மாவு வாங்கி வரச் சொன்னீர்கள். அப்படியே சோடாவும் மாவும் வாங்கி வந்தேன். இதில் என்ன சாமி தப்பு? —சி. கண்ணு

‘மரபின் கொடுமை’

[மழவை ப. வெங்கடராமன்]

நான் ஒரு கிராமவாசி. கிராமமென்றால் எல்லாக் கிராமங்களையும்போல் எங்கள் கிராமத்தையும் எண்ணிவிடக்கூடாது. பக்கத்தில் உள்ள சுமார் 50, 60 கிராமங்களுக்கு எங்கள் கிராமந் தலைமை தாங்கிவருகிறது. இக்கிராமங்களி லெல்லாம் நாட்டாண்மைக்கார ரென்பவரைத் தலைவராகக் கொண்டு, எக்காரியங்களுக்கும் எவ்விஷயங்களுக்கும் அவர் கூறுவதையே முடிவாக ஒப்புக்கொள்ளுதல் தொன்று தொட்டு வழிமுறையாக வழக்கத்திலிருந்து வருகிறது. ஷெ நாட்டாண்மைக்காரரில்லாதபடி கிராமப் பொதுவிஷயங்கள் நடைபெறா. இது கட்டுப்பாடான விஷயம். இதிலிருந்து மீறுபவன் கிராமத்தை மீறியதாகவும் அவமதித்ததாகவும் கருதப்படுவான். இப்படி மீறியவன் யாராயிருந்தாலு மவனை அடக்குதற்கு ஊர்க்கிணற்றில் தண்ணீர் எடுக்கக் கூடாதென்றும், ஊர்வண்ணான் சலவைசெய்யக் கூடாதென்றும், அம்பட்டன் க்ஷெளரம் செய்யக்கூடாதென்றும், கட்டுப்படுத்தி வருவார்கள். ஆகவே கிராமப்பொதுக் கூட்டங்களினின்றும் மீறியவன் அந்தக் கிராமத்தில் அமைதியுடன் வாழமுடியாதபடியும், அவ்விடத்திலிருந்து வேறிடத்துக்குச் சென்று குடியேற வேண்டுமென்ற நியதிக்கு மனதை யுடன்படுத்தும்படியுமான நிலைமை ஏற்பட்டுவிடும்.

இதுநிற்க எங்கள் கிராமத்தை நகரம் என்றோ அல்லது கிராமம் என்றோ நிச்சயமான துணிபு கொள்ளமுடியாத நிலைமையிலிருக்கிறது. அநேகமாய் எங்கள் கிராமம், கிராமத்திலிருந்து நகரத்திற்கு நகர்ந்துகொண்டே யிருக்கிறதென்று சொல்வது பொருந்தும். இக்கிராமம் ஒரு ஜமீன்தாரின் ஆளுகைக்குட்பட்டது என்பதையும் தெரிவித்தல் வேண்டுமென நினைக்கிறேன். அந்த ஜமீன்தார் ஆபீசிலேயேதான் நான் ஒரு குமாஸ்தா வேலை பார்த்து வருகிறேன். எங்கள் ஊருக்கு 6-வது மைலில் ரயில் ஓடுகிறது. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து இங்கு வந்துபோக மோட்டார் வசதியும் உண்டு. ஆபீஸ் விஷயம், சொந்த விஷயங்கள் குறித்து அடிக்கடி நான் நகரங்களுக்குச்சென்று வரவேண்டுவது இன்றியமையாததாய் யிருப்பதால்

நாகரிகத்தை நான் நன்கு தெரிந்துகொள்ள ஏது இருக்கிறதென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனவே நான் நாகரிக வேட்கை அதிகம் கொண்டிருக்கிற ஓர் இளம்வாலிபன் என்று தெரிவித்துக் கொள்ளுகிறதில் வியப்பொன்றுமின்று. எனது ஆபீஸ் ஜமீன்தாருக் குட்பட்டதாயிருப்பினும் ஒரு தாசில்தாரின் மேற்பார்வையின்பேரில் தான் நடந்துவருகிறது. நான் கொஞ்சம் சுறுசுறுப்பாக எந்த வேலையையும் கற்றுக்கொண்டு எளிதில் செய்து விடுவேனாகையால் எனது அதிகாரியாகிய தாசில்தார் என்பேரில் நல்ல எண்ணத்துடன் அநாவசியமாக வேலைகளை ஏவித் தொந்தரவு செய்யாமல் இருப்பார். எனவே நான் தினந்தோறும் மாலை 5 மணிக்கே ஆபீஸிலிருந்து வெளியேறி விடுவேன். வெளியேறினால் மீதியுள்ள அந்த அழகிய, மனமகிழ்ச்சி யுண்டுபண்ணத்தக்க, இனிய மாலைநேரத்தை எவ்விதங் கழிப்பதென்று சிந்திக்கத்தக்க நிலையும் ஏற்பட்டுவிடும். எனது நண்பர்களோ சிலர் வம்பர் மஹாசபை, சிலர் சதுர்முகக் கச்சேரி, சிலர் வியாபாரம், சிலர் தையற்றொழில் உடையவர்கள். இவர்களில் அநேகர் தமது வேலையை விட்டுவிட்டு என்னுடன் அளாவளாவ மறுத்துவிடவும் கூடும். மேற்கூறிய நண்பர்கள் சிலருடன், அல்லது சிற்சில சமயங்களில் தனியே, நான் எங்கள் ஊருக்கு மேற்கே 3 பர்லாங்கு தூரத்திலுள்ள வைகைநதிப் பாங்கர் சென்று வருதல் வழக்கம். இதுவரை தலைப்பிற்குச் சம்பந்தமற்ற விடயங்களைச் சொல்லிவந்து நேயர்களுக்கு வருத்தமுண்டாக்கினேன் என்று கொள்ளாதிருக்க ஏதுவிருக்கிறது.

மேற்கூறியவாறுள்ள வழக்கத்தில், யான் தனியே செல்ல வேண்டிய சமயம் ஒன்று நேர்ந்தது. எனக்கு என்னை அலங்கரித்துக் கொள்வதில் ஆர்வம் அதிகம். தூய்மையான வெண்மைக் கதருடையில் பிரத்தியேகமான தனி அன்பு. எனக்குச் சுமார் வயது 23 தானிருக்கும். கொஞ்சம் அழகுடையவனுங்கூட. கிராப் சீவிவிடப்பட்ட தலையுடனே வெள்ளிய, தெள்ளிய உடைதரித்து காலில் ஜோடுகளுடன் நாகரிக வெள்ளத்தில் குடைந்தாடி எழுந்து வருபவன் போன்று ஷோக் நடை நடந்துகொண்டு, ஊற்றமிகுந்த ஆற்றங்கரையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தேன். மாலை சுமார் 5-25 மணியிருக்கும். ஒரு பர்லாங்கு சென்றுவிட்டேன். எனக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை தனியாக போகும்போது ஏதாவதொன்றை நினைத்துக்கொண்டே மனக்கோட்டை கட்டிக்கொண்டு செல்வது மனிதர்களின் இயல்புதானே. அவ்வாறே நான் அன்று எனது கலியாண விஷயமாகச் சிந்தனை செய்துகொண்டே போனேன். எனக்கு என் குலத்திலுதித்த பெண்மணியையோ நல்லெழில் படைத்த நாகரிக நாரீமணியையோதான் மணக்கவேண்டுமென்கிற எண்ணந்தோன்றாமல், தற்காலத்தில் சிறந்து விளங்கும் கலப்புமணத்

தில்தான் என் கருத்து பதிந்திருந்தது. அவ்வாறு நான் ஆலோசனைக்
கடலில் ஆழ்ந்து செல்லுங்கால் என் எதிரே ஒரு பிம்பம் காணப்
பட்டது. அவ்வளவே மனக்கோட்டைகள் மாயமாய் மறைந்தன.
கால்கள் வேலையைச் செய்யமாட்டேனென்று உறுதிகூறி நின்று
விட்டன. ஏன் இங்கு நிற்கிறோம், நாம் கண்ட பிம்பம்தான்
என்னையோ? எனச் சிந்தனையில் ஆழ்ந்தேன். அந்த பிம்பம் நமக்குத்
துன்பம்தருவதோ இன்பம்தருவதோ என்றாலோசித்துக் கண்களை
வேறுபக்கமாய்த் திருப்பினேன். மறுத்துவிட்டன. சில வினாடிகளில்
அப்பிம்படும் சமீபத்தில் நெருங்கி வந்துகொண்டிருந்தது. தெளிந்
தேன், தெரிந்தேன். நல்ல மருண்ட காதளவோடிய கண்கள்.
கடைந்தெடுத்த கைகால்கள். கொவ்வைக் கனியைத் தோற்கச்
செய்யும் செவ்விய பவளவாய், சின்ன இடை, பின்னல் ஜடை. அன்ன
நடை, கன்னல்மொழி. இவைகளையுடையவளாய் இரதியும் வெட்கி
நாணமடைய என்பக்கம் நெருங்கி வந்துகொண்டிருந்தாள். ஓர்
குயிலைப்பழித்த குரலுடைய குமரி. வழியில் எங்களிருவரை தவிர
வேறெவருங் கிடையாது. நான் அவளுடைய அதியற்புத வடிவழகில்
ஈடுபட்டு மயங்கினேன். அவளுடன் சம்பாஷிக்க எண்ணினேன்.
ஆனால் அவள் என்னுடன் பேசுவாளோ பேசமாட்டாளோ என்ற
சந்தேகம் வலுவாயிருந்தது. நாமே பேசுவோமென்றால் கோபித்துக்
கொள்ளுவாளோ வென்ற பயமுந் தவிர 'வீட்டிற்போய்ச் சொல்லி
விடுவாளோ? அவ்விதம் சொல்லி விட்டால் இச்செய்கை ஊரார் அனைவருக்கும் தெரிந்து விடுமே. அவ்விதம்தெரிந்து விட்டால் ஊர் நம்மை ஏளனம் செய்யுமே. தவிரவும் நமது தாசில்தாருக்கு நம்மீதுள்ள விருப்பு வெறுப்பாய்

மாறிவிடுமே இதனால் நமக்கிப்போது கிடைத்துள்ள வேலைக்குப் பங்
கம் வந்துவிடுமே' என்றெல்லாம் பலவாறாக ஆலோசித்துக் கொண்டி

ருக்கும்போதே அவள் மிகச் சமீபத்தில் வந்துவிட்டாள். அவளைப் பார்த்த உடனே என்னையறியாமலேயே எவ்விதம் என் கால்கள் நின்றனவோ, அதேபோல் அவளும் எனக்கு 2,3 கெஜத்திற்கு அப்பாலேயே நின்றுவிட்டாள். அப்பொழுதுதான் நான் அவளுடைய இயற்கையழகைப் பூரணமாய்ப் பார்க்க முடிந்தது. இலேசான அம்மைத் தழும்பு முகம். இருந்தாலும் அவ்வளவாகத் தோன்றவில்லை. வயது 13, 14 தானிருக்கும். தூயவெள்ளைத் தாவணி அணிந்திருந்தாள். அவளைச் செயற்கையழகுகள் அழகு செய்யவில்லை. ஆனால் அவளுக்குள்ள இயற்கையெழிலே அழகாயமைந்திருந்தது. எனது எளிய வாழ்க்கைக்குப் பொருத்தமுடையதாகவே தோன்றிற்று அவளிடம் இப்பொழுது எவ்விதம் எப்படிப் பேசுவது என்று தோன்றாமலிருக்கவே, நான் கற்சிலைபோல் வாளாவிருக்க நேர்ந்தது. அம்மங்கையோ என் போன்ற மிகுந்த மயக்கங்கொள்ளாது விரைந்து தெளிந்து 'மாமா, எங்கேயோ தனியே புறப்பட்டு விட்டீர்களே, என் உங்கள் சகாக்களெல்லாம் எங்கே?' என்று கேட்டுக்கொண்டே நகரத்தொடங்கினாள். பேசாப்பதுமையாயிருந்த நான் பேசாதிருந்தேன். என் இமைகள் கொட்டாதிருந்தன. அந்த சங்கீதவதனி சற்றுந் தாமதியாது சடுதியிற் சென்றாள். என் மனமும் அவளுடன் சென்றது. அதைமீட்க வலியற்ற பேதையாயினேன். அவளுடைய அந்த இரண்டு இனியவார்த்தைகள் என் செவியில் விடாதொலித்துக் கொண்டிருந்தன.

அவளுடைய நடையுடை நாகரிகங்களினின்றும் அவள் சுமார் 5 அல்லது 6 வகுப்புவரை படித்திருப்பவளென்றும், அதிகம் நாகரிகத்தை விரும்புவளல்லவென்றும் தெரிந்து கொண்டேன். எனது மனம் அவளை மிகவும் விரும்பியதுமன்றி, எனது காதலுக்கு அவளை உரித்தாக்கிற்று. எனவே மறுமுறை அவளைச் சந்திக்க அளவிலா ஆர்வங் கொண்டேன். எனது விருப்பத்தைக் கூடியசீக்கிரம் அவள்பால் தெரிவிக்க வேண்டுமாறு என் மனந் தூண்டிக்கொண்டேயிருந்தது. என் அகக்கண்களினின்றும் இந்நிகழ்ச்சிகள் அகலவேயில்லை. இதை ஆலோசனை செய்துகொண்டே வழக்கம்போல் ஆற்றங்கரைக்குச் சென்று மாலைக்கடன்களை முடித்துக்கொண்டு வீடுதிரும்பினேன். எனது வழக்கமாகச் செய்யும் வேலைகளிற் பல குழப்பங்கள் ஏற்பட்டன. ஒருவாறாக எனது வேலைகள் முடிந்துபோக, படுக்கச் சென்றேன். இரவில் எங்கணும் நீக்கமின்றி நிலவும் தூக்கம் என்பது லக்கமாய் வாரேனென்றது. அன்றுதான் என்படுக்கை படாதபாடு படும்படிப் புரண்டிருக்கிறேன். 'எப்பொழுது பொழுதுவிடியும், எப்பொழுது பொழுதுவிடியு' மென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இவ்வாறாக பலவித மனத்துன்பங்களுடனிருக்க ஒரு யுகம் போன்றிருந்த அந்த இரவு நீங்கி, ஒருவாறாக எனது மனதை சந்தோஷிக்கச் செய்யும்படி சூரியன் உதித்தது. எனினும் அம்மங்கையின் முகம் மறையவேயில்லை. எப்போதும் அம்மங்

கையைச் சந்திக்கவேண்டும் என்னும் எண்ணமே மனத்தின்கண் தோன்றிக் கொண்டிருந்தது. ஆற்றிற்குச்சென்று குளித்துவிட்டு திரும்பி வீட்டிற்கு வந்தேன். என்றுமில்லாதபடி என் அறையில் மேஜைமீது ஓர் உறையிட்ட கடிதம் இருக்கக்கண்டேன். களிப்புக் கொண்டேன். ஏனெனில் அது ஒரு மங்கையால் எழுதப்பட்டிருந்தது. உறையைக் கிழித்து கடிதத்தைப் படித்தேன். என்மனம் சாந்தியடையவோ அன்றி என்காதல் வளருதற்குச் சாதகமாகவோ உள்ள கீழ்க்கண்ட விஷயம் அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

ஸ்ரீமான் மாமா அவர்களுக்கு,

இன்று நடக்கப்போகும் என் தம்பியின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்குத் தங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

கனகம்.

நான் ஷடி விசேஷத்துக்குச் சென்றிருந்தேன் என்று நேயர்களுக்குச் சொல்ல வேண்டுவது அவசியமல்லவென்று நினைக்கிறேன். அவர்கள் வீட்டில் என்னை நன்கு உபசரித்தார்கள். நான் அன்றுமுதல் அவர்கள் வீட்டிற்குப் போவதும் வருவதுமாயிருந்தேன். நாளாக நாளாக எனது காதலும் வளர்ந்துகொண்டே போகிறது. என் மனதில் அவளைத்தான் என் வாழ்க்கைத் துணைவியாக்கிக்கொள்ள வேண்டுமென்னும் எண்ணம் வேரூன்றி வருகின்றது. என் மனதில் மட்டுமா? அம்மங்கையும் அதே நினைவுடன் அல்லலுறுகின்றாள். ஆனால்—ஆனால்—அந்தோ! எங்கள் இருவரையும் பிளவுபடுத்த ஒரு பெரிய இடையூறு குறுக்கிடுகின்றதே! அதை நினைத்தாலும் நெஞ்சம் உருகுகின்றதே! மேனி கருகுகின்றதே! அஃதென்னையெனில் 'மரபின் கொடுமை'. சாதி, மதம், மரபு, இவைகள் காதலர்களுக்கு எதிரிகளாய், எமன்களாய் இடர்படுத்துகின்றனவே. உலகத்திலேயே மனிதவர்க்கம் உண்டான இடம் தமிழகமாகத்தானிருக்க வேண்டுமென்று ஆராய்ச்சிக்காரர்களால் ஊகிக்கப்படும் அவ்வளவு பெருமை வாய்ந்த நமது தேனொழுகும் தமிழ்நாட்டிலே, 64 சதுர்யுகங்களுக்கு மேலாகக்கண்ட புராணங்களாலும், சரித்திரங்களாலும், காவியங்களாலும், பாவலர்களாலும், புகழுப்பெற்ற நமது மங்கலப் பாண்டிநந்நாட்டிலே மணமொத்த காதலர்கள் கூடியிருக்க இடங்கொடாத 'மரபுக்கொடுமை' 'சாதித்தொல்லை' குறுக்கிட்டு நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்ததுபோல் தலையிட்டிருப்பது ஒவ்வொரு தமிழ் மகன் நெஞ்சிலும் உறுத்தவில்லையா? 'காதலினால் மானிடருக்குக் கலவியுண்டாம். கலவியிலே மானிடருக்குக் கவலை தீரும், காதலினால் மானிடருக்குக் கவிதையுண்டாம், கானமுண்டாஞ், சிற்பமுதற் கவிதையுண்டாம். ஆதலினால் காதல் செய்வீர் உலகத்திரே' எனக்

கவிபாரதியார் கூறியிருப்பதை யுற்றுநோக்குமின். காதலை வளர்க்க வேண்டியதின் இன்றியமையாமையைக் கவி விளக்குவதை நன்றாய்ப் பாருங்கள். ‘காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே யின்பம்’ என மூதாட்டியார் மொழிந்துள்ள முதுமொழி, இம்மையில் நாமடையத் தக்க இன்பம் இதுவென்ன துணிவுகொள்ள இடங்கொடுக்கிறது. இதற்கு இடையூறு செய்யத்தக்க மரபின்கொடுமை நம் நாட்டிலுள்ளவரை, நாம் அடிமையே, சுதந்திரல்லோம். இது நீங்கிய நாள் எந்நாளோ, அந்நாளே நன்னாள். அதுவே நந்நாள்.

நிற்க, நாங்களிருவரும் பிராமணர்கள்தான். ஐயர், ஐயங்கார் என்ற இவ்வளவு வித்தியாசமேதான். இதற்குட்பட்ட இந்தப் பிளவை யுற்றுநோக்குமிடத்து ஏனைச்சாதிகளைக் குறித்து எப்படி யோசிப்பது? எங்கள் கிராமமோ முதலில் கூறியபடியுள்ள கட்டுப்பாடுடையது. ஊரைமீறி இஷ்டம்போல் நாங்கள் கலியாணம் செய்து கொள்ளவும் முடியாது. எங்கள் வீட்டிலும் பெற்றோர் சிறிதும் இடங்கொடுக்கமாட்டார்கள். இந்தப் பயங்கரமான ஒடுக்கமான நிலைமையிலுள்ள நான், எனது காதலியை அடைய எண்ணுவது எவ்வளவு பேதமையென்று நினைத்து தள்ளிவிடலாமென்றாலோ, சிறிதும் திரும்ப முடியாதபடி அவ்வளவு பலமாக எனது காதல் விதை முளைத்து வேரூன்றி விட்டது. ஆனால் எங்கள் கதி அதோ கதிதானோ? எங்களுக்கு எங்களது மனதைப் பூர்த்தி செய்விக்க இறைவன் அருள்புரியாரோ? இந்த மரபின் கொடுமைதான் சிறிது சிறிதாக மாறக்கூடாதா? எங்கு மாறினாலும் எங்கள் கிராமத்தில் இந்த மரபுக்கொடுமை மாறுவதற்குச் சுமார் 10, 15 வருஷங்களாகுமென்று நினைக்கிறேன். அதுவரை பொறுத்து மணஞ்செய்து கொள்ளுவதோ நினைக்கமுடியாத விஷயம். ஐயோ! ஐயா! என்செய்வது? வெளியே வேறு ஊர்களுக்குச்சென்று காதல் மணம் புரிந்து இன்புற வாழ்வோமென்றாலோ, அதிகம் கற்றவர்களல்லேம், கைத்தொழில் தெரிந்தவர்களல்லேம், பணமுடையவர்களல்லேம். ஆ! மரபுக் கொடுமையே! நின் சக்திதான் என்னே! வலிது, வலிது! நினது ஆற்றல்!! எதுவரை யிருக்கிறதென்றறிகிலேனே, நினது கொடுமை தீரும்வரை, நாட்கள் கொடுமையாகவே கழிகின்றனவே. இறைவா! தமிழ்த்தாயே! வந்தனம். உன்னிடத்தே நிகழ்ந்ததை ஒப்புவித்தேன். எப்படி விடுகின்றாயோ, அப்படியே நடக்கச் சித்தமாயிருக்கின்றேன். மரபின்கொடுமை எனத்தலைப்பட்டு, கொடுமையான நிலைமையிலேயே நிறுத்தப்பட்டிருப்பது எனது துர் அதிர்ஷ்டமென்று நிறுத்திக் கொள்கிறேன்.

ஸ்ரீ கனககாந்தா அல்லது
மனைவியை மணந்த மணமகன்

[C. M. நடேசன்]

ஏனடி! நான் சொல்லி எந்நேரமாயிற்று, இன்னஞ் சமையலாகவில்லையா! மூதேவிப் பிணமே! உன்னைக் கொண்டுவந்ததைவிட சேரியிலிருந்து கொண்டு வந்திருந்தால் எவ்வளவோ மேன்மையாயிருக்குமே. நான் சொல்வது ஒன்றானால் நீ செய்வது ஒன்று. ஒவ்வொன்றுக்கும் ஏடாகூடந்தான், எவ்வளவு செய்ய வேண்டுமென்றிருக்கிறாயோ, அவ்வளவுஞ் செய். சொல்லுமிடத்தில் சொன்னால் தேள் கொட்டின விஷம் இறங்குவதைப்போல் இறங்கிவிடுகிறது. ஆகட்டும்.........' என்று கர்ஜனை செய்து அவ்விடம் விட்டகன்றாள் அம்சபூரணம்மாள்.

'ஹா! இதுப் என் வினைப்பயனேயாகும். 'வெந்ததை தின்று வந்ததைப்படு' என்பதைப்போல எல்லாவற்றையும் அனுபவித்தே தீர வேண்டும். மாமியாரை, அதிலும் என்னன்பு நிறைந்த அத்தையை நொந்து கொள்வதில் பிரயோஜனமில்லை. நான் வீணே நின்று யோசிப்பதில் என்ன பலன்? நாயகன் ஆபீசுக்குப்போக நேரமாகிவிட்டது. சீக்கிரஞ் சமையலாக வேண்டு'மென்று பரபரப்பாய் வேலை செய்ய ஆரம்பித்தாள் கணவனுக்கினிய காரிகை காந்தாமணி.

'கண்மணீ காந்தா! சமையலாகி விட்டதா! ஆபீசுக்குப் போக நேரமாகிவிட்டதே! அம்மா எங்கே?' யென்று வெகு சாந்தமாக கேட்டான் ஸ்ரீ சந்த்ரபாலன்.

'அம்மா அடுப்பங்கறையை காவல் காத்திருந்தால் போதுமா? வேலையெல்லாஞ் சீக்கிரத்தில் முடிந்துவிடும். வேறு வேலை இல்லைபோலிருக்கிறதே! நானுங் காலையிலிருந்து தொண்டை நோக கத்திகினுதானிருக்கேன். அதைக் காதில் போட்டுக் கொண்டால்தானே! தலை சீவிக் கொள்வதும், ஸ்நானஞ் செய்வதும், சேலை உடுத்திக்கொள்வதும் பொட்டிட்டுக் கொள்வதும், தன்னழகைப் பார்த்துக்கொண்டு வீட்டை சுற்றிசுற்றி வருவதுமாயிருந்தால், நீ ஆபீசுக்குப் போவ

தற்குள் இலையில் அன்னம் வந்துவிடும்' என்று ஆரவாரித்து கை நீட்டிப் பேசினாள் அவனைப் பெற்ற அம்ச பூரணியம்மாள்.

'அம்மா! சமையலாய் விட்டதாமே. கவனிக்கவில்லை போலிருக்கு. நீ தெரிந்து கொள்ளாமலே கூச்சல் போட்டு பேசுவது நல்லதல்ல, நாலு பேர் பார்த்தால் நம்மை கேலி செய்ய மாட்டார்களா!' என்றான் அம்மாது பயந்த ஸ்ரீ சந்த்ரபாலன்.

'ஏனடா! தலையணைமந்திரம் தலைக்கேறி விட்டதா! சரி நானும் பார்த்து வந்தேன். இதுவரையில் இம்மாதிரி காணோம். இனி புதுசு புதுசாகத் தகினுவா அதை கேட்டுகினு என்னை காலாலுதைத்து தள்ளித்தான் விடுவாய். நான் அண்டுவதற்கு இடமில்லாமல் நடுத் தெருவில் நிற்க வேண்டியதுதான். சரி சரி, உன்னிஷ்டப்படி நட. உன் மனைவி சந்தோஷத்துடன் கஞ்சி வார்த்தால் வார்க்கட்டும். இல்லாவிடில் நாலு வீடாச்சு குசவன் ஓட்டாச்சு' என்றாள், நமது அம்சம்.

'அம்மா! நான் என்ன சொல்லிவிட்டேன். ஏன் என்மீது இவ்வளவு கோபம்? எப்போது பார்த்தாலும் உனக்கும் அவளுக்கும் ஆவதில்லை. இது உலக இயல்புதான். உங்களை நோவதிற் பயனில்லை. சரி, உங்கள் இஷ்டம் நீங்கள் எப்படியாவது தொலைந்து போங்கள். எனக்கு நேரமாகிவிட்டது' என்று போஜனம் முடித்துக்கொண்டு ஆபீசுக்கு சென்று விட்டான் ஸ்ரீ சந்த்ரபாலன். இவ்விதமாகச் சில நாட்கள் சென்றன.

ஓர் நாள்....'ஏனடி, இன்னமா தூங்க வேண்டும். குளிருகிறதென்று போர்வை போட்டுக்கொண்டு கதவை திறக்காமல் படுத்துக் கொண்டிருந்தால் வேலையாவது எப்படி? சூரியனும் உதையமாய் 2 நாழியாயிற்றே' யென்று வெகு கோபத்துடன் கதவைத் தடாலென காலாலுதைத்துத் திறந்தாள் அம்சம். படுக்கையில் காந்தாவைக் காணோம். 'பையா! காந்தாவைப் பார்த்தாயா! எங்குச் சென்றாள்' என அங்கும் இங்கும் அக்கம்பக்கமும் பார்த்தாள். காந்தாவைக் காணாமையால் ஒருவாறுயிருந்தாள்.

'அம்மா! காந்தாவைப் தேடிப்பார்த்து அழைத்துவா' என்றான். மகன் 'எனக்கு அதுதானடா வேலை. அக்கறையானால் நீபோய் பார்.

அவள்போகும் இடம் எல்லாம் அவள் முந்தாணியைப் பிடித்துக் கொண்டு போகட்டுமா! போனவள் தானாகவருகிறாள். வாராமல் ஒழிந்துவிட்டால் நான் பாலுஞ் சோறுந் தின்பேன். சனியன் விட்டதெனை சந்தோஷமாய் காலம் கழிப்பாய். நேரமாவிட்டது. நீ ஆபீசுக்குப் போய்வா' என்றாள் தாடகைக்கு ஒப்பிடக்கூடிய தாயார் அம்சபூரணி.

'அம்மா! அவளில்லாத வீடு அழகாயிருக்குமா!' என்றான் புதல்வன். 'இருக்கும் அழகேபோதும், உன்னிஷ்டப்படி அவளைக்கொண்டு வந்ததால் இவ்வளவு அவமானம். நீ ஆபீசுக்குப்போ' என்றாள் அவன் மாதா. தாயார் சொற்படி தவறாமல் தினம் ஆபீசுக்கு சென்றுவந்தான். பன்னாள் பறந்தன. வருடம் இரண்டாயின.

'அப்பா! தினந்தோறும் மாலை 5½-மணிக்கெல்லாம் வீடுவந்து விடுவையே. இப்போது 7-மணிக்கு வருகிறாயே, காரணம் யாது!'

'அம்மா! எங்கள் ஆபீசில் ஒரு புதிய மானேஜர் வந்திருப்பதால் அவர் வேலைகளை முடித்து புறப்பட்டபின்தானே நாங்கள் வரவேண்டும். அவர் ஆபீசில் இருக்கும்போது நாங்கள் வரலாமா? இதனால் தான் நேரமாகிறது. வேறென்ன இருக்கு' என்றான் ஸ்ரீசந்த்ரபாலன்.

மறுநாள் மாலை சுமார் 5-மணிக்கு ஓர் மாளிகையின் மேல்மாடியில் ஒரு வாலிபனும் ஒரு யௌவனமங்கையும் தனித்து ஆனந்தத்துடன் பேசிக்கொண்டிருக்கும்போது,

'நாயகி! நேற்று என் தாயார் நான் நேரஞ்சென்று செல்வதால் சந்தேகப்பட்டு எனப்பா நேரம்சென்று வருகின்றாய் என்றாள். ஆபீசில் அதிக வேலையென சமாதானஞ் சொல்லிவிட்டேன். உனக்கு பல விஷயங்களைச் சொல்லி இப்பெரியாரிடம் விட்டுவிட்டேனல்லவா! அவரும் உன்னை மகளாக பாவித்து காப்பாற்றிவருகிறார். உன்மனம் குதூகலிக்க நானும் தினமும் வந்துபோகிறேன். சீக்கிரத்தில் உன்னை என் தாயார் மூலமாகவே மணஞ் செய்துகொண்டு நம் இல்லத்திற்கேக வழிசெய்கின்றேன்' என்றான் கதாநாயகிக்குற்ற காதலன்.

'நாதா! தங்கள் இஷ்டத்திற்குமாறாக நடப்பவள் நானா' என்றனள் கதாநாயகி. விடைபெற்றேகினான் ஸ்ரீசந்த்ரபாலன்.

'அம்மா! தங்கள் குமாரன் என்ன வேலையிலிருக்கின்றான்.

ஆபீசில் மாதம் 50] ரூபாய் சம்பளத்தில் குமாஸ்தாவேலை பார்க்கிறான்' என்ன வயதிருக்கும்?—வரும் ஆவணியோடு 22 வயதாகிறது. கலியாணஞ் செய்துவிட்டாயா?

'கலியாணம் நடந்தது பெண்ணுக்குச் சரிப்படாமல் தாய்வீடு சென்று இரண்டாண்டாயின' 'மறுபடி சென்றழைத்து வரவில்லையோ!'

'பையன் போய்வந்தான். வாழ்க்கைக்கு உரியவளாகாவென்று சொன்னான்.'

ஓ! ஓ!! அப்படியா! மறுவிவாகஞ்செய்ய ஒரு யோசனையுமில்லையோ!

'இவ்வருடஞ்செய்ய யோசனைதான். நமது குடும்பத்துக்கேற்ற மாதை பார்த்து வருகிறேன். எங்குஞ் சரிப்படவில்லை. என் தம்பி ஒருவனிருந்தான். அவன் நெடுநாளைக்கு முன் சிங்கபூர், பினங்கு தேசத்திற்கு வியாபார நிமித்தமாய் போய்விட்டான். அவனிங்கிருந்தால் சொந்தமாய் அவனிடபெண்ணை என் பிள்ளைக்கு கட்டிக்கொள்வேன். அவனும் தாமாட்டேன் என்று சொல்லமாட்டான். காலபலன் என் செய்வது? இருக்கட்டும், தங்களுக்கு எத்தனை குழந்தைகள்?' 'எனக்கிரண்டு குழந்தைகள். மூத்தவளுக்குப் பதினாறும் இளையவளுக்கு 12ம் பூர்த்தியாயிற்று.'

'இரண்டுக்கும் விவாகம் முடித்துவிட்டீரோ!'

'இன்னம் இல்லை. பெரிய குழந்தைக்கு இப்போது முடிக்க யோஜனை. சின்னதுக்கு அடுத்த வருஷம் பார்ப்போம் என்ற யோசனை.'

'மருமகன் எங்கேயோ?'

'எத்தனையோ பேர்வந்து கேட்டார்கள். சம்மதமில்லை என்று சொல்லிவிட்டேன். உன்னோடு வார்த்தையாடலாம் என வந்தேன்'

இச்சமயத்தில் 'ஆபீசிலிருந்து ஸ்ரீசந்த்ரபாலன் வந்துவிட்டான், 'இவர்தானோ! உனது மகன்' ஆமாம்—'அப்பா! உனது தகப்பனர் பெயரென்ன'

ஸ்ரீபாலகேஸரி—ஓ! ஓ!! அவரா.

இதற்குமுன் தெரியுமோ!

'என் தெரியாமல் என்ன! நான் தெரியவில்லையே உங்களுக்கு தெரியாது.'

என்பெயர் ஸ்ரீ சங்கரபாலனல்லவா!

'ஓ! ஹோ!! ஹோ!!! சங்கரா! நீயோ! வா! வா!!' என்ற சந்தோஷத்துடன் 'யாரோ! வென்றல்லவா இருந்தேன். முதலிலேயே தெரியாமற் போயிற்று'

'சந்த்ரா! இவன் உனது மாமனடா. இத்தனை நாளாய் வியாபார விஷயமாய் குடும்பத்தோடே உங்கப்பா இருக்கும்போதே ஜலப்பிரதேசமான சிங்கப்பூருக்குப் போய்விட்டான். தபாலே போடுவதில்லை.

நானும் மறந்துவிட்டேன். இன்றுதான் கடவுள் கண்திறக்கச்செய்து வழிகாட்டினர்.'

'சங்கரா ! சமையலாயிற்று எழுந்திரு, சாப்பிடலாம். உனது மனைவியுங் குழந்தைகளும் வந்திருக்கிறார்களா ?'

'வந்திருக்கிறார்கள். இந்த தெருக் கோடியில்தான் ஒரு பங்களா வாங்கி அதில் குடி இருக்கின்றோம். சந்திரனை அநேகந்தரம் பார்த்திருக்கிறேன்'

'அவ்வழியில்தானே அவன் ஆபீசுக்குப் போகவேண்டும். சரி நல்லது.'

'இதுதானு உனது பங்களா! சரி குழந்தைகளை கூப்பிடு.'

'கனகா! உன்னைப் பார்க்க உனது அத்தை வந்திருக்கிறாள். இங்குவா!'

'அப்பா! இவர்களா! எனதத்தை. நான் இத்தனை நாளாக பார்க்கவில்லையே! நீங்களும் அத்தை இருக்கிறார்கள் என்று இதுவரையில் எனக்குச் சொல்லவில்லையே!'

'கனகா ! போனது போகட்டும். இனி சந்தோஷம்தானே. இனிமேலென்ன.'

'எனது அருமை மருமகளல்லவா நீ.'

(புன்னகையுடன்) 'ஈசன் அருளினல் இருக்கலாம்.'

'தம்பி! இதுவரையில் நாம் காலகதியால் பிரிந்திருந்தோம். ஈசன் அருளால் ஒன்றுகூடினேம். இவ்வொற்றுமை நீடித்திருக்க சகல நற்குணங்களுக்குமிருப்பிடமாகிய கனகாவை சந்திரனுக்கு கொடுத்து மணம் முடித்து வைப்பது உனது கடமை' 'அக்கா! அவசியந்தான். ஆனல்........'

'என்ன ஆனல்'

இரண்டாந்தாரமா யிருப்பதைப்பற்றி கவலை இல்லை. பையனுக்கும் இளம்வயதுதான், படித்திருக்கிறான். உத்தியோகஞ்செய்கிறான். குடும்பத்திற்கு ஏதோ தக்கபடி சம்பாதிக்கிறான் அழகுடையவனுகவும் இருக்கிறான். அவைகளில் ஒன்றுங் குறைவில்லை. உன் மகனுக்கு பெண் கொடுக்கிறதில்லை என்று சொல்வதற்கு என்மன துடன்படவில்லை. பெண்ணும் உங்களுடையது. முன் மனைவிபோல்.........

'ஐயையோ! அந்த சனியனை நினைக்காதே! அதைப்போல இதை நினைப்பேனு! ஒருக்காலும் நினையேன், நினையேன். என்னருங் கனகாவை என் குழந்தையைப் போலல்லவா பார்த்திருப்பேன்.

அவன் வேலை செய்யப் பார்ப்பேனு' எனக்கென்ன வேலை? என் மகனும் என் மருமகளும் சந்தோஷமா யிருப்பதைப் பார்ப்பதுதான் என் கண்கள் செய்த புண்ணியம்'

'சரி, அடுத்தவாரம் முகூர்த்தத்தை முடித்துக் கொள்ளுங்கள்' என்று சந்தோஷத்துடன் சொன்னர் ஸ்ரீ சங்கரபாலன். குறித்த நாளில் கனகவல்லிக்கும், ஸ்ரீசந்த்ரபாலனுக்கும் அம்மாளிகையி லேயே ஆடம்பர விநோத வேடிக்கை வெகு வைபவங்களுடன் விவாகம் நடந்தேறிற்று.

* * *

ஓர்நாள் மணமக்களிருவரும் தனியறையில் அமர்ந்து வார்த்தை

யாடிக் கொண்டிருக்கும்போது கையில் காபியுடன் அவ்வறையில் நுழைந்து 'கனகா' காப்பி சாப்பிட நேரமில்லையோ. இதோ இருவரும் அருந்துங்கள்' என்று மேஜை மேல் வைத்துவிட்டகன்ருள் அம்சபூரணியம்மாள்.

'நாதா! தாங்கள் செய்த சூட்சியும், அப்பெரியார் உங்கள் அம்மாளைப்போல நடித்ததும், என்னை புத்திரிபோல் பாவித்து காப்பாற்றி உங்கட்கு விவாகஞ் செய்து கொடுத்ததும், விந்தையிலும் விந்தையே. மெச்சத் தகுந்தது.'

'ஆமாம், நீயும் உனது பெயரை மாற்றி வேறு பேர் புனைந்து அதற்கேற்றவாறு நடந்து கடுகடுத்த வார்த்தையுடைய மாமியாரை காபி கொண்டுவந்து கொடுக்கும்படி செய்துகொண்டது அதிசய மல்லவா' என்றனன் பாலன்.

இவர்கள் இன்புற வாழ்க்கை நடத்தி 2 ஆண் குழந்தைகளும் 2 பெண் குழந்தைகளையும் பெற்று சுகபோக வாழ்வில் வாழ்கின்றனர்.

* * *

மாமியாருக்கும் மருமகளுக்கும் முரண் உண்டானல் நீங்களும் மேற்சொல்லிய ஸ்ரீ சந்த்ரபாலன்—காந்தாவைப்போல் செய்து பரிட்சித்துப் பாருங்கள்.

தொழிலாளியின் துயரம்

[S. S. V. சத்தி]

பகல் உச்சிவேளை. வைகாசி மாதம். பரிதியோ இப்பூவுலகையே பஸ்மீகரிக்கும் பான்மையுடையான்போல் தன் கடூரமான கிரணங்களை நிர்தாக்ஷண்யமாக இப்புவியிலுள்ள சகல ஜீவராசிகள்மீதும் பாரபக்ஷமின்றிப் பிரயோகிக்கின்றான். வெய்யோனின் அக்கினிமயமான வெப்பத்தைத் தாங்கொணாது மிருகங்களும், பறவைகளும் தத்தம்செயல் மறந்து குளிர்ந்த இடங்களை நாடுகின்றன. செல்வம்மிக்க சீமான்களோ தத்தமது வஸந்தமாளிகைகளிலமர்ந்து மின்சார விசிறிகளின் உதவியால் வெப்பத்தை தணித்து இன்பம் அனுபவிக்கின்றனர். பாமரமக்களும் அவரவர் சக்திக்கு கந்தாற்போல ஆதித்தனது ஆட்சியினின்றும் தம்மைமீட்கும் வழிகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இவ்விதமான சமயத்தில் ஊரை அடுத்த சாலையின் ஓரத்தில் ஏழை ரங்கன், அரையில் ஒரு கோவணத்தைத் தவிர மற்றெவ்வித ஆடையுமின்றி, உடல் முழுவதும் வியர்வையால், நினைய நெற்றி வேர்வை பூமியில் சொட்டு சொட்டாக விழ, கதிரவனின் கடுமையையும் பொருட்படுத்தாது தனது எஜமானனாகிய ரோடு கண்ட்ராக்டர் சிந்தாமணிப் பிள்ளையின் கட்டளைப்படி கற்களை உடைத்துக் கொண்டிருக்கின்றான். சற்று தூரத்திலுள்ள ஒரு சிறு மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் தொட்டிலில் ஐந்து நாட்களும் பூரணமாக நிறம்பப் பெறாத பச்சிளங்குழந்தை வெயிலின் கொடுமை தாங்காது மயங்கித் தயங்குகின்றது. அத்தொட்டிலைச் சேர்ந்தாற்போலத் தரையில் குழந்தைப் பிரவத்தினால் மிகவும் பலவீனமடைந்து எழுந்திருக்கவும் சக்தியற்று, சரியான உணவில்லாததினால் திரேகம் மிகவும் மெலிந்து, எலும்புந் தோலுமாய் தலையில் கிடக்கின்றாள் ரங்கனது மனைவி. அவனது இருபாலர்கள் உண்பது, உறங்குவது, விளையாடுவது என்னும் இம்மூன்று கொள்கைகளைத் தவிர்த்து மற்றெவ்வித சுக துக்கங்களும் இவ்வுலகத்தில் அறியாதனராகி, மூன்றாவது கொள்கையாகிய விளையாட்டுத் தொழிலில் ஈடுபட்டு சற்று தூரத்திலிருந்த ஒரு பாறையின் நிழலில் மண்ணால் வீடுகட்டிக்கொண்டு விளையாடிக்

கொண்டிருக்கின்றனர். தவிரவும் சில நாட்களுக்கு முன்பு ஓர் கிணற்று வேலை செய்துகொண்டிருக்கையில், அக்கிணற்றிலுள்ள பாறைகளைப் பெயர்க்கும் பொருட்டு உபயோகித்த வெடிமருந்து விபத்திற்குட்பட்டு இருகண்களையும் ஒரு கையையும் இழந்து, எவ்விதத்திலும் உய்யும் வழியில்லாது, ரங்கனது தம்பி ஓர் புறமாக உட்கார்ந்துகொண்டு தனது நிலைமையை நினைத்து துக்கித்துக்கொண்டிருக்கின்றான். இவ்வித குடும்பத்தின் பாரமரிப்பு ரங்கன் ஒருவனது வருவாயைக்கொண்டே நடந்தேறவேண்டும்.

ரங்கன் தனது வேலையில் ஈடுபட்டிருந்தவன் கைதவறுதலாக கல்லை உடைத்துக்கொண்டிருந்த சுத்தியைத் தன் கைவிரலின்மீது போட்டுக்கொள்ளவே, அடிபட்ட விரல் நசுங்கி, அதிலிருந்து இரத்தம் பீறிட்டு வெளிவந்தது. விரலில் உண்டாகும் பாதைதாளாமல் உடனே தன் இருக்கைவிட்டெழுந்து தன் கோவணத்தின் நுனியில் சிறிது துணியைக்கிழித்து தனதருகிலிருந்த கலயத்திலுள்ள ஜலத்தில் நனைத்து அத்துணியை காயம்பட்ட விரலில் சுற்றினான். இச்சமயத்தில் தொட்டிலில் உறங்கிக்கொண்டிருந்த இளம் குழவி பசியினால் தூக்கந்தெளிந்து வீறிட்டு அழ ஆரம்பிக்கவே, ரங்கன் ஓடோடியும்சென்று அக்குழவியைக் கையிலெடுத்தான். அதன் வயிறோ ஆகாரமில்லாதலால் உள்சுருங்கி முதுகெலும்போடு ஒட்டிக்கொண்டிருக்கிறது. மனைவியை எழுப்பிப் பால்கொடுக்கச் சொல்லலாமென்றாலோ பஞ்சத்தினாலடிபட்டு எலும்பும் தோலுமாய் இரோகத்தில் இரத்தவோட்டமே இல்லாதிருக்கும் அவளிடமிருந்து குழந்தை எவ்வாறு பால் பெறமுடியும்? செய்வகை அறியாது விழிக்கின்றான். இச்சமயத்தில் விளையாட்டி லீடுபட்டிருந்த குழந்தைகள் பசியினால் பீடிக்கப்பட்டு தம் தகப்பனிடம் ஓடிவந்து, 'அப்பா வயிறு ரொம்ப பசிக்கிறது. எங்களுக்கு சாதம்வேணும்' என்று கதறுகின்றன. எவ்வித சமாதானத்திற்கும் குழந்தைகள் இணங்கவில்லை. என் செய்வான் பாவம்! தன் நிலையை எண்ணினான். கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோட ஆரம்பித்தது. 'ஜெகதீசா! நான் ஏன் இச்சன்மம் எடுக்க வேண்டும்? நான் ஆறறிவுள்ள மனிதனாகப் பிறந்தும், கேவலம் மிருகங்களின் வாழ்க்கைக்கும் கேவல ஸ்திதியடைந்தேனே. சம்சாரம் என்னும் சாகரத்தினின்றும் நீந்திக் கரையேற மார்க்கமறியேனே. என் குடும்பத்தை காப்பாற்ற வகையற்று திகைக்கின்றேனே. உலகில் பலர் தங் ளிடமுள்ள திரவியத்தை சன்மார்க்கத்தில் செலவழிக்கும் வகையறியாது, திகைத்து கண்டபடி செலவுசெய்ய, நான் எனது அருமைக் குழந்தைகளின் பசிப்பிணியைப்போக்க வழியறியாது திகைக்கின்றேனே. ஒரு குழந்தையின் பொருட்டு காசி முதல் ராமேஸ்வரம் வரையிலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரி

சித்து அநந்தகோடி தானதருமங்கள் செய்தும், ஒரு பிள்ளைப்பேறு வது அடையப்பெறாத செல்வச்சீமான்களின் வயிற்றில் ஜனிக்காமல் நித்தியதரித்திரனாகிய என் வயிற்றிலா இவர்கள் பிறக்கவேண்டும்? என் அருமைக் கண்மணிகள் அச்செல்வந்தர்களின் மாளிகைகளில் பிறந்திருந்தால் எவ்வித சுகபோகங்களுக்கிடையில் திகழ்வார்கள்? அப்படிக்கின்றி என்வயிற்றிற் பிறந்து கால்வயிற்றுக் கஞ்சிக்கும் வகையின்றிக் கதறுகின்றனரே. ஐயோ! நான் பிறந்த உடனே இறந்திருக்கலாகாதா! உலகத்தில் கஷ்டம், தரித்திரம் என்பவைகள் என்னிடமிருந்துதானா புறப்பட்டன? நான் ஒருவன் பிறந்திருக்கா விட்டால் இப்பூமி என்ன கஷ்டமடைந்திருக்குமோ எனக்கு விளங்கவில்லையே! ஹோ! ஈசா! இப்பச்சிளங் குழவியின் பசியை ஆற்ற நான் எதுசெய்வேன்? காலை 6-மணி முதல் மாலை 6-மணி வரையில் ஓடாது வேகும்வெய்யிலில் கஷ்டப்பட்டு வேலை செய்தால் என் எஜமானர் கொடுக்கும் அன்றைய கூலியாகிய ஐந்தணாவைக்கொண்டே இவ்வளவு பெரிய குடும்பத்தையும் நான் போஷிக்கவேண்டும். என் மனைவியோ மிகவும் பலவீனமாக இருக்கின்றாள். அவளை நான் சரிவர கவனிப்பதற்கும் அவகாச மில்லாததினால், அவளது உயிருக்கே ஹானி ஏற்படும்போல இருக்கின்றதே! நான் அவளைப் பாதுகாத்து, அவள் தனது உடல் நலம்பெற்று என்னுடன் வேலை செய்து கூலிசம்பாதிக்க, இன்னும் அநேக நாட்கள் செல்லுமே. என் தம்பியோ தனது காளைப்பருவத்தில் கண்களையும், கையையும் இழந்து தவிக்கின்றானே. ஐயோ எனது விதியை நினைந்து வருந்துவேனா! என் தம்பியின் நிலைமையைக் கண்டு கலங்குவேனா! ஹோ! பரம்பொருளே! கால்வயிறு கஞ்சாகிலும் மனத்திருப்தியுடன் குடிக்க நாங்கள் கொடுத்து வைக்கவில்லையா? ஒருநாள் முழுதும் உழைக்கின்ற உழைப்பால் சம்பாதிக்கும் இவ்வற்ப ஐந்தணாவைக் கடைக்கு எடுத்துச்சென்று ஒன்றுக்கு இரண்டாக விலைகொடுத்து சாப்பாட்டுக்குச் சாமான்கள் வாங்கி நானே சமைத்து, என் குடும்பத்தார் அனைவருக்கும் ஊட்டி, மீதி இருப்பதை நான் அருந்துகின்றேன். அவ்வொரு வேளை இரவு சாப்பாட்டைத் தவிர பகலில் சாப்பாட்டின் ருசியைக் கண்டதுண்டா? இம்மேட்டாங்காட்டில் ஒருவாய் தண்ணீர் குடிக்க வேண்டுமென்றாலும் அரைமைலுக்குக் குறையாமலாவது சென்றால் தானே தண்ணீர் கிடைக்கும். சகலத்திற்கும் நான் ஒருவனே உழ. வேண்டுமென்றால் என் தேகம்தான் எவ்வளவுகாலம் உரம் கொண்டிருக்கும்? நிற்பதற்கு நிழல் உண்டா? இருப்பதற்கு இடமுண்டா? இக்காட்டிலுள்ள மரங்களின் நிழல்களே எங்களுக்கு வீடுகளாக அமைந்தனவே! இவ்வளவு கஷ்டங்களையும் பொறுத்துக்கொண்டு நான் ஏன் உயிருடன் வாழவேண்டும்? எங்கள் தலைமீது, நிமிர்ந்து நிற்கும் இம்மரம் வேரோடுசாய்ந்து, எங்களனைவருடைய துயரையும் போக்கக்கூடாதா? பாழுந்தெய்வமே! இக்குழந்தைகளின் பரித

விப்பைக் கண்டாவது உன்மனம் இரங்கலாகாதா? நான் கதறுவது உன் செவிகளில் விழவில்லையா?' என்று பித்தங்கொண்டவன்போல பிதற்றிக்கொண்டு தன் குழந்தைகளின் முகங்களைப் பார்த்துப் பரிதவிக்கின்றான்.

இஃது இவ்வாறிருக்க, நமது கண்டிராக்டர் ஈயாபித்தப் பிள்ளையைப்பற்றிச் சிறிது கவனிப்போம். பிள்ளையவர்கள் இளம்பிராயம் முதற்கொண்டே கண்டிராக்ட் தொழிலில் ஈடுபட்டு ஏழைக் கூலிகளின் எலும்பொடிய வேலைவாங்கி தனவந்தரானவர். உணவு உறக்கம் முதலியவைகளையும் பொருட்படுத்தாது பணத்திற்காக உழைப்பவர். இப்பேர்க்கொத்த மகான் சம்பிரமாகப் பகல் போஜனத்தை முடித்துக்கொண்டு மோட்டார்காரில் ஏறி, ரோட்டில் கூலிகள்வேலை செய்வதைப் பார்வை இடும்பொருட்டுப் புறப்பட்டு ரங்கன் இருக்குமிடத்தை அடைந்தார்.

அச்சமயத்தில் ரங்கனே தனது வருத்தத்தை சிறிது போழ்து மறந்து இளங்குழவியுடன் கொஞ்சிக் கொண்டிருக்கின்றான். இதை தூரத்திலிருந்தே பிள்ளையவாள் பார்த்துக் கொண்டார். தனது ஏவலின்படி வேலை செய்யாமல் குழந்தையுடன கொஞ்சிக் கொண்டிருப்பதைப் பார்க்க, அவரது மனம் தாளவில்லை. உடனே அருகில் வந்து 'டேய்! ரங்கா!' என்று கர்ஜித்தார். மத்தியானத்தில் தனது எஜமான் அவ்விடம் வருவாரென்று சிறிதும் எதிர்பாராத ரங்கன், அவரது குரலைக்கேட்டதும் நடுநடுங்கினான். திரும்பிப்பார்த்தான். எஜமானது கண்களிலிருந்து கோபத்தணல்கள் கிளம்பின. ரங்கனது உடல் பயத்தால் ஜில்லிட்டுவிட்டது. 'என்டா! கால்வயிறு கஞ்சிக்கும் வகையில்லாத கழுதைக்கும் வருஷத்திற்கொரு குழந்தைக்கு குறைச்சலில்லை. நான் தண்டத்திற்குக் கொடுக்கும் கூலியல்லவா, உனக்குக் கொழுப்பேறி வேலைசெய்யாமல் நிழலில் குந்திக்கொண்டு குழந்தையுடன் கொஞ்சிக் கொண்டிருக்கின்றாய்? எவ்வளவு காலமாக இவ்விதமாக வேலைசெய்யாமல் குந்திக்கொண்டு என் பணத்தை ஜீர்ணிக்கின்றாயோ தெரியவில்லை? இன்று நான் இவ்வசந்தர்ப்ப வேளையில் வந்ததினாலல்லவா உன்னுடைய நடத்தை தெரியவந்தது. நாயே!' என்று தாறுமாறாகத் திட்டினார். தமது பூட்ஸ் காலால் எட்டி ரங்கனை உதைத்தார். அவரது உதை ரங்கனது உயிர் நிலையில் பட்டதால் அவன் வேரற்ற மரம்போல பூமியில் விழுந்தான். அடுத்த நிமிடம் அவனது ஆன்மா சாந்தி அடைந்தது.

நிகழ்ந்ததை அறிந்த பிள்ளையவாள் பயத்தால் பீடிக்கப்பட்டு உடல் நடுங்க, உடனே யாருமறியாவண்ணம் தமதில்லமடைந்தார்.

செல்வந்தர்கள் செயலுக்குக் கேள்வியேது? சாக்ஷி சம்மந்தம் யார்? செல்வம் ஒன்று உண்டானால் அனைத்தும் அதற்குள் அடக்கம்.

வளம்மிக்க வாசகர்காள்! நீவிர் யாரேனும் அவ்வழியேகின் அநாதரவாக காட்டில் உய்வகை யறியாது பசியினால் பரிதவிக்கும் ரங்கனது நாதியற்ற குடும்பத்தைக்கண்டால், அநுதாபம் கொள்க.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால்
தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும்
கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. சு. குமாரசாமி முதலியார்,
80, பெரிய மணியக்கார தெருவு, செங்கல்பட்டு.

லெக்ஷ்மணஞ்சனம் டிப்போ,
புதுவயல், (இராமநாதபுரம் ஜில்லா)

லங்கா குரோஸரி ஸ்டோர்,
செட்டித் தெரு, கொழும்பு.

தி. ஞானப்பிரகாசம்,
122, மோகல்வீதி, ரங்கோன்.

வி. சா. காசி செட்டியார்,
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,
19, ஜடாமுனி கோயில் தெரு, மதுரை.

A. N. லெட்சுமணன் செட்டியார்,
வலம்புரி. வலையபட்டி
பொன்னமராவதி போஸ்டு, புதுக்கோட்டை ஸ்டேட்.

A. V. R. A. ADYCAPPA CHETTYAR
Lalji Mansing Building, 1st Floor,
Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.